


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com




CHENNAI | Volume- 3 | Issue:142 | 07-12-2025 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

07.12.2025 கார்த்திகை 21
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.17

திதி:
இன்று அதிகாலை 1.14 வரை துவிதியை பின்பு இரவு 11.23 திரிதியை பின்பு சதுர்த்தி

நட்சத்திரம்:
இன்று காலை 10.41 வரை திருவாதிரை பின்பு புனர்பூசம்.

யோகம் :
இன்று அதிகாலை 3.54 வரை சுபம் பின்பு சுப்பிரம்.

கரணம் :
இன்று அதிகாலை 1.14 வரை கரசை பின்பு பிற்பகல் 12.19 வரை வணிசை பின்பு இரவு 11.23 வரை பத்திரை பின்பு பவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று காலை 10.41 வரை அனுஷம் பின்பு கேட்டை

நல்ல நேரம்
காலை 7.45 – 8.45.
மாலை 3.15 – 4.15.

இராகு காலம்
மாலை 4.30 – 6.00.

எமகண்டம்
பிற்பகல் 12.00 –1.30.

குளிகை
பிற்பகல் 3.00 – 4.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
**இராமமூர்த்தி**
செல்: 8189908040

# டிச.7க்குள் பயணிகளுக்கு விமான கட்டணத்தை திருப்பி தரவேண்டும்

## இண்டிகோவுக்கு மத்திய அரசு கெடு

**புதுடெல்லி, டிச.7:** விமானப்பணி, ஊழியர்களுக்கான பணிநேரம் உள்ளிட்ட புதிய விதிகள் காரணமாக, இண்டிகோ விமான நிறுவனத்தின் சேவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. நேற்றைய தினம் 1000க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

எந்த மாற்று ஏற்பாடுகளும் விமான நிறுவனம் செய்து தராததால் நாடு முழுவதும் உள்ள பல்வேறு விமான நிலையங்களில் இண்டிகோ விமான பயணிகள் போராட்டத்தில் இறங்கினர். நிலைமை மோசம் அடைந்ததால் பயணிகளிடம் விமான நிறுவனம் மன்னிப்பு கோரியது.

புதிய விதிகளை விமான போக்குவரத்து ஆணையரகம் திரும்ப பெற்று விட்டாலும், இன்றும் 500க்கும் மேற்பட்ட இண்டிகோ விமான சேவைகளின் ரத்து தொடர்கிறது.

இந் நிலையில், டிச.7ம் தேதி இரவுக்குள் ரத்து செய்யப்பட்ட விமானங்களின் பயணக் கட்டணத்தை பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு இண்டிகோ நிறுவனம் திருப்பி தர வேண்டும் என்று மத்திய விமான போக்குவரத்து அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து தமது எக்ஸ் வலைதள பதிவில் கூறி உள்ளதாவது;

தற்போதைய கட்டண விலையேற்றங்களில் இருந்து பயணிகளை காக்க, பாதிக்கப்பட்ட வழித்தடங்களில் நியாயமான கட்டணங்களை உறுதி செய்ய அமைச்சகம் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பயணிகளை பாதுகாக்க, குறிப்பாக அவசர பயணம் மேற்கொள்ள உள்ளவர்களுக்காக கடுமையான கட்டண வரம்புகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. கட்டண நிர்ணயங்களை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம். மேலும் பயணிகள் நலனுக்காக எந்த விதிமீறல் என்றாலும் உடனடி நடவடிக்கை எடுப்போம்.

பாதிக்கப்பட்டு, நிலுவையில் உள்ள அனைத்து பயணிகளின் பணத்தை தாமதமின்றி வழங்க டிசம்பர் 7, 2025 அன்று இரவு 8 மணிக்குள் முடிக்க இண்டிகோ நிறுவனத்திற்கு சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு மறு அட்டவணை கட்டணங்களை வசூலிக்க வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. விமான போக்குவரத்து நிறுவனங்களின் எந்தவொரு இணக்கமில்லாத செயல்கள் ஒழுங்கு நடவடிக்கைக்கு வழிவகுக்கும்.

சரக்குகளின் உரிய முகவரிகளை கண்டறிந்து 48 மணி நேரத்திற்குள் வீட்டிற்கு டெலிவரி செய்ய வேண்டும். மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளி பயணிகள் மற்றும் அவசர பயணம் தேவைப்படுபவர்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.

விமான நிறுவனங்களின் கட்டண நிலைகளை அமைச்சகம் தொடர்ந்து உன்னிப்பாக கண்காணிக்கும். பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளை மீறினால், உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு தமது எக்ஸ் வலைதள பதிவில் மத்திய விமான போக்குவரத்து அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே பயணிகளுக்கு பணத்தை திருப்பி தருவதாக இண்டிகோ நிறுவனம் ஒப்பிதல் அளித்துள்ளது. இதுகுறித்து வெளியிட்டு உள்ள எக்ஸ் வலைதள பதிவில் கூறியுள்ளதாவது;

சமீபத்திய சம்பவங்களின் விளைவாக, பயணம் ரத்து செய்ததை அடுத்து, அதற்கான பணம் தானாகவே திருப்பி அளிக்கப்படும். டிசம்பர் 5, 2025 முதல் டிசம்பர் 15, 2025 வரையிலான பயணத்திற்கான உங்கள் முன்பதிவுகளின் அனைத்து ரத்துசெய்தல், மறு அட்டவணை கோரிக்கைகளுக்கும் நாங்கள் முழு விலக்கு அளிப்போம்.

இவ்வாறு இண்டிகோ நிர்வாகம் அறிவிப்பு வெளியிட்டு உள்ளது.




## "இண்டிகோ நிறுவனத்திடம்தான் தவறு; நடவடிக்கை உறுதி" – விமானப் போக்குவரத்து அமைச்சர்

"விமானிகளின் பணி நேர வரம்பு (FDTL) விதிமுறைகள் நவம்பரில் அமலுக்கு வந்த நிலையில், மற்ற அனைத்து விமான நிறுவனங்களும் எந்தப் பிரச்சினையையும் சந்திக்கவில்லை. அப்படியானால், தவறு இண்டிகோவிடம்தான் உள்ளது" என சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ராம் மோகன் நாயுடு கூறினார். இந்த விவகாரத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாது. ஆனால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்றால் இது நாங்கள் யாரையும் மகிழ்விக்க விரும்பும் ஒன்றல்ல. அமைச்சகத்தின் கவனம் பயணிகள்தான் என்பதில் நாங்கள் மிகவும் தெளிவாக இருக்கிறோம். அடுத்த முறை இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்வது எங்கள் வேலை, எங்கள் பொறுப்பு. எனவே, விசாரணையைத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதில் நாங்கள் மிகவும் தெளிவாக இருக்கிறோம்" என்றார்.

## காசி தமிழ்ச் சங்கமத்துக்கு 2,000 போலீஸார் பாதுகாப்பு



**வாராணசி, டிச.7:** உத்தர பிரதேசம் வாராணசியில் காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சி தொடர்ந்து நான்காவது ஆண்டாக கடந்த 2-ம் தேதி முதல் வரும் 17-ம் தேதி வரை நடைபெறுகிறது. இதில் சுமார் ஒரு லட்சம் பேர் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கு செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து வாராணசி காவல்துறை துணை ஆணையர் சரவணன் தங்கமணி கூறியதாவது:

காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சியில் 80,000 முதல் 1 லட்சம் பேர் வரை கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. இதை முன்னிட்டு இங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

சுமார் 2 ஆயிரம் போலீஸார் 15 நாட்களாக பாதுகாப்பு பணியில் ஈடுபடுவர். இதற்காக 3 கம்பெனி ரிசர்வ் போலீஸார், தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் வரவழைக்கப்பட்டுள்ளனர். தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சி நடைபெறும் நமோ காட் பகுதியை ஒட்டியுள்ள கங்கை நதியில் பாதுகாப்பு பணியை மேற்கொள்ள 4 அதிவிரைவு படகுகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்தப் படகுகள் 8 கி.மீ தூரத்தை 7 நிமிடங்களில் கடந்து செல்லும். பாதுகாப்பு பணியில் 10 ட்ரோன்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு சரவணன் கூறினார்.

# "அகண்ட பாரதத்துக்கான வலுவான அடித்தளம் அமைத்தவர் படேல்":சி.பி.ராதாகிருஷ்ணன்

**புதுடெல்லி, டிச.7:** அகண்ட பாரதத்துக்கான வலுவான அடித்தளத்தை அமைத்தவர் சர்தார் வல்லபாய் படேல் என்று குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் முதல் உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் படேலுக்காக குஜராத்தின் ஏக்தா நகரில் அமைக்கப்பட்டுள்ள பிரம்மாண்ட சிலை முன்பாக, ஒற்றுமை அணிவகுப்பு மற்றும் தேசிய பாதயாத்திரை நிறைவு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய சி.பி. ராதாகிருஷ்ணன், "சர்தார் வல்லபாய் படேல் 560-க்கும் மேற்பட்ட சமஸ்தானங்களை ஒருங்கிணைத்ததில் மிகப் பெரிய வரலாற்றுப் பங்களிப்பைக் கொண்டவர். அகண்ட பாரதத்துக்கான வலுவான அடித்தளத்தை அமைத்தவர். அவருக்கு நாடு எப்போதும் கடன்பட்டிருக்கும்.

வலுவான, தன்னம்பிக்கை கொண்ட இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற படேலின் கனவு, பிரதமர் மோடியின் தொலைநோக்குத் தலைமையின் கீழ் நனவாகி வருகிறது.

கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியா பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக, ராணுவ ரீதியாக விரைவான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறுவதற்கான நிலையான பயணத்தில் நாடு உள்ளது.



இளைஞர்கள்தான் இந்தியாவின் எதிர்காலத்தின் சக்தி மையம். ஒற்றுமை, ஒழுக்கம், தேசிய நோக்கம் ஆகியவற்றோடு அவர்கள் வழிநடத்தப்படும்போது, புதுமை மற்றும் வளர்ச்சியில் நாடு உலகிற்கே தலைமை தாங்க முடியும்.

போதைப் பொருட்களை நிராகரிப்பதில் இளைஞர்கள் உறுதியாக இருக்க வேண்டும். சமூக ஊடகங்களை பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும். டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் சைபர் பாதுகாப்புக்கு அவர்கள் தங்கள் பங்களிப்பை அளிக்க வேண்டும்.

அனைத்துத் துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு வலுவாக உள்ளது. பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் இருந்து, பெண்கள் தலைமையிலான வளர்ச்சி என்ற முன்னெடுப்பை மத்திய அரசு உறுதியுடன் மேற்கொண்டு வருகிறது.

நாட்டின் பாதுகாப்பு பன்மடங்கு வலுப்பெற்றுள்ளது. நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பதிலும், எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதிலும் இந்தியாவுக்கு உள்ள உறுதியை ஆபரேஷன் சிந்தூர் மூலம் அது தீர்க்கமாக உணர்த்தியது" என தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு கப்பல்களில் 950 மெட்ரிக் டன் நிவாரணப் பொருட்கள் முதலமைச்சர் ஸ்டாலின் அனுப்பினார்

**சென்னை, டிச.7:** முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று ,'டிட்வா' புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டு, நெருக்கடியில் சிக்கித் தவித்து இன்னலுறும் இலங்கை வாழ் மக்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பில் உதவிடும் வகையில் சென்னை துறைமுகத்திலிருந்து 650 மெட்ரிக் டன்னும், தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 300 மெட்ரிக் டன்னும் என மொத்தம் 950 மெட்ரிக் டன் நிவாரணப் பொருட்களை இலங்கை நாட்டிற்கு இந்திய கடற்படைக்கு சொந்தமான கப்பல்கள் மூலம் கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

இந் நிகழ்வில், தமிழ்நாட்டிலிருந்துஇலங்கைக்கு அனுப்பப்படும் நிவாரணப் பொருட்களின் மாதிரி தொகுப்பினை இலங்கை துணைத் தூதர் டாக்டர். கணேச நாதன் கீதீஸ்வரனிடம் முதலமைச்சர் வழங்கினார்.

'டித்வா' புயல் பேரிடரால் பாதிக்கப்பட்ட இலங்கைவாழ் மக்களுக்கு உதவக்கூடிய வகையில், சென்னை துறைமுகத்திலிருந்து 300 மெட்ரிக் டன் சர்க்கரை, 300 மெட்ரிக் டன் பருப்பு, 25 மெட்ரிக் டன் பால்பவுடர், 25 மெட்ரிக் டன் கொண்ட 5000 வேட்டிகள், 5000 சேலைகள், 10,000 துண்டுகள், 10,000 போர்வைகள் மற்றும் 1000 தார்பாலீன்கள் ஆகிய நிவாரணப் பொருட்களையும் மற்றும் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 150 மெட்ரின் டன் சர்க்கரை, 150 மெட்ரிக் டன் பருப்பு உள்ளடக்கிய நிவாரணப் பொருட்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இலங்கை துணைத் தூதரிடம்...

இப்பணிகள் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், கைத்தறி துறை மற்றும் வேளாண்மை -உழவர் நலத்துறை ஆகிய துறைகள் மூலம் ஒருங்கிணைந்து சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில், சென்னை துறைமுகத்தில், இலங்கை துணைத் தூதர் டாக்டர். கணேசநாதன் கீதீஸ்வரன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கடற்படை அதிகாரி ரியர் அட்மிரல் சதீஷ் எம். செனாய், பொதுத்துறைச் செயலாளர் ரீட்டா ஹரிஷ் தக்கர், சென்னை துறைமுகத்தின் தலைவர் விஸ்வநாதன், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் மா.வள்ளலார், பொதுத்துறை கூடுதல் செயலாளர் பாலசுப்ரமணியம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன், மீன்வளம்-மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் க.இளம்பகவத், கமோடர் அனில்குமார், கடற்படை ஸ்டேசன் கமாண்டர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.








# திருக்குறள் குறள்-462

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்



ஆராய்ந்து சேர்ந்த இனத்துடன் (செயலைப்பற்றி) நன்றாகத் தேர்ந்து, தாமும் எண்ணிப்பார்த்துச் செய்கின்றவர்க்கு அறிய பொருள் ஒன்றும் இல்லை.


## சிந்திக்க ஒரு நொடி



மன காயத்திற்கு ஆறுதல்
என்பது தற்காலிக தீர்வு,
மாறுதல் என்பது
நிரந்தர தீர்வு, ஆறுதல்
தேடாதே
மாறுதல் தேடு
வாழ்க்கை வசந்தமாகும்

**ராஜகோபாலன்.J**
சென்னை 18

## அய்யங்குளத்தில் தெப்பல் உற்சவம்





**திருவண்ணாமலை,டிச.07:**
திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் திருக்கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு அய்யங்குளத்தில் பராசக்தி அம்மன் மின்விளக்குகளால் அலங்கரித்து, வண்ணமலர் மாலைகளுடன், தோரணங்களுடன் பராசக்தி அம்மன் தெப்பல் உற்சவத்தில் அருள் பாலிக்கும் காட்சி. ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## பாரத ரத்னா டாக்டர் அம்பேத்கர் 69 –ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை





**திருவண்ணாமலை,டிச.07:**
திருவண்ணாமலை மாவட்டம் பாரத ரத்னா டாக்டர் அம்பேத்கார் 69 -ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி சென்னை உயர்நீதிமன்றத்தில் உள்ள அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு ஆரணி இன்டர்நேஷனல் கல்லூரி தாளாளர், அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற மாநில துணைச் செயலாளர், வழக்கறிஞர் திரு.ஜாகீர்உசேன் அவர்கள் மற்றும் சென்னை பல்கலைக்கழகத்தில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட அம்பேத்கர் திருவுருவப்படத்திற்கு நேரில் சென்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர், கலைஞர்கள் சங்கத்தின் 16–வது மாநில மாநாடு



தஞ்சாவூரில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர், கலைஞர்கள் சங்கத்தின் 16-வது மாநில மாநாட்டில் முன்னாள் நீதிபதி சந்துரு பேசினார்.

## கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்



சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகம் அரங்கில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.அமைச்சர்கள் மதிவேந்தன், சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், அதிகாரிகள் உடன் உள்ளனர்.

## திரு அழுக்கு சாமியின் 100 ஆண்டு விழா குருபூஜை



கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைமலை வட்டம் வேட்டைக்காரன் புதூரில் திருவாரூர் திரு அழுக்கு சாமியின் 100 ஆண்டு விழா குருபூஜை பொள்ளாச்சி தேர் நிலையம் அருகே அன்னதானம் நடைபெற்றது .

இதில் சிவ சிவ சிவக்குமார் ஒருங்கிணைப்பாளர் மற்றும் பௌர்ணமி அன்னதானம குழு உறுப்பினர்கள், மற்றும் ஆயிரக்கணக்கானோர் பொதுமக்கள் அன்னதானத்தில் கலந்து கொண்டனர்.

## செய்யாறில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்பில் திருக்குறள் முற்றோதல் நிகழ்வு

### பங்கேற்ற மாணவர்களுக்கு பாராட்டு



**செய்யாறு ,டிச. 7:**
செய்யாறில் தமிழ் வளர்ச்சி த்துறை சார்பில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்பில் திருக்குறள் முற்றோதல் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்பில் திருக்குறள் முற்றோதல் நிகழ்வு நடைபெற்றது .நிகழ்ச்சிக்கு தலைமையாசிரியர் ஜி .ஜெயகாந்தன் தலைமை தாங்கினார். பயிற்சியாளர் கவிஞர் எறும்பூர் கை.செல்வகுமார் முன்னிலை வகித்து வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்ட பொறியாளர் திருக்குறள் த. மருதவாணன், ஆசிரியர்சிவராமன் ஆகியோர் திருக்குறள் சார்ந்து உரை நிகழ்த்தினர்.

பின்னர் நேற்று நடந்த சிறப்பு திருக்குறள் முற்றோதல் நிகழ்வில் பங்கேற்ற கார் குழலி கார் முகிலன் ஆகியோர்களை பாராட்டி சால்வை அணிவித்து பரிசு வழங்கப்பட்டது. மேலும் பார்வையாளராக கலந்துகொண்ட திருக்குறள் பயிற்சி மாணவயின் பெற்றோர் சீனிவாசன் மாணவர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கினார்.

முடிவில் பயிற்சியாளர் புலவர் ந.கனக சபை நன்றி கூறினார்.

## டாக்டர் அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



**திருவண்ணாமலை,டிச.07:**
திருவண்ணாமலை டாக்டர் அம்பேத்கர் 69-ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு டாக்டர் அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு மாண்புமிகு துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி அவர்கள் டாக்டர். அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## சீர்காழியில் தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



**சீர்காழி , டிச , 07:**
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் சட்ட மேதை டாக்டர் அம்பேத்கர் நினைவு நாளையொட்டி புதிய பேருந்து நிலைய அருகே உள்ள அவரது திருவுருவ சிலைக்கு தமிழக வாழ்வுரிமை கட்சியின் சீர்காழி சட்டமன்ற தொகுதி செயலாளர் கி.ரமேஷ் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் சீர்காழி நகர செயலாளர் கார்த்திக் , நகர தலைவர் கலைகண்ணன் , கணேசன், லோகநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

## அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி கோணாமேடு பகுதியில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு அவரது 70 வது நினைவு தினத்தை முன்னிட்டு வி எஸ் சாரதி குமார் MC நகர திமுக செயலாளர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் நகர மற்றும் கிளை கழகத்தினர் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீ வாராஹி அம்மனுக்கு சொர்ணாபிஷேகம்...!



**வந்தவாசி, டிச 07:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி காஞ்சிபுரம் - வெண்குன்றம் சாலை லிங்கம் நகர் பகுதியில் உள்ள ஸ்ரீவாராஹி அம்மன் கோவிலில் நேற்று மூல மூர்த்திக்கு சிறப்பு பூஜைகள் மற்றும் மகா தீபாராதனை நடைபெற்றன. இந்த வைபவத்தில் சிறப்பு அலங்காரத்தில் உள்ள மூல மூர்த்தி அம்மனுக்கு சொர்ண அபிஷேகம் நடைபெற்றது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்களுக்கு கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

பா. சீனிவாசன், வந்தவாசி.

## திமுக சார்பில் அம்பேத்கர் சிலைக்கு மாலை



மதுரை மாநகர் மாவட்ட திமுக சார்பில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## திருக்கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு அன்னதானம் வழங்குதல்



**திருவண்ணாமலை,டிச.07:**
திருவண்ணாமலை பேகோபுர தெருவில் உள்ள சத்யதர்மசாலை அறக்கட்டளை நித்திய அன்னதான கூடத்தில் திரு கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு மூன்று வேளையும் அன்னதானம் வழங்கப்பட்டது. ஒவ்வொரு நாட்களும் 6 ஆயிரம் நபர்களுக்கு மேல் அன்னதானம் வழங்கப்பட்டது 13 நாட்களும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்த மாபெரும் அன்னதானம் வள்ளலாரின் ஆசியோடும் அண்ணாமலையாரின் பாதத்தில் வெகுசிறப்பாக அன்னதானத்தை நடத்தியவர்கள் R. சங்கர் அவர்கள், S. சத்தியவேல் அவர்கள், தினச்சந்திரன் அவர்கள், கோகுல் தாஸ் அவர்கள்,பூ. ராமலிங்கம் அவர்கள் மற்றும் அன்னதான கூடத்தில் சமையலர்கள், பணியாளர்கள் அனைவரும் வெகுசிறப்பாக அன்னதானத்தை நடத்தினார்கள்.

தமிழ்நாடு பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சின்னப்பள்ளத்தூர் அரசு பள்ளியில் பள்ளி மேலாண்மை குழு ஆலோசனை கூட்டம்



**தர்மபுரி,டிச.07:**
தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் ஒன்றியம் சின்னப் பள்ளத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பள்ளி மேலாண்மை குழுக் கூட்டம் நடைபெற்றது.

பள்ளியின் தலைமை ஆசிரியர் மா.பழனி பள்ளி மேலாண்மை குழு கூட்டத்தின் நோக்கங்கள் பற்றி குறிப்பிடுகையில் திறன் இயக்கம் சார்பாக 6-8 வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பயிற்சிகள், எண்ணும் எழுத்தும் 1-5 வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பயிற்சிகள் பற்றி பள்ளி மேலாண்மை குழுக் கூட்டத்தில் விளக்கினார்.

மேலும் உயர்கல்விக்கான வழிகாட்டுதல், குழந்தைத் திருமணம் , குழந்தை தொழிலாளர், பெண் குழந்தைகள் பாதுகாப்பு, மணற்கேணி செயலி பற்றிய விளக்கம், மகிழ் முற்றம், மன்ற செயல்பாடுகள் மாணவர்களின் ஆதார புதுப்பித்தல் உள்ளிட்டவைகள் பற்றி விளக்கினார்.

மகளிர் திட்ட அலுவலகத்தில் இருந்து பள்ளி மேலாண்மை குழு கூட்டத்தில் கலந்துகொண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்பு பற்றி விளக்கினார்கள். கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர் கங்கா, பள்ளி ஆசிரியர்கள் வளர்மதி, கல்பனா கலைச்செல்வி, ராஜேஸ்வரி மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

## இராமநாதபுரம் பள்ளி மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள் தேர்வு

**இராமநாதபுரம், டிச.7:**

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் தென்மண்டல குழந்தைகள் அறிவியல் மாநாடு கோவில்பட்டி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி உட்பட 10 மாவட்டங்களில் இருந்து 160 நீர் மேலாண்மை சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இதில் இராமநாதபுரம் மாவட்டத்தின் பல்வேறு பள்ளிகளில் இருந்து 10 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து 4 பள்ளி மாணவர்களின் ஆய்வுக் கட்டு ரைகள் சிறந்த கட்டுரைகளாக தேர்வு செய்யப்பட்டன. தேர்வு செய்யப்பட்ட சிறந்த கட்டுரை களை டிசம்பர் 6,7 ஆகிய தேதிகளில் திண்டுக்கல்லில் நடைபெறும் மாநில அளவிலான மாநாட்டில் மாணவர்கள் சமர்ப்பிக்கின்றனர்.

## அரசுப்பள்ளி கட்டிடம் சீரமைக்க பொதுமக்கள் கோரிக்கை

**இராமநாதபுரம், டிச.7:**

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே கிடாத்திருக்கை என்ற கிராமத்தில் அரசு உயர்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது . இந்த பள்ளி வகுப்பறை கட்டிடம் கடந்த 2008 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

இப்பள்ளியில் கொண்டுலாவி, கிடாத்திருக்கை, ஏனாதி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மாணவ,மாணவியர்கள் படித்து வருகின்றனர் . இங்குள்ள 9 ஆம் மற்றும் 10 ஆம் வகுப்பு அறையில் மழை நீர் ஒழுகி வகுப்பறைகளில் நீர் தேங்குவதால் மாணவர்கள் அவதிப்படுகின்றனர். சுவரில்கை வைத்தால் மின்சாரம் பாய்வதாக கூறப்படுகிறது. இதனால் மாணவ, மாணவிகளின் நலன் கருதி சமுதாயக்கூடத்தில் வைத்து வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. கணினிகள் அனைத்தும் நனைந்து சேதமடைந்துள்ளதால் தார்ப்பாய், பிளக்ஸ் பேனர்களைக் கொண்டு மூடி வைத்துள்ளனர். இந்த பள்ளியானது பத்தாம் வகுப்பு தேர்வில் தொடர்ந்து 100 சதவீதம் தேர்ச்சி பெற்று வருகிறது. எனவே பள்ளி மாணவ மாணவிகளின் நலன் கருதி கட்டிடத்தை சீரமைக்க வேண்டும். புதிய கட்டிடம் கட்டித் தர வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நாதஸ்வரம் போட்டியில் முதல் பரிசு வென்ற மாணவிக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு வாழ்த்து



**விருதுநகர், டிச.7:**

பள்ளிக்கல்வித்துறை சார்பில் சேலத்தில் மாநில அள விலான கலைத் திருவிழா-போட்டிகள் நடைபெற்றது. அதில், விருதுநகர் அருகே யுள்ள மல்லாங்கிணறைச் சேர்ந்த மாணவி வி.காவிய லட்சுமி நாதஸ்வரம் போட்டி யில் கலந்து கொண்டு முதல் பரிசினைப் வென்றார்.

இந்நிலையில் தமிழக நிதி, சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மாணவி காவியலட்சுமி மற்றும் அவரது குடும்பத்தினரை நேரில் அழைத்து வாழ்த்தினார். அப்போது மாணவி காவி யலட்சுமி, அமைச்சர் முன்னி லையில் நாதஸ்வரத்தில் பாரம்பரிய ராகங்களை இசைத்தார். அதை அமைச் சர் ரசித்து மகிழ்ந்தார். தமிழர்க ளின் பெருமைமிகு மரபுக் கலையான நாதஸ்வரத்தை இளம் வயதிலேயே இவ்வளவு திறம்பட கற்றுத்தேர்ந்து அதனை நயம்பட கையாளும் காவியலட்சுமிக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.அவர் இசைத் துறையில் மேலும் மேலும் வளர வேண்டுமெனவும் அமைச்சர் பாராட்டுத் தெரி வித்தார்.

## பருவமழைக் காலங்களில் மழைநீர் தேங்குவதை தடுக்க வடசென்னையில் 4 புதிய குளங்களை அமைத்துள்ள மாநகராட்சி



**சென்னை, டிச.7:**

பருவமழைக்காலங்களில் மழைநீர் தேங்குவதைத் தடுக்க வடசென்னையில் 73 லட்சம் கன அடி வரை நீரை சேமிக்கும் வகையில் 4 புதிய குளங்களை மாநகராட்சி அமைத்துள்ளது.

சென்னை மாநகராட்சி சார்பாக அமைக்கப்பட்டு வரும் குளங்களுக்கு செய்தியாளர்களை நேரில் அழைந்துச் சென்று மாநகராட்சி அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

அந்த வகையில் வடசென்னையில் வியாசர்பாடி பழைய கூட்செட் சாலையில் ரயில்வேக்கு சொந்தமான 2 ஏக்கர் பரப்பளவிலான குளத்தை ரயில்வே துறையிடம் அனுமதி பெற்று 7 ஏக்கர் பரப்பளவில் ரூ.1.15 கோடி மதிப்பில் சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்துள்ளது. இந்த குளத்தில் 10அடி ஆழத்தில் 1.16 லட்சம் கன அடி தண்ணீரைத் தேக்கி வைக்க முடியும்.

இதேபோல, திருவொற்றியூர் கார்கில் நகர் பகுதியில் சாதாரண மழைக்கே பொதுமக்கள் நிவாரண முகாம்களுக்கு செல்லும் நிலை இருந்தது. அதைத் தடுக்கும் வகையில் தற்போது அந்த பகுதியில் ரூ.9 கோடி மதிப்பில் புதிய குளம் உருவாக்கப்பட்டுள்ளது. 23 அடி ஆழம் உள்ள இந்த குளத்தில் 1.05 லட்சம் கன அடி நீரை சேகரிக்கலாம்.

முன்னதாக இந்த இடம் கட்டிடக் கழிவுகள் கொட்டப்பட்டு பயன்படாமல் இருந்தது. தற்போது இங்கு புதிய குளம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் குளம் நிரம்பினால் இங்கு உள்ள தண்ணீர் பக்கிங்ஹாம் கால்வாயில் செல்லும் வகையில் மோட்டார்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மணலி மண்டலத்தில் 135 ஏக்கர் பரப்பளவு கொண்ட கடப்பாக்கம் ஏரியை ரூ.46 கோடியில் சுற்றுச்சூழல் பூங்காவாக மாற்றும் பணியை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது. இப்பூங்காவில் பொதுமக்களைக் கவரும் வகையில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரங்கள், நடைபாதை, வண்ணத்துப்பூச்சி பூங்கா, 2 பறவைகள் தீவுகள், செயற்கை நீரூற்று மற்றும் நடைபாதை வசதி உள்ளிட்டவை அமைக்கப்பட உள்ளதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து மாநகராட்சி துணை ஆணையர் சிவ கிருஷ்ண மூர்த்தி கூறியதாவது: சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் இந்த ஆண்டு 31 புதிய குளங்கள் உருவாக்கப்பட்டு, 47 குளங்கள் தூர்வாரப்பட்டுள்ளன. மழைக் காலங்களில் மழை நீரை வெளியேற்றும் பணிக்காக மட்டுமல்லாமல் நிலத்தடி நீர் மட்டத்தையும் அதிகரிக்க குளங்கள் அமைக்கப்படுகின்றன.

கடந்த ஆண்டு 87 இடங்கள் மழைநீர் தேங்கும் இடங்களாக அடையாளம் காணப்பட்டன. இந்தாண்டு 61 இடங்களில் தண்ணீர் தேங்கியது. அதில் பெரும்பாலான இடங்களில் ஒரே நாளில் தண்ணீர் வடிந்தது. மழைநீர் வெளியேற்றுவதற்கு மழைநீர் வடிகால் முக்கியமானது. ஆனால் மழைநீர் வடிகால் மட்டுமே தீர்வு கிடையாது. இவ்வாறு அவர் கூறினார்.

## கலவையில் அம்பேத்கர் நினைவு தினம்



**ஆற்காடு, டிச.7:**

ஒருங்கிணைந்த இந்திய குடியரசு கட்சியின் சார்பில் ஆற்காடு அடுத்த கலவையில் அம்பேத்கரின் 69வது நினைவு தினம் சனிக்கிழமை அனுசரிக்கப்பட்டது நிகழ்ச்சிக்கு மாவட்ட தலைவர் பி எம் செல்வராஜ் தலைமை வகித்தார்.

நிர்வாகிகள் ஆர். தீர்த்தமலை, ஸ்ரீ சண்முகம் வேம்பி சுப்பிரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர் திமிரி , ஒன்றிய தலைவர் கஜபதி வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக அக்கட்சியின் மாநில தலைவர் எஸ் குணசேகரன்,கலந்துகொண்டு அம்பேத்கர் உருவ சிலைக்கு மாலை அணிவித்தார். இதில் துணைத் தலைவர் எம் எஸ் கிருஷ்ணன்,அவைத்தலைவர் ஏ பி முருகேசன் செய்தி தொடர்பாளர் கே பத்மநாபன் இணை பொது செயலாளர் செந்தில்குமார் பௌத்த சங்க தலைவர் கருணாகரன் மாநில தொழிற்சங்க தலைவர் பாபு,மாவட்ட தொழிற்சங்க தலைவர் நீலமேகம், மாலினி வெங்கடேசன். பஞ்சா ரமேஷ். துரை,உட்பட கட்சியின் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். முடிவில் நல்லூர் சங்கர் நன்றிகூறினார்.

## 48 கோயில்களின் வரவு-செலவு தணிக்கை விவரங்களை 2 வாரங்களில் இணையத்தில் பதிவேற்ற உத்தரவு

**சென்னை, டிச.7:**

தமிழகம் முழுவதும் உள்ள 48 பெரிய கோயில்களின் வரவு - செலவு தொடர்பான தணிக்கை முழு விவரங்களை 2 வாரங்களில் இணையத்தில் பதிவேற்றம் செய்யுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



இது தொடர்பாக ஆலய வழிபடுவோர் சங்கத் தலைவர் டி.ஆர்.ரமேஷ் சென்னை உயர் நீதி மன்றத்தில் 2023-ல் தாக்கல் செய்திருந்த மனுவில் கூறியிருப்பதாவது: அறநிலையத் துறை சட்டப்படி, அத்துறையின் வரவு-செலவு தொடர்பாக ஒவ்வோர் ஆண்டும் தகுதியான தணிக்கையாளர்களைக் கொண்டு கண்டிப்பாக தணிக்கை செய்ய வேண்டும்.

ஆனால், அதிக அளவில் வருமானம் வரக்கூடிய பெரிய கோயில்களின் வருவாயை முறையாக தணிக்கை செய்வதில்லை. இதனால் கோயில்களுக்கான உபரிநிதி எவ்வளவு இருப்பு உள்ளது, எவ்வளவு நிதி செலவு செய்யப்படுகிறது, எவ்வளவு வருவாய் கிடைத்தது என எந்த விவரமும் தெரிவதில்லை.

இதன் காரணமாக கோயில் நிதி, அறநிலையத் துறை அதிகாரிகளுக்கு வாகனம் வாங்குவதற்காகவும், துறை சார்ந்த கூட்டங்களுக்கு டீ, காபி, தண்ணீர் பாட்டில், பிஸ்கெட் வாங்குவதற்காகவும் செலவிடப்படுகிறது. எனவே, தமிழகம் முழுவதும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து கோயில்களின் வரவு-செலவு குறித்த ஆண்டு தணிக்கை விவரங்களை அறநிலையத் துறையின் இணையதளத்தில் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் பிடிஎப் வடிவில் பதிவேற்றம் செய்யுமாறு அறநிலையத் துறைக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், எஸ்.சவுந்தர் ஆகியோர் அடங்கிய சிறப்பு அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது அறநிலையத் துறை தரப்பில் ஆஜரான சிறப்பு அரசு வழக்கறிஞர் என்.ஆர்.ஆர். அருண் நடராஜன், “ரூ.1 கோடிக்கும் மேல் வருமானம் உள்ள 48 கோயில்களின் வரவு செலவு தொடர்பாக தணிக்கை செய்யப்பட்டு, அதுகுறித்த சுருக்கமான விவரங்கள் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு விட்டது, மேலும், பல கோயில்களின் தணிக்கை விவரங்கள் தயாராக உள்ளன” என்றார்.

அதற்கு மனுதாரரான டி.ஆர்.ரமேஷ், “பெரிய கோயில்களின் வரவு-செலவு தொடர்பான முழு விவர அறிக்கை இன்னும் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படவில்லை. ஆண்டுதோறும் கிடைத்த வருமானம், செலவுக்கான முழு விவரங்கள் குறித்த தணிக்கை விவரங்களை தாக்கல் செய்யவில்லை” என்றார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், “அறநிலையத் துறை சார்பில் சுருக்கமான தணிக்கை விவரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டாலும், தமிழகம் முழுவதும் உள்ள 48 பெரிய கோயில்களின் தணிக்கை தொடர்பான முழு விவரங்களையும் இரு வாரங்களில் இணையத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்” என உத்தரவிட்டு, விசாரணையை டிச. 18-ம் தேதிக்கு தள்ளிவைத்துள்ளனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu” என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## மாத்திரை வேண்டாம்! கெட்ட கொழுப்பை கரைக்க 7 வழிகள்!



கொலஸ்ட்ரால் அளவை பரிசோதனை மூலம் கண்டறிந்து, நம் உணவு மற்றும் வாழ்க்கை முறையில் சில தேவையான மாற்றங்களை செய்தால் உடலில் இருக்கும் தேவையற்ற கொழுப்புகள் கரைவதுடன், இதய ஆரோக்கியத்திற்கும் நல்லது. கெட்ட கொழுப்பை மாத்திரை இல்லாமல் கரைக்கும் மேஜிக் வழிகள்.

1. நார்ச்சத்து நிறைந்த உணவுகள்:

முழு தானிய உணவுகளை உட்கொள்வது இதய நோய் அபாயத்தை குறைக்கிறது. பருப்பு வகைகள், கரையக்கூடிய நார்சத்து நிறைந்த ஓட்ஸ், பார்லி, பீன்ஸ் போன்றவை ‘பீட்டா குளுக்கன்’ எனப்படும் கரையக்கூடிய நார்ச்சத்தை அதிகம் கொண்டுள்ளன. இவை ரத்தத்தில் உள்ள கெட்ட கொழுப்பை குறைக்க உதவுகிறது.

2. காய்கறிகள் மற்றும் பழங்கள்:

தினமும் பல்வேறு வண்ணமயமான காய்கறிகள் மற்றும் பழங்களை சாப்பிடுவது இதய நோய், பக்கவாதம் மற்றும் சில புற்று நோய்களிலிருந்து நம்மை பாதுகாக்கும். பூசணிக்காய், கத்தரிக்காய், கேரட், முட்டைகோஸ் போன்ற காய்கறிகளை எடுத்துக் கொள்வது நல்லது. திராட்சை, ஆரஞ்சு,ஆப்பிள்களில் பெக்டின் என்னும் கரையக்கூடிய நார்ச்சத்து இருப்பதால் இது கெட்ட கொலஸ்ட்ரால் அளவை குறைக்க உதவுகிறது.

3. கொட்டைகள் மற்றும் விதைகள்:

பாதாம், வால்நட்ஸ், ஆளி விதைகள், சியா விதைகள் போன்ற கொட்டைகள் மற்றும் விதைகளில் நார்ச்சத்து, தாவர ஸ்டெரோல்கள் மற்றும் நிறைவுறாத கொழுப்புகள் இருப்பதால் இவை உடலில் இருக்கும் தேவையற்ற கொழுப்பை குறைக்க உதவும். கொட்டைகள் மற்றும் விதைகளில் ஒமேகா 3 ஃபேட்டி ஆசிட் அதிகமாக உள்ளது. இது கொலஸ்ட்ரால் அளவை பெருமளவில் குறைக்க உதவுகிறது.

4. பருப்பு வகைகள் மற்றும் பீன்ஸ்:

கொண்டைக்கடலை மற்றும் பயறு போன்ற பருப்பு வகைகள் கரையக்கூடிய நார்ச்சத்து மற்றும் தாவர அடிப்படையிலான புரத மூலங்கள் நிறைந்துள்ளன. பருப்பு வகைகள் மற்றும் பீன்ஸ் போன்றவற்றை சாப்பிடுவது கெட்ட கொழுப்பை குறைக்க உதவும். சாலடுகள், சாஸ்கள் மற்றும் ஹம்முஸ் போன்ற பருப்பு வகைகளை அடிப்படையாகக் கொண்ட டிப்ஸில்(DIPS) அவற்றை பயன்படுத்தவும்.

5. மீன்கள்:

சால்மன், டுனா போன்ற மீன்களில் உள்ள ஒமேகா 3 ஃபேட்டி ஆசிட் கெட்ட கொழுப்பை குறைக்க உதவுகிறது.

6. ஆலிவ் எண்ணெய் மற்றும் சோயா பொருட்கள்:

சோயா பொருட்களில் டோஃபு, இனிப்பு சேர்க்காத சோயா பால், சோயா பீன்ஸ் போன்றவற்றை எடுத்துக் கொள்வது கெட்ட கொழுப்பை குறைக்க உதவும். ஆலிவ் எண்ணெய் போன்ற இதய ஆரோக்கியமான கொழுப்புகளை தேர்ந்தெடுப்பது நல்லது.

7. இதயத்திற்கு ஆரோக்கியமான கொழுப்புகள் நிறைந்த உணவுகள்:

அவகோடா, ஆலிவ் எண்ணெய், நல்ல கொழுப்பு நிறைந்த கானாங்கெளுத்தி, மத்தி மற்றும் சால்மன் போன்ற எண்ணெய் நிறைந்த மீன்கள், கொட்டைகள் மற்றும் விதைகள், தாவர எண்ணெய்கள் போன்ற ஆரோக்கியமான கொழுப்புகளை உணவில் (LOW CHOLESTEROL FOODS) சேர்த்துக் கொள்வதுடன் உடலுக்குத் தேவையான உடற்பயிற்சியையும் அளிப்பது ஆரோக்கியத்திற்கு நல்லது.

நிறைவுற்ற கொழுப்புகள் நிறைந்த தேங்காய், பாமாயில் போன்ற உணவுகளை முடிந்த வரை தவிர்ப்பது நல்லது. இவை LDL என்ற கெட்ட கொழுப்பை அதிகரிக்கிறது.

# இண்டிகோ முடக்கம் தாக்கம் 'கல்லா' கட்டிய மற்ற விமான நிறுவனங்கள்!

**சென்னை, டிச.7**

இண்டிகோ ஏர்லைன்ஸ் விமான சேவை முடங்கியதால் மற்ற விமான நிறுவனங்களில் டிக்கெட் கட்டணம் வரலாறு காணாத வகையில் உயர்ந்தது.

இண்டிகோ ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் விமான சேவை நாடு முழுவதும் முடங்கியுள்ளது. சென்னை விமான நிலையத்திலும் நேற்று 4-வது நாளாக இண்டிகோ ஏர்லைன்ஸ் விமான சேவைகள் பாதிக்கப்பட்டதால், பயணிகள் கடும் பாதிப்புக்கு ஆளாகினர்.

அதேநேரம், ஏர் இந்தியா, ஸ்பைஸ் ஜெட் நிறுவனங்களின் விமானங்கள் தொடர்ந்து இயங்கி வருவதால், அந்த விமானங்களில் டிக்கெட் கட்டணம் வரலாறு காணாத அளவுக்கு பலமடங்கு உயர்ந்துள்ளது.

சென்னையில் இருந்து கோவை செல்வதற்கு வழக்கமாக ரூ.10 ஆயிரம் வரை மட்டுமே கட்டணம் வசூலிக்கப்படும் நிலையில், தற்போது ஏர் இந்தியா விமானத்தில் ரூ.55 ஆயிரத்தில் இருந்து ரூ.60 ஆயிரம் வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

சென்னை - திருச்சி இடையே இன்று நேரடி விமானம் இல்லை என்று கூறி, மும்பை, பெங்களூரு வழியாக 36 மணி நேரம் பயணம் செய்து, திருச்சி செல்ல ரூ.40,800 கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

சென்னை - கொச்சி ஸ்பைஸ் ஜெட் விமானத்தில் ரூ.27 ஆயிரம், சென்னை - டெல்லி ஏர் இந்தியா விமானத்தில் ரூ.36 ஆயிரம், சென்னை - பெங்களூரு ஏர் இந்தியா விமானத்தில் ரூ.17 ஆயிரம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சென்னையில் இருந்து மதுரை, தூத்துக்குடி, சேலத்துக்கு நேற்று விமானம் இல்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

# தங்கம் விலை பவுனுக்கு ரூ.320 உயர்வு

சென்னை: சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுறது. அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்திய பொருட்களுக்கு 50 சதவீதம் வரி விதிப்பு, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிவு உள்ளிட்ட காரணங்களால், தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது.

அந்த வகையில் தங்கம் விலை இன்று உயர்ந்துள்ளது. சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராம் ஒன்றுக்கு ரூ.40 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.12,040-க்கும், பவுன் ஒன்றுக்கு ரூ.320 என உயர்ந்து ஒரு பவுன் தங்கம் ரூ.96,320-க்கும் விற்பனை ஆகிறது.

24 காரட் சுத்த தங்கம் பவுன் ஒன்றுக்கு ரூ.1,05,080 என விற்பனை ஆகிறது.

18 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.80,320-க்கும் விற்பனை ஆகிறது.

# 4 ஆண்டுகளில் தமிழகம் மகத்தான வளர்ச்சி: புதிய ஆலையை திறந்துவைத்து முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

**சென்னை, டிச.7:**

காஞ்சிபுரம் மாவட்டம், பிள்ளைப்பாக்கம், சிப்காட் தொழிற்பூங்காவில் அமெரிக்காவை சேர்ந்த கார்னிங் இன்டர்நேஷனல் கார்ப்பரேசன் மற்றும் இந்தியாவின் ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் நிறுவனங்களின் கூட்டு நிறுவனமான பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் நிறுவனம், ரூ.1,003 கோடி முதலீட்டில் 840 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மின்னணு சாதனங்களுக்கான உலகத்தரம் வாய்ந்த முன் கவர் கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி தொழிற்சாலையை நிறுவியுள்ளது.




இந்த தொழிற்சாலையை நேற்று தொடங்கி வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின், தொழிற்சாலையை பார்வையிட்டார். அதன் பின் அவர் பேசியதாவது: கடந்த ஆண்டு ஜனவரியில், இந்தத் திட்டத்துக்கான ஒப்பந்தம் போட்டு, 17 மாதங்களில் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. ஆயிரத்துக்கும் அதிகமான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு அதில், 80 சதவீதம் திட்டங்களை பல்வேறு நிலைகளில் செயல்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளோம். இந்த வேகமும், வெளிப்படைத் தன்மையும் தான் 4 ஆண்டுகளில் எலெக்ட்ரானிக்ஸ், ஜிசிசி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு துறைகளில் மகத்தான வளர்ச்சியை தந்துள்ளது. எலெக்ட்ரானிக்ஸ் துறையில் 14.65 பில்லியன் டாலர் ஏற்றுமதியுடன் நாட்டிலேயே முதல் மாநிலமாக உள்ளோம்.

ஒட்டுமொத்த இந்தியாவின் எலெக்ட்ரானிக்ஸ் ஏற்றுமதியில் நமது பங்கு 41 சதவீதமாகும். கடந்த நான்கு ஆண்டுகளில், இந்த துறையில் 9 மடங்கு வளர்ச்சியை அடைந்துள்ளோம். இதை அடுத்த நிலைக்கு கொண்டு செல்ல, ரூ.440 கோடி முதலீட்டில், மத்திய அரசுடன் சேர்ந்து 'மின்னணு தயாரிப்பு தொகுப்பு' மேற்கொள்ளப்பட இருக்கிறது. இதில், சூரிய ஒளி சார்ந்த கதிரியக்க சோதனை மையம் - மின்சாதனங்கள் சோதனை மையம் மின்னணு சான்றிதழ் ஆய்வகம் பிசிபி வடிவமைப்பு, விரைவான மாதிரி தயாரிப்பு மையம் திறன் மேம்பாட்டு மையம் தொழிலாளர் வீட்டு வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்வில், அமைச்சர் தா.மோ. அன்பரசன், செல்வப்பெருந்தகை எம்எல்ஏ, தொழில் துறை செயலர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவன செயல் இயக்குநர் பு.அலர்மேல்மங்கை, மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# சென்னை தி.நகர் பாண்டி பஜாரில் தினமும் மதியம் 12 மணிக்கு இலவச உணவு

**சென்னை, டிச.7:**

'பசியை ஒழிக்கும் ஒரு படி' என்ற இலக்குடன் முத்ரா அவுட் ஆஃப் ஹோம் என்ற தொண்டு நிறுவனம் ரோட்டரி கிளப் ஆஃப் சென்னை டவர்ஸுடன் இணைந்து 'அக்ஷயம் 365' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

பட்டினியை முற்றிலுமாக விரட்டுவது இந்த திட்டத்தின் தலையாய நோக்கம் ஆகும். இந்த திட்டத்தின்படி, அடுத்த 365 நாட்களுக்கு தேவைப்படுபவர்களுக்கு உணவு சென்றடைவது உறுதி செய்யப்படும்.

இந்த புதுமையான திட்டத்தை செயல்படுத்த வசதியாக தி.நகர் பாண்டி பஜார் காவல் நிலையத்துக்கு அருகே சென்னை மாநகராட்சி இடம் ஒதுக்கியுள்ளது. இங்கு அமைக்கப்பட்டுள்ள ஸ்டாலில் தினமும் மதியம் 12 மணிக்கு உணவு வழங்கப்படும் என முத்ரா தொண்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக முத்ரா தொண்டு நிறுவன நிர்வாகிகளிடம் கேட்ட போது, "சென்னை டவர்ஸுடன் இணைந்து உணவு வழங்கும் திட்டம் கடந்த 4-ம் தேதி தொடங்கப்பட்டது.

தினமும் 100 பேருக்கு வெஜிடபிள் பிரியாணி, சாம்பார் சாதம், லெமன் சாதம் போன்றவை வழங்கப்படுகிறது. இந்த உணவுகளை கேட்டரிங் சர்வீஸில் பணம் செலுத்தி பெறுகிறோம். இதேபோல், சென்னையில் மேலும் 4 இடங்களில் மதிய உணவு வழங்க திட்டமிட்டுள்ளோம்" என்றார்.

இந்த திட்டம் குறித்து ரோட்டரி நிர்வாகி அனந்த்கிருஷ்ணன் கூறும்போது, "தற்போது தினமும் 100 பேருக்கு இலவச உணவை வழங்கி வருகிறோம். மதியம் 12 மணியில் தொடங்கி அடுத்த அரை மணி நேரத்துக்குள்ளாகவே அனைவரும் உணவை வாங்கிச் செல்கிறார்கள். அடுத்தகட்டமாக 250 பேருக்கு உணவு வழங்கலாம் என திட்டமிட்டுள்ளோம். தற்போது 365 நாட்கள் செயல் படுத்தப்பட உள்ள இந்த இலவச மதிய உணவு திட்டம் தேவைப்பட்டால், தொடர்ந்து நீட்டிக்கப்படும். பசியோடு இருப்பவர்கள் உணவு வாங்கி சாப்பிடும்போது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியும், மனநிறைவும் ஏற்படுகிறது" என்று தெரிவித்தார்.

# திராவிட வெற்றி கழகம் சார்பில் அம்பேத்கர் நினைவு தினம்



**வேலூர், டிச. 7:**

மல்லை சி இ சத்யா தலைமையிலான திராவிட வெற்றி கழகத்தின் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம் சார்பில் சட்ட மாமேதை டாக்டர் பி.ஆர் அம்பேத்கரின் நினைவு நாளை முன்னிட்டு வேலூர் மாநகராட்சியில் உள்ள அம்பேத்கர் உருவ சிலைக்கு மாவட்ட செயலாளர் குட்டி வெங்கடேசன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது . இந்த நிகழ்ச்சியில் கட்சியின் சிறுபான்மை பிரிவு மாநில பொருளாளர் கு.பால் சத்யன் ,காட்பாடி ஈஸ்வரி ஜெயக்குமார் தீப்பெட்டி வேல்முருகன் ரகுநாத் சீலன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

# வீடு கட்ட கடன் வழங்குவதில் நிதி முறைகேடு: 5 பேருக்கு சிறை தண்டனை

**சிவகங்கை, டிச.7:**

இலங்கை தமிழர்களுக்காக காரைக் குடி அருகே பாதரக்குடியில் வீடுகள் கட்ட கடன் வழங்குவதற்காக, கடந்த 1994 பிப்ரவரி மாதத்திலிருந்து 1996 மே மாதம் வரையிலான காலகட்டத்தில் ரூ.43.50 லட்சத்தை தமிழக அரசு ஒதுக்கியது. இந்தத் தொகையை 435 இலங்கை தமிழர்களுக்கு வழங்கியது போல் போலி ஆவணங்களை தயாரித்து, வேறு நபர்க ளின் பெயரில் பணத்தை எடுத்து முறைகேடு செய்யப்பட்டது.

இதுகுறித்து சிவகங்கை லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரித்தனர். அப்போதைய தேவ கோட்டை கோட்டாட்சியர் சையது உசேன், காரைக் குடி வட்டாட்சியர் சர்தார், துணை வட்டாட்சி யர் இப்ராஹிம், கழனிவாசல் கிராமம் நிர்வாக அலுவலர் ராமச்சந்திரன், சிவ கங்கை ஆட்சியர் அலுவலகத்தில் பணி புரிந்த உதவியாளர் தனசேகரன், ஒப்பந்த தாரர் கதிரேசன், இலங்கை தமிழர் மறு வாழ்வு மையத் தலைவராக இருந்த முத்து என்ற சரவணமுத்து மற்றும் மதுரை பாண்டி யன் நகரைச் சேர்ந்த தினேஷ்குமார், திருமங்கலம் மேலகோட்டையைச் சேர்ந்த ராமர் ஆகிய 9 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு சிவகங்கை லஞ்ச ஒழிப்பு சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது. வழக்கு விசாரணையின் போதே சையது உசேன், இப்ராஹிம், ராமச்சந்தி ரன், தனசேகரன் ஆகியோர் உயிரிழந்தனர். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி அனிதா கிறிஸ்டி, குற்றம் சாட்டப்பட்ட சர்தார், கதிரேசன், முத்து என்ற சரவண முத்து ஆகிய 3 பேருக்கு தலா 3 ஆண்டு கள் கடுங்காவல் தண்டனையும், தினேஷ்குமார், ராமர் ஆகிய 2 பேருக்கும் 2 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் விதித்துதீர்ப்பளித்தார்.

# தட்டுப்பாடின்றி யூரியா உரம் கிடைத்திட நடவடிக்கை எடுத்திடுக! விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

**இராமநாதபுரம், டிச.7:**

இராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் யூரியா உரம் தட்டுப்பாடு நிலவுகிறது. தட்டுப்பாடின்றி உரம் கிடைத்திட மாவட்ட நிர்வாகம் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. இதுகுறித்து சங்கத்தின் மாவட்டத் தலைவர் எம்.முத்துராமு கூறியதாவது: இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது பரவலாக நல்ல மழை பெய்துள்ளது. விவசாயிகள் உரமிடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் மாவட்ட முழுவதும் யூரியா உரம் தட்டுப்பாடு உள்ளது. கூட்டுறவு வங்கிகளிலும் தட்டுப்பாடு நிலவுகிறது. உரம் உள்ள சில தனியார் கடைகளில் யூரியா உரம் கேட்டால் தேவையில்லாத சில உரங்களை வாங்கினால் தான் யூரியா உரம் கொடுப்போம் என்று கடைக்காரர்கள் கூறுகின்றனர். இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் செலவாகிறது. விவசாயிகள் வேதனையடைகின்றனர் . எனவே மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட நிர்வாகம் உடனடியாக தலையிட்டு மாவட்ட முழுவதும் தற்போது தேவையான யூரியா உரம் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்களை கூட்டுறவு துறையிலும் விற்பனைக்கு கொடுக்கவும் தனியார் கடைகளில் கேட்கின்ற உரம் மட்டும் கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் . இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ரயிலில் மருத்துவ சேவை: எப்போது தொடங்கியது? எப்படி உதவி கோருவது?

எவ்வித பயணம் என்றாலும் அதில் உடல்நல பாதிப்புகளும் சிலருக்கு ஏற்படுவது உண்டு. நெடு நாட்களாக இருக்கும் உடல் உபாதைகளுக்கு அவரவர் கைகளில் மருந்துகளை எடுத்துச் சென்றாலும் ரயிலில் செல்லும்போது திடீரென ஏற்படும் உடல் நல பாதிப்புகளுக்கு என்ன செய்வதென்றே தெரியாமல் பயணிகள் விழிப்பதுண்டு.

சில நேரங்களில் அந்த பெட்டியில் யாரேனும் மருத்துவர் இருந்தால் அவர் உதவியின் பேரில் ஏதேனும் முதல் உதவிகளை செய்ய முற்படுவர். ஆனால் தற்போது அதற்கு அவசியம் இன்றி ரயில்வேதுறை தங்கள் பயணிகளுக்கு உடல் நலம் குறித்து செய்து தந்துள்ள இந்த வசதி அனைவராலும் பாராட்டு பெற்று வருகிறது.

அதிலும் குறிப்பாக எந்தவித பாதிப்பாக இருந்தாலும் ஓடும் ரயிலில் பாதிக்கப்படும் பயணிகளிடம் அதற்கான கட்டணமாக வெறும் ₹100 வசூலிக்கப்பட இருக்கிறது எனும் என்று வெளியான தகவல் ரயில் பயணிகளுக்கு உற்சாகத்தையும் பாதுகாப்பு உணர்வையும் தந்துள்ளது எனலாம்.

இதற்கு முன்பும் ரயில் பயணிகளுக்கான இந்த மருத்துவவசதிநடைமுறையில் இருந்து வருகிறது. இந்த மருத்துவ வசதி எப்போது துவங்கப்பட்டது தெரியுமா?

உலக அளவில் 1800களின் இறுதியில் ரயில் பயணம் அதிகரித்தபோது அடிப்படை மருத்துவவசதிகள் அவசியமாகி 18701900 ஆண்டுகளில் பல ஐரோப்பிய நாடுகள் முதலுதவி பெட்டிகளை ரயில்களில் கட்டாயமாக்கின.

தொடர்ந்து இந்திய ரயில்வே 1930களில் முதலுதவி பெட்டிகளை ரயில்களில் அறிமுகப்படுத்தியது. அதன் பின்னர் அறிவியல் தாக்கத்தால் மருத்துவ உதவி அமைப்பு சிறிது சிறிதாக விரிவடைந்து 2000களில், முக்கிய நிலையங்களில் மெடிக்கல் எமர்ஜென்சி ரெஸ்பான்ஸ் சிஸ்டம் மற்றும் ரயில்களில் முதலுதவி பெட்டிகள், பயிற்சி பெற்ற பணியாளர்கள், சில சிறப்பு ரயில்களில் மருத்துவர்கள் மற்றும் 108/139 போன்ற அவசர உதவிக்கான எண்கள் சேர்க்கப்பட்டது. திடீர் நெஞ்சு வலி, மயக்கம், இடைவிடாத விக்கல் அல்லது வலிப்பு, சுவாசப் பிரச்னை, ரத்தப்போக்கு குழந்தைக்கான திடீர் மருத்துவம் போன்ற எந்த அவசர மருத்துவ நிலைக்கும் உடனே உதவி கோரலாம்.



பொதுவாக அனைத்து ரயில்களிலும் பாண்டேஜ், அடிப்படை மாத்திரைகள், மருந்துகள் உள்ளடக்கிய முதலுதவிப்பெட்டி (First-Aid Box) உள்ளது. திடீரென மருத்துவ உதவி தேவைப்பட்டால் டிக்கெட் பரிசோதகரிடம் (TTE) தெரிவித்தால் அவர் கட்டுப்பாட்டு அறையை (Control Room-) தொடர்பு கொண்டு மருத்துவருடன் (doctor on-call) பேச வைப்பார். அல்லது தீவிர பிரச்னை ஏற்பட்டால் 139 என்ற எண்ணுக்கு அழைக்கலாம்.

நீங்கள் பயணிக்கும் ரெயில் மற்றும் கோச் எண், பயணி பெயர் பிரச்னையின் நிலைமை ஆகியவற்றை தெரிவிக்க வேண்டும். ரயில்வே கட்டுப்பாட்டு அறை (Control Room) உடனடியாக அருகிலுள்ள அடுத்த நிலையத்துக்கு மருத்துவ அணியை அனுப்பி உதவும். தேவைப்பட்டால் அவசர மருத்துவ வண்டி (Ambulance)க்கும் ஏற்பாடு செய்வார்கள்.

இரயில் பயணம் அல்லது வேறு எந்த வகை பயணமாக இருந்தாலும் நாமே எதிர்பாராதவிதமாக வரும் உடல் பிரச்னைகளின்போது பதட்டம் கொள்ளாமல் அதன் நிர்வாகத்தினரிடம் இருக்கும் மருத்துவ சேவையை பயன்படுத்தி நலமுடன் பயணிக்கலாம்.

### மருந்து பொருள்கள் இலவசம்

லேசான காய்ச்சல், வயிற்று வலி, வாந்தி, உடல் வலி அல்லது ஒவ்வாமை போன்ற பிரச்சனைகள் தீவிரமாக இல்லாவிட்டாலும், பயணிகள் பெரும்பாலும் உடல்நலம் மோசமடைவதை எதிர்கொள்கின்றனர். இதுபோன்ற சூழ்நிலையிலும், பயணிகள் TTE-யிடம் தெரிவிக்க வேண்டும். TTE காவலரின் பெட்டியில் வைக்கப்பட்டுள்ள முதலுதவி பெட்டியிலிருந்து மருந்தின் ஒரு டோஸைஎடுத்துபயணிகளுக்கு வழங்குகிறார், மேலும் இந்த மருந்து முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது. பயணிகள் எந்த விதமான கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.

# இரண்டுக்கு இரண்டு



முதல் பாடவேளை முடிந்து அடுத்த பாடவேளை தொடங்குவதற்கு முன் ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு சலசலப்பு நிச்சயம் இருக்கும். அதைத் தவிர்க்க முடியாது. நாற்பது நிமிடம் ஒரே இடத்தில் உட்கார்ந்து பாடத்தைக் கவனித்த களைப்பைப் போக்கிக்கொள்ள இந்தச் சலசலப்பு இல்லாமல் இருந்தால், குழந்தைகளுக்கு நிச்சயம் கல்வியின் மீது சலிப்புதான் உண்டாகும்.
அப்படித்தான் சலசலப்போடு இருந்த வகுப்பறைக்குள் நுழைந்தேன். எனது வருகையைக் கவனித்த மாணவர்கள், அவரவர் இருக்கையிலிருந்து எழுந்து நின்றார்கள்.
சிலர் நின்றுகொண்டே பேசிக்கொண்டிருந்தனர். ஒரு நிமிடம் நான் அமைதியாக நின்றேன். ஒட்டுமொத்த வகுப்பறையும் அமைதியானது.
அடுத்த ஒரு நிமிட அமைதி வழிபாட்டோடு அனைவரையும் உட்காரச் சொல்லிவிட்டு எனது பாடத்திற்கான முன்னோட்டமாகச் சில விளக்கங்களை வழங்கினேன்.
ஒட்டுமொத்த வகுப்பறையும் எனது பேச்சுக்குக் கட்டுப்பட்டது.
"நாம் ஒவ்வொரு நாளும் புதுப்புது கருத்துக்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். கற்றுக்கொண்டதை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும். அதுவே, சிறந்தக் கல்வி" எனத் தொடங்கினேன்.
எனது பாடம் ஆங்கிலம் என்பதால், இடையிடையே தமிழோடு ஆங்கிலத்தில் விளக்கங்களைக் கொடுத்தேன். அனைத்து மாணவர்களின் கவனமும் என்னை நோக்கியே இருந்தது.
மேசையிலிருந்த புத்தகத்தை எடுத்துபார்த்தேன்.
கரும்பலையில் சில வாக்கியங்களை ஆங்கிலத்தில் எழுதிவிட்டு," இதனை நேர்கூற்றிலிருந்து அயர்கூற்றுக்கு எப்படி மாற்றுவது" என்ற ஆங்கில இலக்கணத்தை அனைவருக்கும் புரியும்படி நடத்தி முடித்தேன்.
எனக்கான விதிமுறையில் நடத்தாமல், மாணவர்களுக்குப் புரியும்படியான புதிய விதிமுறையைச் சட்டென உருவாக்கி நடத்தி முடித்துவிட்டு, அதிலிருந்து ஒரு கேள்வியைக் கரும்பலகையில் எழுதிப்போட்டுவிட்டு," இதனை அயற்கூற்றிலிருந்து நேர்கூற்றுக்கு மாற்றுங்கள் பார்ப்போம்" என அன்பாகச் சொல்லிவிட்டு, வகுப்பறையை ஒரு சுற்றுச் சுற்றி வந்தேன்.
ஆழ்ந்த சிந்தனையோடு அமைதியானது வகுப்பறை.
சில வினாடிகளுக்குப் பிறகு சலசலப்பு தொடங்கியது. இந்தச் சலசலப்பு மாணவர்கள் பாடத்தை உள்வாங்கிக்கொண்டு, புரிந்ததை விடையாய் வெளிப்படுத்தும் மகிழ்ச்சியின் சலசலப்பு என்று, பட்டறிவு உள்ள ஆசிரியர்களுக்கு மட்டுமே தெரியும் என்பதால், மாணவர்களோடு மாணவர்களாய் உட்கார்ந்துகொண்டு, சர்வாதிகாரத்தின் குறியீட்டு வண்ணம் சிவப்பு மையோடு, குழந்தைகளின் நோட்டுப் புத்தகத்தில் உள்ள பிழைகளை வட்டமிட்டுக் காட்டி, விளக்கம் கொடுத்துகொண்டிருந்தேன்.
நாற்பது மாணவர்களில் பெரும்பான்மையானவர்கள் எழுதிக் காட்டிய பதிலுக்கு, இரண்டுக்கு இரண்டு மதிப்பெண்ணைச் சிவப்பு மையால் மாணவர்களின் நோட்டுப் புத்தகத்தில் எழுதி, எனதுக் கையெழுத்தைப் பதிவுசெய்தேன்.
சின்ன சின்னப் பிழைகளைக் கோடிட்டேன். சிலரின் தவறினைச் சுட்டிக்காட்டி, விளக்கம் கொடுத்தேன். முழு மதிப்பெண் பெற்ற மகிழ்ச்சியில், மாணவர்கள் அளவற்ற சந்தோசத்தில் அமைதியான ஆரவாரத்தோடு வகுப்பறையில் இருந்தனர்.
"சார்" எனச் சந்தோஷ் என் அருகில் நின்று, "அம்மா சாப்பாடு கொண்டுவந்திருக்காங்க சார், போயிட்டு வாங்கிட்டுவரேன்னு" அனுமதி கேட்டான்.
" போ" என்று தலையை ஆட்டி அனுமதித்து விட்டு, மாணவர்களின் நோட்டுப் புத்தகத்தினை திருத்துவதில் கவனம் செலுத்தினேன்.
திருத்தப்பட்ட நோட்டோடு, அம்மாவிடம் சாப்பாட்டை வாங்கச் சென்ற சந்தோஷ், அவனின் நோட்டை பிரித்துக் காட்டி, தான் பெற்ற இரண்டுக்கு இரண்டு மதிப்பெண்ணை அம்மாவிடம் காட்டியபோது, முதல் முறையாய் அவன் முகம் மலர்ந்தக் காட்சியைப் பார்த்த நான்" டேய், அமைதியா இரு" என மாணவர்களை அதட்டி அமைதிப்படுத்திவிட்டு, சிரித்த முகத்தோடு ரசித்து மகிழ்ந்தேன்.
தாய்க்கு மகனுக்கும் இடையே, சந்தோஷின் புரிதலோடு கூடிய அறிவின் மதிப்பீட்டின் வெற்றியை, இருவரும் சேர்ந்து சிரித்துக் கொண்டாடிய சில நொடிகளைப் பார்த்து அமைதியாகச் சிரித்து மகிழ்ந்தனர் மாணவர்கள்.



- கயப்பக்கம் இரா.இரமேஷ்

# ஆர்த்தீ



மாலை நேரம், முத்து, தன் மனைவி கற்பகத்தை ஒரு பொக்கிஷம்போல் தாங்கி வீட்டிற்கு அழைத்து வந்தான். அவள் கையில், ஒரு பிஞ்சு தேவதை துயில் கொண்டிருந்தாள். வாசலில் நின்றிருந்த முதியவர் ஒருவர், கற்பகத்திற்கு ஆரத்தி எடுத்து உள்ளே வரவேற்றார்.
முத்து, "பெரியவரே! என் மகளுக்கு ஒரு நல்ல பெயர் வையுங்கள்," என்று கூறிவிட்டு, ஆரத்தித் தட்டில் தன் வியர்வையின் வாசம் மாறாத ஒரு ஐம்பது ரூபாய் நோட்டை வைத்தார். முதியவர் குழந்தையை உற்றுப் பார்த்தார்.
"நான் ஆரத்தி எடுத்து வரவேற்றேன்... ஆகையால் ஆர்த்தி என்று பெயரிடுங்கள்," என்றார். முத்துவும் "சரி," என்று தலை அசைத்தான்.
ஒரு நாள் நடுப்பகல்... முத்துவின் செல்போன் அலறியது. மறுமுனையில் கேட்ட வார்த்தைகள் முத்துவைத் தூக்கி எறிந்தன. கற்பகத்தின் தாய் திடீரென இறந்துவிட்டார் என்ற செய்தி.
முத்து 'தயங்கி, தடுமாறி, அவன் மெதுவாகக் கற்பகத்தின் அருகில் சென்றான்.
"கற்பகம், சீக்கிரம் கிளம்பு... உன் அம்மா வீட்டுக்குப் போறோம்," என்றான் குரல் நடுங்க. ஆனால், கற்பகமோ மிகவும் சாதாரணமாக, "அம்மா நாளைக்கு வருவாங்கன்னு சொன்னாங்களே மாமா. இப்போ கிளம்பணுமா?" என்று கேட்டாள்.
முத்து உடைந்து போனான். அவன் அங்கேயே கதறி அழுதான்.
"என்ன ஆச்சு மாமா! ஏன் இப்படி அழறீங்க?" என்று கற்பகம் கேட்டபோது, முத்துவால் வார்த்தைகளை உச்சரிக்க முடியவில்லை.
"உன்... உன் அம்மா... இனிமேல் வரமாட்டாங்க!" அந்த வார்த்தைகளைக் கேட்ட கற்பகம்... மௌனச் சிலையாய் நின்றாள். "என்ன ஆச்சு கற்பகம்? ஏன் அமைதியா இருக்கே?" என்று முத்து மீண்டும் கேட்டபோது, அந்தச் சிலை பேசத் தொடங்கியது.
"ஒண்ணுமில்ல மாமா... ஆர்த்தி பிறந்தப்ப அங்கிருந்த முதியவர் சொன்னார். 'குழந்தை பிறந்த நேரம் சரியில்லை. உன் தாய் வழியில் ஒரு மரணம் நிகழும்' என்று. அவர் சொன்னது உண்மையாயிடுச்சு மாமா... என் தாயே இறப்பார்னு கனவிலும் நினைக்கல," என்று அவள் சொல்லி கதறி அழுதாள்.
ஆர்த்தியின் பிறப்பு தன் தாயின் மரணத்திற்கு காரணம் என்ற நிழல், கற்பகத்தின் மனதில் ஆழமாகப் படர்ந்தது.
ஆண்டுகள் உருண்டோடின. ஆர்த்தி, தந்தையின் அரவணைப்பு எனும் ஒரே குடைக்குக் கீழ் வளர்ந்தாள். அவள் பருவமும் எய்தினாள்.
ஒரு நாள் மாலை...
பள்ளி முடிந்து ஆர்த்தி சற்று தாமதமாக வீடு திரும்பினாள். வாசலில் நின்றிருந்த கற்பகத்தின் முகம் கோபத்தின் உச்சிக்குச் சென்றது. "இவ்வளவு நேரமாடி வெளியில் சுத்துற?" என்று சமையலறையில் இருந்து தோசைக் கரண்டியை நெருப்பில் பழுக்கக் காய்ச்சி எடுத்து வந்து பிஞ்சு காலில் சூடு வைத்தாள்!
பயங்கர சத்தத்துடன்... ஆர்த்தி அலறினாள். அந்தக் கொடூரச் செயல் ஆர்த்தியின் காலில் மட்டுமல்ல, அவளது மனதிலும் ஒரு நீங்கா வடுவாக பதிந்தது. இதைப் பார்த்த முத்து வெடித்துச் சிதறினான். "என்ன செஞ்ச கற்பகம் நீ? ஒரு தாய்க்குரிய இரக்கம் துளிகூட இல்லையா?" என்று கண்டித்தான். இருவருக்கும் இடையே நடந்த சண்டையில் அவன் வீட்டை விட்டு வெளியேறினான்.
ஆர்த்திக்கு இருந்த ஒரே நம்பிக்கை, அவளது அப்பா மட்டும்தான். அவரும் தன்னை விட்டுப் பிரிந்ததை எண்ணி, அவள் மனது உடைந்த பாத்திரம் போல் ஆனது.
அந்த மன உளைச்சலில் இருந்து வெளிவர, ஆர்த்தி வேலைக்குச் சென்றாள். அங்கு, அவளுடன் வேலை பார்த்த ஒரு வாலிபருடன் நட்பு என்னும் துளிர் காதலாக மலர்ந்தது.
அவனுடைய பின்னணி என்ன, அவன் யார் என்ற எந்த விவரமும் அறியவில்லை என்றாலும், அவன் மேல் ஒரு புது நம்பிக்கை பிறந்தது.
தந்தையின் இழப்பு கொடுத்த வெற்றிடத்தை அவன் நிரப்புவான் என்று நம்பினாள். அவனிடம் முழுமையாகத் தன்னை ஒப்படைத்தாள். அதன் விளைவு: ஆர்த்தி கர்ப்பம் தரித்தாள்.
அதிர்ந்து போய் காதலனிடம் சொன்னாள்.
"பயப்படாதே ஆர்த்தி! உன்னையும், உன் குழந்தையையும் நான் பார்த்துப்பேன்," என்று அவன் தைரியம் கூறினான்.
இந்த விஷயத்தை அறிந்த முத்து, இருவரையும் அழைத்துச் சென்று, திருமணம் செய்து வைத்தார். ஆர்த்திக்குப் பாதுகாப்பான ஒரு உலகம் கிடைத்துவிட்டதாக நினைத்தாள்.
ஆனால், ஒரு நாள்... வேலைக்குப் போனவன் இரவு கடந்தும் வீட்டிற்கு வரவில்லை. மாதங்கள் கடந்தன, ஆர்த்தியும் அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். குழந்தையின் சிரிப்புக்கூட அவளது தனிமையைப் போக்கவில்லை.
"எல்லாமே என்னாலதான்! என் பொண்ணுக்கு இந்த நிலைமை வந்ததற்கு நான்தான் காரணம்," என்று தன்னைத்தானே நொந்துகொண்டு, மன உளைச்சலின் உச்சத்திற்கே சென்ற முத்துவின் இதயம் உடைந்தது. தன் கண்களை நிரந்தரமாக மூடினார்.
முத்துவின் இழப்பு, ஆர்த்தியைத் தனிமையில் ஆழ்த்தியது. இனி எந்த ஒரு ஆதரவும், அரவணைப்பும் இல்லை. ஆனால், இப்போது அவள் தனி இல்லை.
தன் கையில் இருக்கும் குழந்தையைப் பார்த்தாள்.
அந்த நொடி... புயலுக்கு நடுவிலும் அணையாத தீபமாக மாறினாள் ஆர்த்தி. காலில் தாயால் சூடு வைக்கப்பட்ட வடு... அவள் மனதின் வலியை நினைவுபடுத்தியது. தனக்கு இழைக்கப்பட்ட அநீதி... அவள் கோபத்தைத் தூண்டியது.
இனி அழுகை இல்லை.
தன் மகனுக்காக, அவள் போராட்டத்தின் மறு உருவமாக எழுந்தாள்..



-டாக்டர் ப.பாண்டியராஜன்
மதுராந்தகம்

# வள்ளுவத்தில் வியாசர்



▪கே.பானுமதி நாச்சியார்
சிவகிரி

## 7.சல்லியன்

இணைத்துணைத்
தென்படுதொன்றி ல்லை
விருந்தின் துணைத்துணை
வேள்வி பயன்

என்பது வள்ளுவம்.

விளக்கம்

விருந்தினராக வந்தவரை பேணுவதும் ஒரு யாகம் போன்றது அதனைச் செய்வதால் வரும் நன்மை என்பதை அளவிட முடியாது.

ஆனால் வியாசர் சல்லியன் என்னும் கதாபாத்திரத்தின் வழியாகச் சொல்வது விருந்தோம்பலைச் செய்பவரின் தகுதி அறியாது ஏற்கும் விருந்தினால் ஏற்படும் நன்மையை விடத் தீமையே அதிகம். அது அவனது உயிரையும் கொல்லும் என்பது ஆகும்.

யார் இந்த சல்லியன்?

பாண்டுவின் இரண்டாவது மனைவியாகிய மாதுரியின் சகோதரன் அவர்களது மகன்களாகிய சகாதேவன் நகுலனின் தாய்மாமா. மத்திர நாட்டின் மன்னன். சிறந்த போர் வீரன், தேரோட்டி, வில்லாளியும் கூட குருசேத்திரப் போரில் பாண்டவர்களுக்கு எதிராக கௌரவர்களோடு சேர்ந்து போரிட்டு அழிந்தவன்.

கர்ணனைப் போலவே செஞ்சோற்று கடன் தீர்த்தவன். என்றாலும் இவனே இச் சொற்றொடருக்கு மிகவும் பொருத்தமானவன் ஆவான்.

துரியோதனன் விருந்தோம்பிய பாங்கினால் அவனுக்காகப் போரிட நேரிட்டது எப்படி என்பதையும் காண்போம்.

பாண்டவருக்கும் கௌரவர்களுக்கும் போர் என்பது முடிவாகி இருதரப்பினரும் போருக்கு வேண்டி படைகளைத் தத்தம் பக்கம் திரட்டத் தொடங்கினர்.

சல்லியனும் தன் மருமக்களுக்கு உதவுவதற்காகப் படைகளைத் திரட்டி கொண்டு வந்து கொண்டிருந்தான். பாண்டவர்கள் படை திரட்டும் இடத்தை அடையும் முன்னரே ஒரு பாலை வனத்தைக் கடக்க வேண்டி இருந்தது. படைகள் சோர்வுற்றன.

இதனை அறிந்த துரியோதனன் சல்லியன் பெரிய வில்லாளி என்பதால் தனக்காகத் தான் அவன் போர் செய்ய வேண்டும் என விரும்பி அவனைத் தன் பக்கம் கொள்ளுதல் வேண்டும் என நினைத்தான். அதற்கு ஏற்றார் போல் சோர்வுற்ற படைகளால் துன்புற்ற சல்லினுக்குப் பசி மயக்கத்தையும் தாக மயக்கத்தையும் தணித்து, உள்ளம் மகிழ்ச்சி அடையும்படிச் செய்தான்.



சல்லியனும் உணர்ச்சி வயப்பட்டு தாகத்திற்கு இளநீர், குதிரைகளுக்கு அருகம்புல், தண்ணீர், படைகளுக்கு அறுசுவை உணவு எனக் கிடைத்த விருந்து உபசாரத்தில் பரவசமடைந்து இத்தகைய அறச்செயலைச் செய்த வள்ளல் யாரோ? எதன் பொருட்டு இதனைச் செய்தான் என்பது கூடத் தெரியவில்லையே? அந்த அறவோனை வாயும் வயிறும் மனமும் வாழ்த்தும். இதற்கு நன்றிக் கடனாக, செஞ்சோற்றுக் கடனாக என் உயிரையும் தந்தால் கூட அது கைம்மாறாகாது என வாய்விட்டுப் புலம்பினான்.

இதற்காகவே காத்திருந்த துரியோதனன் வெளிப்பட்டான். "நீயா?" என்ற சல்லியனைப் பார்த்து "மாமா! இதற்குக் கைம்மாறாக தாங்கள் வரப் போகும் போரில் எனக்குத் துணையாக நின்றால் போதும்!" என்றான்.

விருந்துண்ட மகிழ்ச்சியில் விருந்தின் தன்மை அறியாது கூறிய சொற்களால் அவனால் ஒன்றும் செய்ய முடியாது, கௌரவர்கள் பக்கம் நின்று தன் உயிரை இழந்தான். வாய்மை காத்த செயல்தான்!

இதனை வில்லிபுத்தூரார் வில்லிபாரதத்தில் இவ்வாறு சொல்வார்

விருந்தினால் மருண்டு அவற்கே படைபடு சேனை யோடும் படைத்துணை ஆகினானே!

தன் எதிரேயோ அருகிலோ கோபத்துடன் யார் வந்தாலும் அவரது பலத்தைக் கிரகிக்கும் வரம் பெற்றவன் சல்லியன். மேலும் யார் தன்னுடன் வெறுப்புடன் போர் செய்தாலும் அவனது உள்ளத்துள் அசுரபலம் பெருகிக்கொண்டே போகும். எனவே எதிரியை வீழ்த்துவது எளிது. ஆனால், இந்த இயல்பை, (இயல்பான வரத்தை) அறியாதவன் சல்லியன்.

இதனைத் துரியன் அறிந்திருந்தால், முதல் நாளே சல்லியனை அனுப்பிப் போரை முடித்து இருப்பான்.

இதனைக் கண்ணன் மட்டுமே அறிந்திருந்ததால் தன் தாய் மாமனாக இருந்தும் துரியோதனன் பக்கம் செஞ்சோற்றுக் கடனுக்காகச் சேர்ந்தேன் என்று சொல்லிப் பாண்டவர் பாசறைக்கு வரும் போது சகாதேவனும் நகுலனும் வெறுப்புற்றனர். ஆனால் கண்ணன் மட்டும் "அதனால் என்ன! கௌரவர்களோடு இவனும் வீழ்வான்!" என்றார்.

மாவீரன் ஆன சல்லியனின் வலிமை தெரியாமல் 17ஆம் நாள் போரில் கர்ணனைப் போலவே இவரையும் போருக்கு அனுப்பத் தயாரானபோது, கர்ணன் தன் தேரோட்டி வலிமை மிகுந்தவன் இல்லை என்பதைத் துரியோதனனிடம் சொல்லி "துரியோதனா! அர்ஜுனனைக் கொல்ல வேண்டுமென்றால் வாசுதேவரைப் போலச் சாரதி எனக்கும் வேண்டும்!" என்றான். தேரோட்டுவதில் நிகரான சல்லியனும் வாசுதேவருக்கு இணையானவன் என்று துரியன் பெருமையோடு சொல்லிக்கொண்டு கர்ணனுக்குத் தேரோட்டியாக அனுப்பினான்.

ஆனால் பாண்டவர்கள் சல்லியனிடம் வந்து வேண்டினர். அதாவது "கர்ணனுக்குத் தேரோட்டியாக நீ செல்லும்போது அர்ஜுனனின் பெருமைகளைச் சொல்லி சொல்லிக் கர்ணனுக்கு வெறுப்பூட்டுவாயாக!" என்பதுதான் அது.

ஆனாலும் கௌரவர்களுக்காக மிகவும் சிறப்புடன் போர் செய்தான் சல்லியன்.

கர்ணனுக்குச் சாரதியான பின் "கர்ணா! நாகாஸ்திரத்தை எதிர்க்கும் வலிமையான ஆயுதம் அர்ஜுனனிடம் இல்லை! நீ நாகாஸ்திரத்தைக் குறி வைக்கும் பொழுது அர்ஜுனனின் மார்புக்கு வைக்காமல் உதரத்திற்கு வை! அங்கே சாரதியாக இருப்பவன் வாசுதேவன். ஏதாவது செய்து அர்ஜுனனைக் காப்பாற்றவே செய்வான்!" என்று அறிவுரை கூறினான். ஆனால், கர்ணனோ "அது வீரனுக்கு மரபல்ல!" என்று மறுத்தான். திரும்பவும் இரண்டாவது முறையாகப் நாகாஸ்திரத்தை எய்துவாய் கர்ணா!"என்ற பொழுது அவனால் எய்த முடியவில்லை. ஏனென்றால், தன் தாயாகிய குந்திக்கு "அர்ஜுனன் மீது இரண்டாவது தடவையாக நான் நாகாஸ்திரத்தை ஏவமாட்டேன்!" என்று சத்தியம் செய்து கொடுத்து இருந்தான் அல்லவா! அதனால் அவன் மறுத்தான். இதனால் வெறுப்புற்ற சல்லியன், கர்ணனின் தேர்ச்சக்கரம் சகதியில் மாட்டிக் கொண்டிருக்கும் பொழுது வெளியேறுகிறான்.

இதனால் விழுந்த கண்ணனைக் கண்டு துரியன் சல்லியன் மீது கோபப்படுகிறான். "உன்னை வாசுதேவருக்கு நிகராகச் சொன்னேனே, ஆனால் நீ கர்ணனின் மரணத்திற்கு வழிவகுத்தாயே!" என்று புலம்பும் பொழுது சல்லியனும் "வாசுதேவனின் வார்த்தைக்கு அர்ஜுனன் கட்டுப்பட்டான்! ஆனால், கர்ணன் என் வார்த்தைக்குக் கட்டுப்படவில்லை! அவனது ஆணவமே அவனது அழிவிற்குத் துணை நின்றது!" என்றவுடன் இவனது பக்கம் உள்ள நியாயத்தைப் புரிந்து கொண்டாலும் வாசுதேவர் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் நீ செய்தது போல் செய்ய மாட்டார் என்று கூறினான். தன் தவறுக்கு மன்னிப்பு கேட்டான் சல்லியன்.
துரியன் மறுநாள் பதினெட்டாம் நாள் போர்க்களத்தில் கௌரவ தளபதியாகச் சல்லியனை நிலைநிறுத்தினான்.

கண்ணனும் "தருமர் மட்டுமே சல்லியனை எதிர்த்து போரிடட்டும்!" என்றார்.

"யுதிஷ்டா! இயல்பாகப் போர் புரிவாயாக! விருப்பு, வெறுப்பு எதையும் காட்ட வேண்டாம். கோபப்படாமல் இரு!" என அறிவுரையும் சொல்லி அனுப்பினார்.


எதிரேயோ அருகேயோ இருப்பவர் சல்லியன் மீது கோபப்பட்டால் மட்டுமே, அவர்கள் கோபப்பட கோபப்பட அவனது அசுரபலம் பெருகிக்கொண்டே போகும். ஆனால் தருமரோ வெறுப்பைக் காட்டாமல் அமைதியாக, இயல்பாகப் போர் புரிந்ததால் சல்லியன் தன் வலிமையை இழந்தான். தருமரால் கொல்லப் பட்டான்.

விருந்தோம்பலின் தன்மையறியாது தானும் தன் சுற்றமும் படைசூழ தன்னுயிரையும் இழந்தான்..

- தொடரும்

# அதிசய கோவில்கள்....!!!

## இந்த தூண் விழுந்தால் உலகமே அழிந்து விடும்...!



- மகாராஷ்டிரா மாநிலத்தில் தானே மாவட்டத்தில் அமைந்துள்ள கிரேஷ்வர் எனும் கிராமத்தில் காணப்படும் ஒரு சிறப்பு வாய்ந்த கோவில்தான் 'ஹரிஷ்சந்திரகட் கோவில்". இந்த கோவில் மிகவும் பழமை வாய்ந்ததாகும்.
- இது 6–ஆம் நூற்றாண்டில் கலாசூரி பேரரசால் கட்டப்பட்டதாகும். இந்த கோவிலுக்கு அருகில் தான் 'கேதாரேஸ்வர்" என்ற இந்த அதிசய குகைக் கோவில் உள்ளது.
- இந்த குகைக்கு உள்ளே சென்றால் நீரால் சூழப்பட்ட 5 அடி உயர சிவலிங்கத்தைக் காணலாம். அதுமட்டுமல்லாது லிங்கத்தை சுற்றியுள்ள தண்ணீரைக் கடந்துதான் லிங்கத்தை அடைய வேண்டும்.
- சிவலிங்கத்தை சுற்றி காணப்படும் நீர் மிகவும் குளிர்ச்சியாக இருக்கும் காரணத்தினால் இதை கடந்து லிங்கத்தை அடைவது சற்று கடினம். மழைக் காலங்களில் குகைக்கு அருகில் கூட செல்ல முடியாது.
- சிவலிங்கத்தை சுற்றி நான்கு தூண்கள் இருந்துள்ளன. இவற்றில் மூன்று தூண்கள் ஏற்கனவே சேதமடைந்து விழுந்த நிலையில் ஒரே ஒரு தூண் மட்டுமே உள்ளது. இந்த தூண் எப்போது சேதமடைந்து கீழே விழுகிறதோ அன்று உலகம் அழிந்துவிடும் என்று நம்பப்படுகிறது.
- சிவலிங்கத்தை சுற்றியுள்ள நான்கு தூண்களை 'சத்ய யுகம், த்ரேதா யுகம், த்வாபர யுகம், கலியுகம்" ஆகிய நான்கு யுகங்களை தெளிவுப்படுத்துவதாக கூறப்படுகின்றது.
- ஒவ்வொரு யுகமும் முடிவடையும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு தூணாக இடிந்து விழும். அதன்படி தற்போதைய 3 தூண்கள் இடிந்துவிட்ட நிலையில் கலியுகத்தின் முடிவில் நான்காவது தூணும் இடிந்து உலகம் அழிந்துவிடும் என நம்பப்படுகிறது.

## பிரசாதமாக வழங்கப்படும் தங்கம் !



- மத்தியப்பிரதேச மாநிலத்தில் வடமேற்கு பகுதியில் அமைந்திருக்கிறது ரத்லம். ரத்னபுரி என்ற வரலாற்று பெயர்கொண்ட இந்த ஊர் தங்கத்திற்கு பெயர்பெற்றது.
- இங்குள்ள மகாலஷ்மி கோவிலில் தங்கம் பரிசாக பக்தர்களுக்கு வழங்குகிறார்கள்.
- பக்திக்காக மட்டுமல்லாது, எளியோர்களின் வறுமையினை நீக்குவதற்கு கட்டப்பட்ட இந்த கோவிலுக்கு வருவோர் தாங்கள் செலுத்தும் காணிக்கையினை பணமாக செலுத்துவதில்லை.
- காணிக்கை செலுத்துபவர்கள் தங்களால் இயன்ற அளவிற்கு தங்கம் மற்றும் வெள்ளிகளாக காணிக்கையினை செலுத்துகின்றனர்.
- வருடம் முழுவதும் பக்தர்கள் செலுத்தும் தங்கம், வெள்ளியானது மலை போன்று குவித்து வைக்கப்பட்டிருக்கும்.
- மற்ற கோவில்களில் சேரும் காணிக்கையை அந்தந்த கோவில்களின் திருப்பணிகளுக்காக செலவு செய்வார்கள்.
- ஆனால், இக்கோவிலில் சேர்ந்த காணிக்கையான தங்கம் மற்றும் வெள்ளியினை தீபாவளி நாளன்று கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு கொடுக்கப்படுகிறது.
- இதுபோல் ஒவ்வொரு வருடமும் தீபாவளியன்று பக்தர்களுக்கு பிரசாதமாக தங்கம் வழங்கப்படுகிறது. இந்த தங்க பிரசாதம் தினந்தோறும் வழங்கப்படுவதில்லை.
- இங்கு பிரசாதமாக தரப்படும் தங்கத்தை மக்கள் இறைவனின் அருளாக பார்க்கின்றனர். அதுமட்டுமின்றி இந்த தங்க பிரசாதத்தை யாரும் விற்பது கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

## நீரில் நனையும் சிவலிங்கம்..!



- அருள்மிகு ஸ்ரீஜம்புகேஸ்வரர் கோவில் திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் அருகிலுள்ள திருவானைக்காவல் அமைந்துள்ளது.
- இந்த ஆலயத்தில் ஜம்புகேஸ்வரரும், அகிலாண்டேஸ்வரியும் அருள்புரிகின்றனர். இக்கோவிலின் கோபுரமும் மிக அழகாக காட்சியளிக்கும்.
- இக்கோவில் மூலவர் ஸ்ரீஜம்புகேஸ்வரர் லிங்கத்தைச் சுற்றி எப்பொழுதும் தண்ணீர் ஊற்றிக்கொண்டேயிருக்கும்.
- லிங்கம் இருக்குமிடம் தரைமட்டத்திற்குக் கீழே இருப்பதால் எப்போதும் தண்ணீர் கசிவு இருந்துகொண்டே இருக்கும்.
- லிங்கம் தண்ணீரில் மூழ்கி மறையாமலிருக்க நீரை அடிக்கடி முகந்து வெளியேற்றிக் கொண்டிருப்பார்கள். இந்த சிவலிங்கத்தை கருவறையின் மேற்குப் பகுதியில் உள்ள சாளரத்தின் வழியாகத் தான் தரிசிப்பார்கள்.
- இக்கோவில் முற்றிய கோடையில், காவேரி வறண்டிருக்கும் நேரங்களிலும், இந்நீர்க்கசிவு வற்றுவதில்லை என்பது இதன் சிறப்பாகும்.
- ஐப்பசி மாதம் மழைக்காலம் என்பதால், வழக்கத்திற்கு மாறாக கருவறைக்குள் தண்ணீர் அதிகமாக இருக்கும். வைகாசி மாதத்தில் தண்ணீர் ஓரளவிற்கு குறைவாக காணப்படும்.

**A s Govinda rajan**
KODAMBAKKAM, CHENNAI

# தினம் ஒரு தலைவர்கள் — அப்துல் கபூர் வரலாறு



அப்துல் கபூர் 1918 - 10 ஜூலை 2004) ஒரு இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் அரசியல்வாதி ஆவார், இவர் பீகாரின் 13வது முதலமைச்சராக 02 ஜூலை 1973 முதல் 11 ஏப்ரல் 1975 வரை பணியாற்றினார்; மற்றும் ராஜீவ் காந்தியின் அரசாங்கத்தில் கேபினட் அமைச்சராகவும் பணியாற்றினார். சுதந்திரப் போராட்டங்களில் தீவிரமாகப் பங்கேற்று சிறைவாசம் அனுபவித்தார்.

பிறப்பும் கல்வியும்

அவர் பீகாரின், கோபால்கஞ்ச் மாவட்டத்தில் உள்ள சரேயா அக்தேரியார் எனும் சிறிய கிராமத்தில், ஒரு எளிய விவசாய குடும்பத்தில் பிறந்தார். கோபால்கஞ்ச் மாவட்டத்தில் தனது ஆரம்பக் கல்வியை முடித்த அவர், உயர் கல்விக்காக பாட்னாவிற்கும், பின்னர் அலிகாருக்கும் குடிபெயர்ந்தார். அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகத்தில் தனது எம்.ஏ மற்றும் சட்டத்தை முடித்தார்.

வெள்ளையனே வெளியேறு இயக்கம்

கபூர் இந்திய சுதந்திர இயக்கத்தின் போது பீகார் காங்கிரஸின் புகழ்பெற்ற இளந்தலைவர்களில் ஒருவராக இருந்தார். பின்னால் பீகார் முதல்வர்களான பிந்தேஸ்வரி துபே, பகவத் ஜா ஆசாத், சந்திரசேகர் சிங், சத்யேந்திர நாராயண் சின்கா, கேதார் பாண்டே ஆகியோருடன் பயணித்தார். மேலும் இந்திய தேசிய காங்கிரஸின் தேசியத் தலைவர் சீதாராம் கேஸ்ரி ஆகியோருடன் சுதந்திரப் போராட்டத்தின் போது பங்கேற்றார்.

சட்டமன்றத்தில்

1952 ஆம் ஆண்டு பீகாரின் பரேலி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வென்று சட்ட மேலவை உறுப்பினரானார். தொடர்ந்து பீகார் சட்ட மேலவை தலைவரானார். 1957, 1977, 1980 ஆம் ஆண்டுகளிலும் பீகாரின் பரேலி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வென்று சட்ட மேலவை உறுப்பினரானார். 1962 ஆம் ஆண்டு பீகாரின் கோபால்கஞ்ச் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வென்று சட்ட மேலவை உறுப்பினரானார்.

முதலமைச்சர்

1973 ஜூலை 02 முதல் 1975 ஏப்ரல் 11 வரை பீகார் முதல்வராக இருந்தார்.

நாடாளுமன்றத்தில்

1984 ஆம் ஆண்டு சீவான் மக்களவைத் தொகுதியில் மக்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் பிரதமர் ராஜீவ் காந்தியின் அமைச்சரவையில் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சராகவும் இருந்தார். 1991 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளில் கோபால்கஞ்ச் நாடாளுமன்றத் தொகுதிகளில் இருந்து காங்கிரஸ் மற்றும் சமதா கட்சி சார்பில் மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். உள்துறைக்குழு மற்றும் ஆலோசனைக்குழு உறுப்பினராக இருந்தார். அவரது அரசியல் பாரம்பரியத்தை அவரது பேரன் ஆசிப் கபூர் முன்னெடுத்துச் செல்கிறார். ஆசிப் கபூர் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராகவும், பீகார் பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளராகவும் உள்ளார். 2010 பீகார் சட்டமன்றத் தேர்தலில் பீகாரின் கோபால்கஞ்ச் மாவட்டத்தில் உள்ள பராலி தொகுதியில் இந்திய தேசிய காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்டார்.

இறப்பு

கபூர் 10 ஜூலை 2004 அன்று பாட்னாவில் இறந்தார்.

# ஜி.வி.பிரகாஷ் நடித்துள்ள படத்துக்கு 'ஹேப்பி ராஜ்'




பல படங்களுக்கு இசையமைப்பாளராக பணிபுரிந்து வந்தாலும், நாயகனாகவும் கவனம் செலுத்தி வருகிறார் ஜி.வி.பிரகாஷ். சில மாதங்களுக்கு முன்பு பிரதீப் ரங்கநாதனிடம் உதவி இயக்குநராக பணிபுரிந்த மரியா இயக்குநராக அறிமுகமாகும் படத்தில் நாயகனாக நடித்து வந்தார். இப்படத்தினை பியாண்ட் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்து வந்தது.

இப்படத்துக்கு 'ஹேப்பி ராஜ்' எனத் தலைப்பிட்டுள்ளது படக்குழு. இதன் டைட்டில் லுக்கை மட்டும் தற்போது வெளியிட்டுள்ளார்கள். இப்படத்தில் அப்பாஸ், ஜார்ஜ் மரியான், கௌரி ப்ரியா, ப்ரார்த்தனா, அதிர்ச்சி அருண், மதுரை முத்து, சோஃபா பாய் ரசூல் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இயக்குநர் மரியா இளஞ்செழியன் தலைப்பின் பின்னணி குறித்து கூறும்போது, "'ஹேப்பி ராஜ்'" என்ற தலைப்பு ஒரு எளிய ஆனால் ஆழமான சிந்தனையில் இருந்து உருவானது. சினிமாவை மகிழ்ச்சியின் கொண்டாட்டமாக மாற்ற வேண்டும் என்ற விருப்பம். என் நாயகனுக்கு 'ஹேப்பி' என்று பெயர் வைக்கப்பட்டதற்குக் காரணம் இருக்கிறது. அந்த பெயர் கதையின் மைய உணர்வை எப்போதும் நினைவூட்டும் ஒரு குறியீடு ஆகும்.

முழுக் கதையிலும் 'ஹேப்பி'என்ற வார்த்தை நூற்றுக்கும் மேற்பட்ட முறை ஒலிக்கும்; அது வெறும் சொல் அல்ல, நம்பிக்கையூட்டும் ஒரு தாள லயம் சேர்ந்த மந்திரம் போன்றது. இந்தக் கதை அடிப்படையில் தூய மற்றும் உண்மையான மகிழ்ச்சியை மையக் கருவாகக் கொண்டது; அதே சமயம் வாழ்க்கையின் பல்வேறு உணர்வுகளையும் தொடுகிறது. "ஹேப்பி ராஜ்" படம் மகிழ்ச்சியான மற்றும் ஊக்கமளிக்கும் ஒரு அனுபவமாக அமையும்; மனதை நிம்மதியாக்கும். கோபம், புன்னகை, மகிழ்ச்சி அனைத்தும் நம் கையில் தான் உள்ளது என்பதை உணர்த்தும். வாழ்க்கையில் நம்பிக்கையுடன் போராடுபவர்களுக்கான ஒரு படைப்பு" என தெரிவித்தார்.

'ஹேப்பி ராஜ்' படத்தின் இசையமைப்பாளராக ஜஸ்டின் பிரபாகரன் பணிபுரிந்து வருகிறார். இதன் விளம்பரப்படுத்தும் பணிகள் மும்முரமாக தொடங்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டு தொடக்கத்தில் 'ஹேப்பி ராஜ்' படத்தினை வெளியிட படக்குழு முடிவு செய்திருக்கிறது.



தமிழ் தொலைக்காட்சியில் வெற்றிகரமாக ஒளிபரப்பாகி வரும் சீரியல் வீரா. இந்த சீரியலில் பிருந்தா என்கிற கதாபாத்திரத்தில் நடித்து வருபவர் ஹசின். இவர் சிறகடிக்க ஆசை சீரியலிலும் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் ஹசின் தனது லேட்டஸ்ட் புகைப்படங்களை தொடர்ந்து அதில் பதிவு செய்து வருகிறார். இந்த நிலையில், நடிகை ஹசின் வெளியிட்டுள்ள அவருடைய லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்கள் இதோ:

# அம்மா சென்டிமென்டை ஆழமாகச் சொன்ன படம் 'அம்மா'



மலையாள சினிமாவின் முதல் சூப்பர் ஸ்டார் திக்குரிசி சுகுமாரன். சுமார் 700 படங்களுக்கு மேல் நடித்திருக்கும் அவர், வாங்கியிருக்கும் விருது பட்டியலே மீக நீளமானது. சில படங்களை இயக்கியும் உள்ள அவர் நடித்து, தமிழ், மலையாளத்தில் உருவான படம், 'அம்மா'. அம்மாவின் தியாகத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவான இப்படத்தைத் தயாரித்தவர் டி.இ. வாசுதேவன். இவர், அப்போது தமிழ்ப் படங்களை, தனது அசோசியேட்டட் பிக்சர்ஸ் சார்பில் கேரளாவில் விநியோகித்து வந்தார்.அப்போது தமிழ் நாட்டைச் சேர்ந்த சில தயாரிப்பாளர்களுடன் பழக்கம் ஏற்பட்டது. அவர்கள் உதவியுடன் தயாரிப்பாளர் ஆக முடிவு செய்தார், வாசுதேவன். அப்படி அவர் தயாரித்த முதல்திரைப்படம், 'அம்மா'. கே.வேம்பு இயக்கினார். திக்குரிசி சுகுமாரன் ஹீரோவாக நடித்த இப்படத்தில் திருவிதாங்கூர் சகோதரிகளில் ஒருவரான, லலிதா நாயகியாக நடித்தார். அப்போது தமிழிலும் லலிதா பிரபலமானவராக இருந்ததால் தமிழிலும் படத்தை உருவாக்கினர். அம்மாவாக ஆரன்முளா பொன்னம்மா நடித்தார்.

லட்சுமி (ஆரன்முளா பொன்னம்மா) தனது மகன் வேணு (திக்குரிசி), மகள் சாரதா (பி.எஸ்.சரோஜா) ஆகியோரை வளர்க்கப் பொருளாதார ரீதியாகப் போராடுகிறார். மேற்படிப்புக்காக சென்னை செல்லும் மகன் வேணு, பணக்கார தொழிலதிபரின் மகள் ராதாவை (லலிதா) காதலிக்கிறார். படிப்பை முடித்துவிட்டு திரும்பும் வேணு, அம்மாவிடம் தனது காதல் கதையை சொல்கிறார். சமூக அந்தஸ்தை காரணம் காட்டி மறுக்கும் லட்சுமி, ஒரு கட்டத்தில் மகனுக்காக ராதாவின் வீட்டில் பெண் கேட்கிறார். ராதாவின் பணக்காரத் தந்தை அவமானப்படுத்துவதால், மனம் உடைகிறார். இதற்கிடையே, ராதாவும் வேணுவும் வீட்டுக்குத் தெரியாமல் திருமணம் செய்துகொள்கிறார்கள். லட்சுமி, அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கிறார்.

வேணுவுக்கு சென்னையில் வேலை கிடைக்கிறது. கிராம வாழ்க்கையை சமாளிக்க முடியாமல் ராதாவும் சென்னை செல்கிறார். மகனின் படிப்பு செலவுக்காக வாங்கிய கடனுக்காக வீட்டை விட்டு வெளியேற்றப்படுகிறார், லட்சுமி. சென்னைக்கு வரும் அவரை, ராதா மோசமாக நடத்துகிறார். அங்கிருந்தும் வெளியேறும் லட்சுமி, சாலை விபத்தைச்சந்திக்கிறாள். வேலை செய்யும் இடத்தில் மகனுக்குத் திருட்டுப் பட்டம் கிடைக்கிறது. பிறகு அம்மா என்ன மாதிரியான தியாகங்களைச் செய்கிறார் என்று கதை போகும்.

அம்மா சென்டிமென்டை ஆழமாகச் சொன்ன திரைப்படம் இது. கதை எதார்த்தத்தில் இருந்து விலகினாலும் சுவாரஸ்யமாக இருப்பதாக அப்போது விமர்சிக்கப்பட்டது. இதில் எம்.என்.நம்பியார், டி.எஸ்.துரைராஜ், டி.எஸ்.முத்தையா, பி.எஸ்.சரோஜா, சாந்தகுமாரி என பலர் நடித்தனர். தமிழ் வசனங்களை, எழுத்தாளர் சாண்டில்யன் எழுதினார்.2 மொழிக்கும் வி.தட்சிணாமூர்த்தி இசை அமைத்தார். மொத்தம் 14 பாடல்கள். இதில் பெரும்பாலானவற்றில் இந்தி சாயல் இருந்ததாகக் கூறப்பட்டது. இசை அமைப்பாளர் தட்சிணாமூர்த்தி இப்படம் மூலம் பின்னணிப் பாடகராகவும் அறிமுகமானார்.

இதில், ஆரன்முளா பொன்னம்மாவின் நடிப்பு பாராட்டப்பட்டது. 1952-ம் ஆண்டு இதே தேதியில் (டிச.6) வெளியான இப்படம் தமிழ், மலையாளத்தில் வரவேற்பைப் பெற்றது.



தமிழ், தெலுங்கு மட்டுமின்றி ஹிந்தியிலும் பாப்புலர் நடிகையாக இருப்பவர் ரகுல் ப்ரீத் சிங். இவர் தமிழில் தீரன் அதிகாரம் ஒன்று, NGK உள்ளிட்ட படங்களில் நடித்து பிரபலமானார். கடைசியாக இவர் இந்தியன் 2 படத்தில் ஒரு முக்கிய ரோலில் நடித்து இருந்தார். ஹிந்தியில் தற்போது De De Pyaar De 2 படத்தில் நடித்து வருகிறார். திருமணத்திற்கு பின்பும் நடிப்பதில் பிஸியாக வலம் வரும் ரகுல், தற்போது மாடர்ன் லுக்கில் இருக்கும் அழகிய லேட்டஸ்ட் போட்டோஸ் இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது.

# அஜித்துடன் இணையும் விஜய் சிவா



அஜித்தை வைத்து இயக்குநர் ஏ.எல். விஜய் ஓர் ஆவணப் படத்தையும், இயக்குநர் சிவா விளம்பர படமொன்றையும் இயக்கி வருகிறார்கள்.

அஜித் - ஆதிக் ரவிச்சந்திரன் படத்தின் அதிகாரபூர்வ அறிவிப்பு அடுத்த மாதம் வெளியாகும் என்பது உறுதியாகி இருக்கிறது. அதற்கு முன்னதாக மலேசியாவில் நடைபெற்று வரும் கார் ரேஸ் பந்தயத்தில் ஈடுபட்டு வருகிறார் அஜித்.

அவருடன் பயணித்துள்ள குழுவில் இயக்குநர் ஏ.எல்.விஜய் மற்றும் இயக்குநர் சிவா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.





அஜித் விஜய் சிவா மூவரும் இடம்பெற்றுள்ள புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன. இது தொடர்பாக விசாரித்தால், அஜித்தின் அணிக்கு ஸ்பான்சர் செய்துள்ள குழு ஒன்றுக்கு விளம்பரப் படம் ஒன்றை இயக்கி வருகிறார் சிவா. இதற்கான பணிகளில் அவர் ஈடுபட்டு வருகிறார்.

அதே போல் இயக்குநர் விஜய்யோ, அஜித்தின் கார் ரேஸை ஒரு ஆவணப் படமாக உருவாக்கி வருகிறார். இதில் விஜய்யின் குழு மும்முரமாக பணிபுரிந்து வருகிறது. கார் ரேஸுக்கு இடையே அஜித் ரசிகர்களை சந்திப்பது மற்றும் ரேஸுக்கு முன்பு அஜித் தயாராவது என அனைத்தையும் படமாக்கி வருகிறார்கள்.

இந்த இரண்டு படங்களுமே எப்போது, எதில் வெளியாகும் என்பது உறுதியாகவில்லை.

# ‘ஹைக்கூ’ முதல் பார்வை வெளியீடு




ஹரிஹரன் ராம் இயக்கிய ‘ஜோ’, சீனு ராமசாமி இயக்கிய ‘கோழிப்பண்ணை செல்லதுரை’ ஆகிய திரைப்படங்கள் மூலம் பிரபலமான ஏகன், அடுத்து நடிக்கும் படத்தை யுவராஜ் சின்ன சாமி இயக்குகிறார். விஷன் சினிமா ஹவுஸ் சார்பில் டாக்டர் அருளானந்து மற்றும் மேத்யூ அருளானந்து தயாரிக்கின்றனர். தெலுங்கு நடிகை ஸ்ரீதேவி, மலையாள நடிகை ஃபெமினா ஜார்ஜ் கதாநாயகிகளாக நடிக்கும் இப்படத்தின் தொடக்க விழா சமீபத்தில் நடந்தது.

இந்நிலையில் தயாரிப்பாளர் மேத்யூ அருளானந்துவின் பிறந்த நாளை முன்னிட்டு படத்தின் தலைப்பையும் முதல் தோற்றப் போஸ்டரையும் படக்குழு வெளியிட்டுள்ளது. அதன் படி இப்படத்துக்கு ‘ஹைக்கூ’ என்று தலைப்பு வைத்துள் ளனர். இப்படம் தமிழ், தெலுங்கு, மலையாள மொழிகளில் உருவாகிறது.

# 99/66’ படத்துக்காக புத்த மடாலயங்களில் ஷூட்டிங்



சபரி, ரோகித், ரக்சிதா மகாலட்சுமி, ஸ்வேதா, பவன்கிருஷ்ணா, கே.ஆர்.விஜயா, கே.எஸ்.வெங் கடேஷ், எஸ்.சினேகா, குமாரி கனிஷ்கா, ஸ்ரீலே கா, சிங்கம் புலி, பி.எல்.தேனப்பன் ஆகியோர் நடித்துள்ள படம், “99/66 தொண்ணூற்று ஒன்பது அறுபத்தியாறு”.

மித்ரா பிக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பில் எம்.எஸ்.மூர்த்தி எழுதி இயக்கி,இசை அமைத்து, தயாரித்துள்ளார். சேவிலோ ராஜா ஒளிப்பதிவு செய் துள்ளார்.

இப்படம் பற்றி எம்.எஸ்.மூர்த்தி கூறும்போது “சென் னையில் உள்ள 99 வீடுகள் கொண்ட ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பில் இதன் கதை நடக்கிறது. அதனால் தான் இந்தப் படத்துக்கு ‘99/66 தொண்ணூற்று ஒன்பது அறுபத் தியாறு’ என்று பெயர் வைத்துள்ளோம்.

அந்தக் குடியிருப்பில் அவ்வப்போது நடைபெறும் சில அமானுஷ்ய சம்பவங்கள், குடியிருப்பு வாசிகளைப் பயமுறுத்திப் பீதி கொள்ள வைக்கிறது. எதனால் அப்படி நடக்கிறது?அதன் பின்னணி யில் இருப்பது என்ன? என்பதைச் சபரியும், ரக்சிதாவும், ஸ்வேதாவும், எம்.எஸ்.மூர்த்தியுடன் சேர்ந்து கண்டுபிடிக்க முயல்கிறார்கள். அது முடிந் ததா என்பது திரைக்கதை.


தாய்லாந்து, பர்மா, இலங்கை போன்ற பகுதிகளில் புத்தமடாலயத்தில் ஐநூறு புத்த பிக்குகளின் மத்தியில் பாடல் களையும் சில காட்சிகளை யும் படமாக்கியுள்ளோம். விரைவில் படத்தின் இசை வெளியீட்டு விழா பிரம்மாண்டமாக நடைபெற உள்ளது” என்றார்.





பாலிவுட் சினிமாவில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக பிரபல நடிகையாக வலம் வருபவர் நடிகை ஷில்பா ஷெட்டி. தமிழில் மிஸ்டர் ரோமியோ மற்றும் குஷி ஆகிய இரு படங்களில் மட்டுமே நடித்திருக்கிறார். இவர் பிரபல தொழிலதிபரான ராஜ் குந்திராவை கடந்த 2009ம் ஆண்டு திருமணம் செய்துகொண்டார். மும்பை பாந்த்ராவில் இவருக்கு சொந்தமாக நட்சத்திர ஓட்டல் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், 46 வயதிலும் சற்றும் குறையாத மாடர்ன் லுக்கில் வலம் வருகிறார். தற்போது, இவர் ட்ரெண்டி லுக்கில் இருக்கும் ஸ்டில்ஸ்.

# பிரபலமானவர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்த புதுமுகங்கள்!



இணையத் திரைப்பட தரவுத்தளமான ஐஎம்டிபி (IMDB), ஒவ்வொரு வருடமும் அந் தந்த வருடங்களில் பிரபலமான நட்சத்திரங் கள், இயக்குநர்களின் பட்டியலை வெளி யிட்டு வருகிறது.

ஐஎம்டிபி இணையதள பக்கத்தில் தேடப் பட்ட திரைப் பிரபலங்களின் பெயர்கள் அடிப்படையில் இப்பட்டியல் வெளியிடப்படு கிறது. 2025-ம் ஆண்டுக்கான பட்டியல் இப் போது வெளியாகி இருக்கிறது. இதில் முன் னணி நட்சத்திரங்களான ரஜினிகாந்த், அமீர் கான், தீபிகா படுகோன் ஆகியோரை பின் னுக்குத் தள்ளி, 2 புது முகங்கள் முதலிடம் பிடித்துள்ளனர்.

இந்தியில் வெளியாகி வெற்றி பெற்ற ‘சயாரா’ படத்தில் நடித்த அஹான் பாண் டே, அதில் நாயகியாக நடித்த அனீத் பட்டா ஆகியோர் முதல் இரண்டு இடங்களைப் பிடித்துள்ளனர். மோஹித் சூரி இயக்கிய இப்படம் உலக அளவில் ரூ.580 கோடி வசூலித்துள்ளது.

அஹான், அனித் ஆகியோருக்குப் பிறகு அடுத்தடுத்த இடங்களில் ஆமிர்கான், இஷான் கட்டார், லக்ஷயா, ராஷ்மிகா மந் தனா, ‘லோகா சாப்டர் 2-சந்தியா’ படத்தில் நடித்த கல்யாணி பிரியதர்ஷன், திரிப்தி திம் ரி, ‘காந்தாரா’வில் நடித்த ருக்மணி வசந்த், ரிஷப் ஷெட்டி ஆகியோர் உள்ளனர்.



தென்னிந்திய திரையுலகில் வளர்ந்து வரும் நடிகைகளில் ஒருவர் சான்வி மேக்னா. இவர் இந்த ஆண்டு வெளிவந்த குடும்பஸ்தன் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானார். முதல் படமே இவருக்கு நல்ல வரவேற்பை பெற்று தந்துள்ளது. இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஆக்டிவாக இருக்கும் நடிகைகளில் சான்வியும் ஒருவர். தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை தொடர்ந்து இன்ஸ்டா பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இந்த நிலையில், சேலையில் தான் எடுத்துக்கொண்ட லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டாவில் பகிர்ந்துள்ளார்.






## விற்காதப் புத்தகங்கள்.!

எத்தனைக் காலங்கள்
இப்படிக் கிடக்குமோ..
இத்தனைப் புத்தகங்கள்!

புத்தகச் சந்தையில்
புதிதாகப் பிறந்தபின்
எவருமே ஏந்தாதக்
இக் குழந்தைகள்.!

சிந்திய மைத்துளிகள்
சிந்தனைப் பேரலைகள்
சந்தையில் வாங்கிட
ஆளில்லையே..

எந்தையும் தாயும்
எழுத்தறிவித்தவனும்
நொந்து கிடக்காத
நாளில்லையே..!

நேரமில்லையோ..
பாரமோ.. பரபரப்பான
உலகத்திலே..
படிக்காமல் கிடக்கின்ற
புத்தகங்களே..

கைப்பேசி கணினியில்
இடையிலே சிக்கிய.. காகிதப்
புத்தகத்தைக் காணக்
கண்ணில்லையோ?

எழுத்தொன்றே வாழ்வென..
எவரும் இக் காலத்தில்
இருப்பதாக எமக்கு
தெரியவில்லையே..

இலக்கியம் இலக்கணம்
எழுத்ததிகாரங்கள்..
நடப்பதாய் நமக்கு
நினைவில்லையே..

உழுதவன் பசியிலே..
எழுத்தாளன் வறுமையில்..
கற்றவர்கள் இருந்தாலும் இது
கனவில்லையே..!

முற்றத்தில் முச்சந்தி
வாசலில்.. கடைகளில்
புத்தகங்கள் விற்கவில்லையே..
எழுத்தாளன் இன்னும்
தூங்கவில்லையே!

இந்த நிலை மாறணும்
எழுதியவன் சிரிக்கிற..
நாளொன்று தோன்றுமோ
அறியவில்லையே..
அறிவென்னும் ஆயுதம்
உபயோகம் ஆகுமோ..
அந்த நாள் எந்த நாள்
தெரியவேணுமே.!



**வே.கல்யாண்குமார்.**



## குழலிசை

முற்றத்தில் சொர்க்கமே
மூங்கிலின் வர்க்கமே...

கண்ணனின் கைகளில்
கண்போல் தவழுகிறாய்

ஆவினங்கள் விரும்பும்
கானங்களாவாய்

தாளத்துடன்
தேனாகி சுரக்கிறாய்

ஏங்கும் செவிகளுக்கு
இன்பம் சேர்க்கிறாய்

நெஞ்சின் முத்துக்களை
மாலையாய்க்கோர்க்கிறாய்

மழலையாய்த்தவழ்ந்து
மனங்களை மயக்குவாய்

தணியாத தாகத்திற்கு
இளநீர் இசையாவாய்

துளைகளால்
காற்றை விழுங்குவாய்

இதயம் ஈரமாக
இதமாய் வருடுவாய்

இருவண்ணமனங்களை
கொள்ளை கொள்வாய்

மேகமின்றிவானத்திற்கு
அழைத்துச் செல்வாய்

**கலியுகன்கோபி** சென்னை

## துண்டுகள் !

பக்தன் என்று காட்டவும்
தேவைப்படுகிறது
கருப்பு, காவி, சிவப்பு மஞ்சள்
என வர்ண துண்டுகள் !

விவசாயி என அடையாளம்
காட்ட பச்சையும் ...

கட்சி தலைவனாக
அடையாப்படுத்த
பல வர்ண துண்டுகளும்
உண்டு !

ஏழையை அடையாளப்படுத்த
அவனது அழுக்கு படிந்த
துண்டில் எல்லா வகை
நிறங்களும்
படிந்திருக்க
தான்
செய்கிறது !



**எம்.பி. தினேஷ்.**
கோவை



## குடியிருந்த அகம்

" இடம் விட்டு இடம்
குடிபெயர்ந்து செல்லும்
போது விட்டுச் செல்வது
உறவை நட்பை .... "

மனதில் நின்று ஊசலாடும்
அந்த அந்த நாட்கள்
நினைவுகளின் பிம்பங்கள்...."

எத்தனை ஆசைகள்
அக்கறை நாம் குடியிருந்த
வீடு என்கிற ஏக்கக்
காற்று பெருமூச்சு ..."

பொருட்களை எல்லாம்
லாரியில் ஏற்றிவிட்டு
மனதை மட்டும் இறக்கி
வைத்து விட்டு
புறப்படும் நேரம் ..."

ஜாகை காலி செய்து புது
இடம் வரும் போது
ஏக்கமும் தடுமாற்றமும் ..."

ஆண்டுகள் கழிந்த பின்பு
ஏற்றமும் முன்னேற்றமும்....."

மனங்கள் மாலைகளாக
மாறுகிறது பூக்களாக
மலர்ந்து ஒன்று சேரும்
போது ... "

குடியிருந்த வீடும்
கற்றுத் தரும் பாடம்
எதிர்கால சொந்த வீட்டின்
கம்பீரம் ..."

முதலாளி என்கிற
அடையாளம் பலர் முகத்தை
திரும்பிடச்
செய்யும்
ரீங்காரம் ....."



**ஆர். சீதாராமன்**
சீர்காழி



1. இறகை வெட்டி உறுதி
செய்த பின் கூண்டை
திறக்கிறார்கள்
பறக்க மறந்த பறவைக்கு

2. வாழ்க்கையின் பாதை
எல்லோருக்கும் ஒன்றுதான்
சுமைகள் தான் வெவ்வேறு

3. வாய்ப்புக்காக
காத்திருப்பவனை
விட வாய்ப்புகளை
உருவாக்கிகொள்பவனே
சாதனையாளன்

4. ஏழையின் வீட்டிற்கு
பணக்காரன் சென்றால்
உபசரிப்பு பலமாக இருக்கும்
பணக்காரன் வீட்டிற்கு ஏழை
சென்றால் உபதேசம் பலமாக
இருக்கும்

5. ஒவ்வொரு மனிதரிடமும்
ஒரு திறமை இருக்கிறது
அதை அவர் பயன்படுத்தாமல்
இருப்பது வங்கியில்
பணத்தை
போட்டுவிட்டு பட்டினி
கிடப்பதற்கு சமமாகும்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

மனதில் தோன்றும்
எண்ணங்களே
மாசற்று தோன்றகூடாதா ?
மனிதம் என்ற புனிதத்தை
மறந்து வாழும் மனிதர்களே ,
மாசுபட்ட எண்ணங்களை
துறந்து வாழப்பழகுங்கள் ...
நாட்டை சுத்தப்படுத்தும் முன்
நம் நாவை சுத்திகரிக்க
வேண்டும் ... நாட்களை
கடத்தி
வந்தால்
நாடும் வீடும்
நலமாக
இராது !
நல்லனவற்றை
நினைப்போம்
நல்லதையே செய்வோம்
நட்பாக இருப்போம் !!!



**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

## மண்வளம் காத்தலே மாண்பு!

உற்பத்தி பெருக்கிட
உன்னத நாளன்றோ
பொற்புடை மண்வளத்தைப்
போற்றியே..சற்றும்நாம்
பொன்விளையும் பூமியாய்க்
காத்திடுவோம் எந்நாளும்
மண்வளம் காத்தலேமாண்பு!

உலக உயிர்களெலாம்
உன்னதமாய் வாழ
கலைமிகு மண்ணேதான்
கண்ணாம்.. விலைமதிப்பே
எண்ண இயலாத
எண்ணற்ற நன்மைதரு
மண்வளம் காப்பதே
மாண்பு!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## வினா என்றால் விடையும் உண்டு

உள்ளத்தில் எழும் வினா
ஒவ்வொன்றும் தேடுவது
வினாவை தேடினால் தான்
கிடைப்பது புதிருக்கான
விடை பாதை மறந்தாலும்
பகுத்தறிவு கொண்டு
செல்வது இல்லையா?
இருள் மறைய ஒளி வருவது
போல வினா மறைய
விடையும் வரும்
கிடைத்த வினாவில்
மடைதிறந்த வெள்ளமென
அறிவு ஒளி கிடைக்கும்
சிந்திப்பவர்களுக்கு மட்டுமே
வினாக்கள் எழும்
அந்த வினாக்களே
அவர்களின் அறிவை
வளர்க்கும் உரம்
வினாக்கள் எழுவதற்கு
அகவை தடை இல்லை
மழலை முதல் முதியவர்
வரை கேள்விக்கணை
தொடுப்பவர்ளே விண்ணை
தொடுபவர்களாக
உயர்கிறார்கள்
வினாக்களை
தொடுப்போம்
விடைகளை
தேடுவோம்
அறிவுக்கு
நல்ல தீனி
போடுவோம்



**உஷா முத்துராமன்**

## வாழ்க்கை

எத்தனை பட்டாலும்
திருந்தாத மனது.
எத்தனை கெட்டாலும்
உணராத உடம்பு.
எத்தனை கற்றாலும்
தெளியாத அறிவு.
எத்தனை பெற்றாலும்
நிறைவுறாத கனவு.
எத்தனை வயதானாலும்
முதிராத
மனம்.
ஆயினும்
எத்தனை
நாளானாலும்
நம்பிக்கையுடன்!



**கே. பி. ஜனார்த்தனன்**

## தவம்

அரிதான வாய்ப்பை
கெட்டியாய் பிடிப்பீர்
சாதகமான நேரம்
வாய்க்காதோர் அநேகர்

நல்வாய்ப்புக்காக
காத்திருப்போர் சிலர்
சந்தர்ப்பமையாமல்
போராடுவோர் பலர்

அதிர்ஷ்டத்தை
உருவாக்குவோரும் உண்டு
முட்டிமோதி வெற்றி
பெறுவதும் சாத்தியம்

கைகூடிய சூழலைக்
கோட்டை விட்டோமென
கலங்கி நின்று கண்ணீர்
உகுப்போருளர்

இரைக்காக காத்திருக்கும்
கொக்கு
போன்று
இலக்கை
அடையும்
வரை
பொறுமையோடிரு



**பி. பழனி,**
சென்னை.



## தீபச் ஜோதியே

" தீபம் எங்கும் ஜொலிக்கும்
இரவு ஒளி விழாக்கோலமாய்
வீதி வாசல் .... "

வீதி எங்கும் வீட்டுக்கு வீடு
அகல் தீபம் சுடர்விட்டு எரிய
மங்களம் ஆனது மனது ... "

தொடர்ச்சியாய் எத்தனை
விளக்குகள் மேல் மாடி
முதல் கீழ்த்தளம் வரை
ஆஹா அழகு ... "

கோவில் வாசல்
முதல் கற்பக்கிரகம்
வரை எத்தனை தீபங்கள் ....."

அண்ணாமலையான்
கொப்பரை தீபம்
கண்கொள்ளாக்காட்சி "

கார்த்திகை மாத
தீபத்திருநாள் எங்கும்
சுடர் ஒளி ..."

மண் பாண்டம்
செய்வோர் வயிறு குளிரும்
மனமும் நிறையும் ..."

அகல் விளக்கால் எத்தனை
உருவம் வடிவம் வழிபாடு ..."

மலை ஏறும் பாதைப் படிகளில்
கூட அகல் விளக்கு
ஜொலிக்கும் தமிழர்
பண்பாடு ..."

**ஆர். சீதாராமன்,** சீர்காழி.



## மாடு மேய்க்கப் போறேன்..!

மாடு மேய்க்க.. ஆடு மேய்க்கப் போகப் போறேன் நானும்.. மனுசனாகப் வாழ்ந்து என்ன.. மாடு மேய்க்க வேணும்.! பாலும் தந்து.. தோலும் தந்து.. ஜீவன் தந்த மாடு.. பக்கம் நின்று மேய்க்க வந்து பாட்டு ஒன்று பாடு.!

காசுக்காக விற்ற போதும் வளர்ந்த இடத்தை மறவா.. பாசம் வைத்து காலை மாலை பாலைப் பொழிய மறவா.. நன்றி மிக்க மனுசன் இங்கே உண்டு என்றால் காட்டு! நாலு காலில் நமது கண்கள் காணும் தெய்வம் மாடு!

மாடு என்றால் செல்வம் என்று தமிழில் பொருளும் உண்டு.. மாடு போல அன்பு நெஞ்சம் வியந்து நீயும் கண்டு.. மாட்டுக் கறியை உண்பதில்லை என்று சபதம் பூண்டு.. மாடு வாழ.. நீடு வாழ.. வாழ்த்துக் கீதம் பாடு.!

**வே.கல்யாண்குமார்.**



## சட்ட மேதை அம்பேத்கர்!

நேரிசை வெண்பா!

வித்தகர் வீறுடைக்
கொள்கையின்.. மொத்த

உருவமே அம்பேத்கர்
உன்னத மேதை

திருவான பீமராவ் தேர்!

தொலைநோக்குப்பார்வையர்!
தோற்றம் எளிமை!

கலைபலவாய்ச்சட்டமே
கண்டவர்...விலைமதிக்க

ஒண்ணாத கொள்கையின்
ஒண்மைத்தலைவரே

கண்ணான அம்பேத்கர்
காண்!

தத்துவ ஞானிதக்க
சீர்மையாம் வாதியே!



**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## நெருக்கத்தின் நிழல்

அன்று...
ஒரே வீட்டின் கூரையின் கீழ்
உறவுகள் ஆயிரம்!
அவர்களின் அன்புக்
குரல்கள்
அருகருகே கேட்டு ...
உடைந்த மனங்களும்
ஒன்றாக சேர்த்தன

ஒரே பாத்திரத்தில் சாப்பிட்ட
சுவை நிறைந்த நினைவுகள்...
சந்தோஷ சிரிப்பில் கலந்த
ஆனந்த தருணங்கள்...
மழையில் கூடி நின்று
ரசித்த இனிய நேரங்கள்...

என்றிருந்த வீடு...
நினைவுகளின் நெருக்க
நிழலானது.

இன்று...

அதே வீட்டின்
ஒவ்வொரு அறையும்
தனித்தனி
கோள்களாய்
சுழல்கிறது...
மௌனம் மட்டுமே
கதவுகளைத் தட்டுகிறது

கைபேசியின் ஒளி
முகத்தை மறைத்து
இதயத்திலும் ஒளிர்க்க
மறுக்கிறது.

முகமறியா முகநூல் நட்புகள்
தூரத்தில் இருந்தாலும்
அருகில் இருப்பது போல...

அருகிலுள்ள இதயங்கள்
ஆயிரம் மைல்கள்
தூரத்தில் இருப்பது போல...

ஒவ்வொருவரும்...

தங்கள் தனித் தீவுகளில்
சைபர் கடலில்
மிதந்து...
எதிரே இருப்பவர்களை
வேற்றுக்
கிரகவாசியாக
உணர்கிற காலமிது.





**நா.பத்மாவதி**
கொரட்டூர்

## நூல் விமர்சனம்:

நூலின் பெயர் : கலைஞர் 100
விகடனும் கலைஞரும்
வெளியீடு: விகடன் பிரசுரம்
விலை : ₹900
தொடர்புக்கு :
8056046940/9500068144

கலைஞரின் நூற்றாண்டு கொண்டாடப்படும் நேரத்தில் அவருடன் விகடன் பல்வேறு காலகட்டங்களில் பயணித்ததின் தொகுப்பு இது. இதிலிருந்து ஒரு சில பகுதிகள் உங்களுக்காக:




குழப்பத்தில் குறவஞ்சி - 53

இப்படம் நடிகர் திலகம் சிவாஜி- நடிகையர் திலகம் நடிக்க கலைஞரும் தயாரிப்பாளர்களுள் ஒருவராக இருந்த மேகலா பிக்சர்ஸ் மூலம் வெளிவந்தது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதற்கு முன் இப்படம் இலட்சிய நடிகர் எஸ்.எஸ். ஆர் , விஜயகுமாரி , ராஜ சுலோச்சனா, மைனாவதி நடிக்க ஐயாயிரம் அடிகளுக்கு மேல் எடுக்கப்பட்டதாம்.

திடீரென்று ஒரு நாள் ராஜ சுலோச்சனா " கடவுளே உனக்கு கண் இல்லையா" என்ற வசனம் திட்டுவதாக நினைத்து வசனத்தை மாற்றித் தரும்படி கேட்க, இவர் முடியாது என மறுத்து, நடிகை சாவித்திரியை நடிக்க ஒப்பந்தம் செய்தாராம்.

படம் பாதி வளர்ந்த நிலையில் எஸ்.எஸ்.ஆரும் விஜயகுமாரியும் அவர்களின் திருமணத்தை முன்னிட்டு ஹைதராபாத் சென்றவர்கள் , குடும்பப் பிரச்சினை காரணமாக " குறவஞ்சி" படப்பிடிப்புக்கு உரிய நேரத்தில் வர முடியவில்லையாம். அந்த நேரத்தில் கலைஞர் நிலைமையைச் சொன்னதும் சிவாஜி இன்னலைப் போக்க உடனடியாகக் கை கொடுத்தாராம்.

இளையராஜாவிற்கு "இசை ஞானி" கமலுக்கு "கலைஞானி" பட்டங்கள் தந்ததும் கலைஞரே.

" அவருக்கு மழை பிடிக்கும்!" தயாளு அம்மாள் தொடுக்கும் தகவல் சரம் : அவர் கட்டும் கரை வேட்டி, சட்டைத் துணி கர்ச்சீப் எல்லாம் தயாளு அம்மாள் தான் வாங்குவாராம். ஒரு நாளைக்கு ரெண்டுதரமும், தேர்தல் மாதிரி அதிகம் வெயிலில் சுற்றும் நேரங்களில், ஒரு நாளைக்கு மூணு சட்டையும் மாத்துவாராம்.

ராத்திரி நேரங்களில் லுங்கிதான் கட்டிப்பார். பாம்பே டையிங்லதான் லுங்கிகள் வாங்குவோம். அறிஞர் அண்ணா போட்ட மோதிரம் தான் அவர் விரலில் இருந்ததாம்.

முன்னெல்லாம் மதியம் 12 மணி போல் சிக்கன் சூப் குடித்தவர் பின்னாளில் 10-15 வருடங்களாக வெஜிடபுள் சூப் தான் குடித்தாராம். வெயிலோ, பனியோ வெதுவெதுப்பான சுடுநீரில் குளிப்பது தான் பிடிக்குமாம்.

இதுபோல் சுவாரஸ்யமான தகவல்கள் 108 தலைப்புகளில் இந்நூலில் உள்ளன.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

இருபத்தைந்து வருடங்களாக ஒருத்தரே சட்டை தைச்சுத் தர்றார். கோடம்பாக்கத்தில் உள்ள அவர் பெயர் மூர்த்தி.






## எறும்பின் பயணம்

வழிகள் இதுவென
வரையாப் பொழுதில்
விழிகள் உறங்கா
வேளையிலும்
முடியாப்பயணம்தொடரும்

மௌன மொழியில்
உற்சாகம்விரைந்து
கடக்கும்
ஊசி முனையாய்க்
கடிக்கும்

இதயமும் ஏறும்
சிற்றுளியாகிக்குடையும்
மற்ற உயிர் ஏளனம்
சிற்றுயிர் எண்ணாது

சீருடன் ஊறும் சுறுசுறுப்பு
பழிகள் இயம்பாத்துடிப்பு
சிதறா ஒழுங்கின்
எடுத்துக்காட்டு
யானையும் அஞ்சி
செவியைக்காக்கும்



**கலியுகன்கோபி**
சென்னை



## தீபச் சுடரில் கரைகிறது மனம்

ஐப்பசி துலா ஸ்நாநம் முடிந்து
தீப ஒளி தீபாவளி
முடிந்தம்....."

கந்த ஷஷ்டி விழா ஆறு
நாட்கள் கோலாகளம்
சூரன் சம்ஹாரம் ... "

அன்னத்துக்கு தான்
எத்தனை மரியாதை
காய்கறி கனி
கொண்டு மலரும்
ஐப்பசி பௌர்ணமி
அன்னா அபிஷேகம் .... "

கார்த்திகை மாதம் மலரத்
துடிக்கிறது..."

வீதி எங்கும் ஐயப்ப
கோஷம்
கலர் கலரான
வேட்டி துண்டு
விடிகாலை சரணம் ....."

மகா பரணி
திருக்கார்திகை தீபம்
விதி எங்கும் ஜொலிக்கும்
அகல் விளக்கில் ஊரே
பிரகாசிக்கும் ....."

தீபச் ஜோதியில் நாடேங்கும்
இருள் நீங்கி ஒளிப் பிரகாசம்
ஒளிக் கற்றையாய் பிழம்பாய்
ஒளி மழை பொழியும் ....."


சொக்கன்பானை
கொழுந்து விட்டு
எரியும் அழகு .... "

அவல் நெல் பொரி உருண்டை
கார்த்திகை தீப்பொறி சுற்றும்
அழகு ஆஹா...."

தீபங்களுக்கு தான்
எத்தனை முதலிடம்
மரியாதை மனமும்
கரைகிறது தீப
சுடரில் மெதுவாக ....."



**ஆர். சீதாராமன்**
சீர்காழி .



## எழில் மிகு சேலம்.!

மாங்கனியின் தேன்நகரம் சேலம் என்று பாடு..
மண்மணக்கும் மலைநகரை மாத்தமிழால் பாடு!
நித்தம் நித்தம் உழைப்பவர்கள் வாழும் சேலம் பாரு!
எத்திசையும் எழில் மிகுந்த சேலம் நகரைப் பாடு!

ஏலகிரி மலையிருந்து தவழ்ந்து வரும் அருவி!
இரும்புவளம் நிறைந்த ஊரில் உருவாகும் கருவி!
தார மங்களத்து கலைக்கோவில் நிருவி
தமிழாய்ந்த அறிஞர்களின் சேலம் நகரே வாழி!

பாரதத்தாய் மடிவிழுந்த மாங்கனியே வாழி..
பைந்தமிழ்த் தாய் வாழும்ஊரு சேலம் நகரே வாழி!

எவ்வூரும் போற்றுகின்ற எழில் மிகுந்த ஊராம்!
எழில் மணக்கும் திருக்கோவில் சூழ்ந்திருக்கும் ஊராம்!

கோட்டையிலே மாரியம்மன் கொலுவிருக்கும் ஊராம்
நாட்டுப்பற்றில் தலை நிமிர்ந்த சேலம் மா நகராம்!
நல்ல நல்ல மனங்கள் சூழ நகரும் கலைத் தேராம்!

ஐந்து வழி சாலையிலே அன்பின் முகம் கண்டேன்.. அடர்ந்த
மலைத் தொடரினிலே சூழும் மேகம் கண்டேன்! காவிரித்தாய்
அணைகடந்து பாய்ந்துவரக் கண்டேன்! கவிஞர்களின்
சங்கமத்தை சேலம் நகரில் கண்டேன்!

ஒன்றாக மாநிலத்தின் மக்கள் கூடி வாழ்வார்! அண்டை
மாநிலத்தார் திரண்டுவந்து சேர்வார் இயற்கையெழில்
சூழ்ந்துவர தென்றல் வந்து தவழும்.. எழில் மிகுந்த சேலம்
புகழைச் சங்கத்தமிழ் பாடும்!

**வே.கலயாண்குமார்.**



## அண்ணல் அம்பேத்கார்

அண்ணலே
நீ பெயரல்ல சரித்திரம்.

ஒட்டுமொத்த உலகமும்
உனக்கு வணக்கம் சொல்லும்
அதிசயம்.

நீ இழிக்கப்பட்ட சாதியில்
பிறந்தாய்.

சபிக்கப்பட்ட
சந்ததியில் மலர்ந்தாய்.

வறுமையில் விந்தில்
விளைந்த பெறுமை நீ.

கல்வி அறியாசனத்தின்
முகவரி தாங்கிய
அரியாசனம் நீ..

நீ எட்டு வைத்து நடக்கையில்
வீதிகள் உனக்கு
விலகிப்போயின.

நீ புத்தகம் பிடிக்கயில்
பாடசாலைகள் பயமுறுத்தின.

உன் வெளிச்சக் கண்களைக்
காணாமல் கலைமகள்
தன் அறிவுக் கண்களை
மூடிக் கொண்டாள்.

ஆசிர்வதிக்க வேண்டிய
ஆசான்களோ
அக்கினி வார்த்தைகளால்
தூஷித்தார்கள்.

பார்வைகளால்
சாதிய நெருப்பைப்
பற்ற வைத்தார்கள்.

தங்கத்தைத்தள்ளி வைத்து
தீட்டைச் சொல்லியே
தீண்டாமைக் கொள்ளியால்
சுட்டெரித்தார்கள்.

எரிமலையாய் உள்ளுக்குள்
கொதித்த உன் லட்சிய
நெருப்பு அத்தனை
அக்கி குண்டங்களையும்
விழுங்கிக் கொண்டது.

ஒரு பெரும் பிரளயத்தை
உருவாக்கும் பேரறிவு
சாதியக் கொடுமைகளைக்
சகித்துக் கொண்டது.
உள்ளுக்குள் தன்னம்பிக்கைத்
தணலை
ஒளித்துக் கொண்டது.

இத்தனைத்தடைகளைத்
தாண்டி வந்து இந்தியாவின்
முகமாய் உயர்ந்தாய் நீ.

கற்பனை செய்ய முடியாப்
புகழை உன் கல்வியில்
பெற்று ஒளிர்ந்தாய் நீ.

பூசணம் பிடித்த பழைய சாதி
மத சாஸ்திரம் எரித்து
புதிய அரசியல் சாசனம்
வகுத்த மேதை நீ

இனி வரும் இளைய
தலைமுறைக்கெல்லாம்
புதிய விடியலைக்
கொடுத்த பாதை நீ

அண்ணலே உனக்குப்
பிறகுதான் சட்டம் என்பது
பொதுவானது

சமத்துவம் என்பது
சமமானது.

சுயமரியாதை
என்பது உயிரானது.

அடிமை இனத்தில்
உரிமைக் குரலாய்
பொதுமை பாடிய பூங்குயிலே

தன் முதுகை நிமிர்த்தி
தன் இனத்த உயர்த்தி
உணர்ச்சித் தீயை மூட்டிய
பேரறிவே

நீ வகுத்த அரசியல் சாசனம்
வரலாற்றை மாற்றிய
அறிவாயுதம்.

நீ எழுதிய உரிமை ஆவணம்
ஜனநாயகம் பேசும்
போர் ஆயுதம்.

அண்ணலே
நீ மறையவில்லை
இன்னும் வாழ்கிறாய்
சமத்துவம் நிலைக்கும்
நிலங்களிலெல்லாம்.

அண்ணலே நீ இன்னும்
தேவைப்படுகிறாய்
அடிமைகள் வாழும்
இடங்களிலெல்லாம்.

வீர வணக்கம் செலுத்தி
வாழ்த்துகிறோம்.

இதயக் குருதியில்
உணர்ச்சி கொப்பளிக்க
வணக்கம் சொல்கிறோம்

அண்ணலே நீ வாழ்க
வாழ்க.

**நறுமுகை**

பகிரும் நேசமும்...
உடனிருக்கும் காலமும்
குறுகிய படியே...
என கோபித்துக்
கொள்கிறாய்....

கார்மேகங்களில்
பொதிந்து கிடக்கும்...

பெருமழை யாய்...
என்னை நனைத்துக்
கொண்டே
இருக்கிறாய்...
என்பதனை
உணராமல்..



**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



## மனதில் சுமக்கிறேன்

நீ தூக்கியெறிந்த
காதலைதான் நான்
தூக்கி சுமக்கிறேன்
குழந்தையைப் போல
காதலை மட்டுமல்ல
உன்னையும் தான்
உன்னை போல் நானும்
தூக்கியெறிந்திருந்தால்
நம் காதல் அனாதை
யாகியிருக்குமே

அதனாலதான் காதலை
கண்ணில் வைத்து உன்னை
நெஞ்சில் வைத்து
காதலுக்கு துணையோடும்
உன் நினைவோடும்
ஒவ்வொரு நாளும்
காத்திருந்து
வாழ்ந்து வருகிறேன்
உன் வருகைக்காக
என் இதய வாசலை
திறந்து வைத்து...



**பாரதி முத்து**



## அன்பே!

அந்தப்புறம் இந்தப்புறம் என நீ
எந்தப் புறம் திரும்பினாலும்
பேரழகி தான்!
உன்னையல்லால் வேறு
எவரை என் அந்தப்புரத்தை
அலங்கரிக்க அழைப்பேன்
அன்பே!

## வீழ்கிறேன்!

உன்னைப்பார்த்ததும்
கா த லை ச்சொல்ல
பரமபத ஏணியில் ஏறியது
போல் வேகமாக வருகிறேன்!
ஆனால் – உன்னை
நெருங்கியதும்
பாம்பில் இறங்கியது போல்
வீழ்ந்து விடுகிறேன்!

## கா த ல்

கா த லை க்கா த லா க் கி க்
கா த லா ல் உன்னை
ஏந்திக் கொள்ள
உன்னிடமிருந்து தான்
கா த லா க க்
கற்றுக் கொண்டேன்!

## ஆட்டம்

நீ என்னைச்சந்திக்க
வரும்போதெல்லாம்
என் மனம் வித விதமான
ஆட்டங்கள்
ஆ(போ)டுகின்றது!

## எப்படி?!

அழகாக இருக்கும் தாவணி
சேலை சுடிதார் சல்வார்
கம்மீஸ் இப்படி எதுவுமே
நீ அணிந்த பின்
பேரழகாகி விடுகிறதே
எப்படி அன்பே?!

## இன்று

இந்த இதழிலிருந்து
ஆரம்பம் என்று
இன்று
இதழில் அறிவிப்பு
வெளியிட்டிருக்கிறார்கள்!
எனக்கென்னவோ
இதை நீ என்னிடம்
சொல்வது போலவே
இருந்தது!

## வட்டி

கந்து வட்டி மீட்டர் வட்டி
இதெல்லாம் என்ன? என்று
என்னிடம் கேட்கிறாய்!
சில சமயம் வழக்கத்திற்கு
மாறாக நீ அதிகமாக
மு த் த ங் க ள் தருகிறாயே
அதன் பெயர்தான்
இவைகளெல்லாம்!

## உண்மை

எத்தனை முறை எவ்வளவு
கவிதைகள் எழுதினாலும்
இது வரை ஒரு கவிதை கூட
உன்னை விட
அழகாய் இருந்ததில்லை!

## நீ!

எல்லாக்கவிதைகளிலும்
ஏதேனும் சில வரிகள்
பிடிக்கும்! எனக்கு
மிக முழுவதுமாய்
எப்பொழுதும் படிக்கப்
பிடிக்கும் கவிதையென்றால்
அது நீ மட்டும் தான்!

## மலர்

ரோஜாப்பூவில் தொடங்கி
மல்லிகைப்பூவில் தொடர்ந்து
தாழம்பூ வரை வரிசையாக
உனக்குப்பிடித்த
பூக்களைச் சொல்கிறாய்!
எனக்குப் பிடித்த ஒரே பூ
என் கா த ல் ம ல ரா ன
நீதான்!

## நிஜம்

தன்னிடம் வந்தவர்கள்
உண்மையாக இருந்தால்
நொடிக்கு நொடி
அவர்களை
தேசத்துடன் வாழ
வைக்கும்
இந்தக்கா த ல்!



**முத்து ஆனந்த்**
வேலூர்



## மூக்குத்தி

மங்கையிவள் மலர்
முகத்தில் தங்க நிறத்தில்
ஒற்றைப்பனித்துளி

தேவதையின் முக
மாளிகையின்
ஒட்டுத்
திண்ணையில்
காய்கின்ற
பட்டுத்
துணி!



**மீனாட்சி பாண்டியன்**
திருவண்ணாமலை



## 100% காதல் !

உடல் ஸ்பரிசத்தை 0%
அளவிலும்...
இதயத்தில் 50%
கண்களில் 50%
அளவிலும்
கொண்ட
காதலே
100% அக்மார்க்
காதல் !



**எம்.பி.தினேஷ்**
கோவை

பேச்சைக் குறைத்து
கொண்டதாய்.. வருத்தம்..
உனக்கு..


நானே..நீயுமாய் பேசிக்.
கொண்டு...ரசித்துக்
கொண்டிருக்கிறேன்...
தனிமையில்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

என் பதில்களை
நீ கேட்பதேயில்லை..
உன் கேள்விகளால்
என்னைச் சிதறடிக்கிறாய்..
அது புரிந்தும் ஒவ்வொரு
முறையும் பதில்களை
யோசிப்பதில்
தொலைகிறேன்.
சரியான
அசடு
என்று நீ
முறுவலிப்பதைப்
பார்க்கத்தான்
செல்லமே



**ரிஷபன்**



## மலைகள்

பாறைகள் கரம் கோர்த்து
நிற்கும் இயற்கையின்
வேலிகளே!
மேற்கூரை இல்லாத
கோட்டைகளே!

நீங்கள் வரம் பெற்ற
பூதங்களா? இல்லை
சபிக்கப்பட்ட அசுரர்களா?
காலந்தோறும்
பாறைகளாய்ப்
படுத்திருக்கும்
அகலிகைகளே!

எந்த ஸ்ரீராமனின்
பாதம்பட்டு குறிஞ்சியாய்க்
குதூகலிக்கிறீர்கள்!

கரம் நீட்டாமல் நீங்கள்
செய்யும் ஆசீர்வாதம் தான்
அருவிகளோ?
ஆகாயத்திற்கு
மனமுவந்து
அளித்த
பரிசுகளோ
உருண்டு
திரண்ட
கருமுகில்கள்!



**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்

## இதய தேவதைக்கு ஒரு விண்ணப்பம்

மீண்டும் உன்னைக்
காண்பேன் என்று
கனவிலும் நான் எண்ணிப்
பார்க்கவில்லை.
ஆனாலும், நீ திரும்பி
வந்ததில் மகிழ்ச்சி
கொண்டேன்;என்னோடு
பேசியதில் பேரன்பு
அடைந்தேன்;இன்னும் உன்
மனதில் நான் இருக்கிறேன்
என நீ சொன்னபோது,
வானில் பறந்தேன்!
நீ வரும்வரை, 'இனி
ஒருமுறையேனும் வர
மாட்டாயா?' என்றுதான்
நினைத்திருந்தேன்.
வந்தபின், உன்னோடு
பேசிய பின், உன் கைப்பற்ற
நினைத்தபோது,
'ஏதோவொன்று என்னைத்
தொடாதே' என்று
சொன்னது போலிருந்தது.
அப்போதுதான்
புரிந்துகொண்டேன்:
இழந்தவை, இழந்தவையாக
இருக்கும்போது மட்டும்தான்
அந்த உயரத்தில்,
மகுடத்தில் வீற்றிருக்கும்
என.
என் காதலியே! என்னிடம்
வர வேண்டும், என்னிடம்
பேச வேண்டும் என்ற
எண்ணம் மட்டும் போதுமடி.
நீ நேரில் வர வேண்டும்
என்ற அவசியமில்லை!
என்னிடம் வந்தபின், நீ
தரும் இடைவெளி,
உன்னை நான்
பிரிந்திருந்தபோது
தந்த வலியைவிட
அதிகமாகத்தான்
இருக்கிறது. இப்போதும்
சொல்கிறேன்: நீ வர
வேண்டும், என்னோடு பேச
வேண்டும், கை கோர்க்க
வேண்டும் எனத்தான்
ஆசைப்படுகிறேன்.
ஆனால், என் ஆசை
பேராசை; நிறைவேற
வேண்டிய ஆசை இல்லை
என்பதை உணர்கிறேன்.
ஏற்கனவே கைவிட்ட
காதலியே, மீண்டும் வந்து
மீண்டும் என்னைக் கைவிட
வேண்டாம்.
நீ விட்டுச் சென்ற கைப்பிடி
இன்னும் பரிசுத்தமாகத்தான்
இருக்கிறது. அதனைப்
பரீட்சித்துப் பார்க்க
ஆசைப்பட வேண்டாம்.
நீ தேவதை
யாகவே
என் மனதில்
வாழ்ந்துவிட்டுப்
போ!



**ஜனனி அந்தோணி ராஜ்**

# வாசகர் கடிதம்

தி.வள்ளி எழுதிய " எந்தன் நண்பியே நண்பியே" - நந்தினியைப் பின்தொடர்ந்தவன் , நீ வருவாய் என படத்தில் தேவயானி " அஜித்" கண்கள் பொருத்தப்பட்ட பார்த்திபனை காண்பது போல் , தன் தங்கையின் கண்கள் பொருத்தப்பட்டிருப்பதால், அதைக் காணவே வந்தான் எனத் தெரிந்ததும் கண்ணில் ஈரம் கசிந்தது.

கவிஞர் அனந்தராமன் எழுதிய கவிதையின் நிறைவுப் பகுதியான

எதிர்பார்ப்புகள்
தேவைகள் ஏமாற்றும் தராமல் பூர்த்தியானால்
பூரிப்பில் பூக்கும்
உற்சாகப் பூக்களால்
அலுப்பும் சோர்வும் நீங்குகிறது என்ற வரிகளை ரசித்தேன்.



-ஸ்ரீகாந்த்
திருச்சி

பாதுகாப்பு, அணுசக்தி, தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் மோடி, ரஷ்ய அதிபர் புதின் 35 ஒப்பந்தங்களில் கையெழுத்து

அமைதிக்கான அனைத்து முயற்சிகளையும் நாங்கள் ஆதரிக்கிறோம் #பிரதமர் மோடி

விஜய் முன்னிலையில் தவெகவில் இணைந்தார் இனோவா புகழ் நாஞ்சில் சம்பத்

நீதித் துறையின் பொறுமையை சோதிக்கக் கூடாது#திருப்பரங்குன்றம் வழக்கில் நீதிபதிகள் எச்சரிக்கை

நீரில் மூழ்கிய பயிர்களை பாதுகாக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்# காஞ்சிபுரம் கலெக்டர் கலைச்செல்வி விளக்கம்

நான்காவது நாளாக இன்றும் விமான சேவை பாதிப்பு#விமான கட்டணம் பல மடங்கு உயர்வு

இந்தியாவின் மிகவும் பாதுகாப்பான வங்கிகள்# எஸ்பிஐ, எச்டிஎஃப்சி, ஐசிஐசிஐ என்பவையே அவை

சென்னை; பறிமுதல் செய்யப்பட்ட 72 வாகனங்கள் ஏலத்தில் விடப்படும்# தமிழக காவல் துறை தகவல்

ஓய்வு பெறும் நாளிலேயே ஓய்வூதியம் வழங்கல் ஆணை#பிஎஃப் நிறுவனம் வழங்கியது

ரெப்போ வட்டியைக் குறைத்த ரிசர்வ் வங்கி#0.25 சதவீதம் குறைக்கப் பட்டுள்ளது

புதுக் கவிதைகள் வெகு நேர்த்தி

நூல் விமர்சனம் சிறப்பு வாசகர் கடிதங்கள் பொறுப்புடன் வரையப்பட்டிருந்தன
செல்போனால் இளைஞர்களுக்கு பக்கவாதம் ஏற்படும் அபாயம்
கடலூர்; சார்ஜ் போட்ட பைக்குடன் மேலும் இரு பைக்குகள் எரிந்து நாசம்
சமய நல்லிணக்கத்தை குலைக்கும் முயற்சி#வைகோ கண்டனம்
புதுச்சேரியில் மேலும் ஒரு போலி மருந்து ஆலை கண்டுபிடிப்பு#ரூ.30 கோடி பொருட்கள் பறிமுதல்

நீதிபதி மீது நடவடிக்கை#விசிக தலைவர் தொல் திருமாவளவன் வலியுறுத்தல்

புழல் மகளிர் சிறையில் கைதிகளுக்கிடையே மோதல்#திருநங்கை மீது வழக்குப் பதிவு

சாலைகளில் குழந்தைகள் பிச்சை எடுக்க வைப்பதைத் தடுக்க வேண்டும்# அரசுக்கு உயர் நீதி மன்றம் உத்தரவு
தென்காசி: ரவுடியைப் பிடிக்க மலை ஏறிய ஐந்து போலிசார் இறங்க முடியாமல் தவிப்பு#10 மணி நேரத்துக்குப் பின் மீட்பு
கும்பகோணம் அருகே பிளஸ் 1 மாணவர்களின் தாக்குதலில் பிளஸ் டூ மாணவர் படுகாயம்
ஹைட்ரஜன் எரிபொருளுக்கு நான் மாறி விட்டேன்#சுற்றுச் சூழல் பாதுகாப்பு குறித்து கட்கரி விவரிப்பு
வங்கதேச முன்னாள் அதிபர் ஷேக் அசீனாவின் மகனுக்கு கைது வாரன்ட்
கடின உழைப்புக்கு குரல் கொடுத்த ஜப்பான் பிரதமர் சனே டகாய்ச்சிக்கு விருது



-பி.சுரேகா
சென்னை

வணக்கம்.
6.12.25 அன்றைய தமிழ்நாடு இ பேப்பரின் முதல் பக்கத்தில் பாதுகாப்பு அணுசக்தி தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் மோடி அவர்களும் ரஷ்ய அதிபர் புதின் அவர்களும் 25 ஒப்பந்தங்களில் கையெழுட்டது நல்ல அருமையான தகவல். இன்றைய அரசியலை மிக அழகாகவும் தெளிவாகவும் சொன்னதற்கு மனமார்ந்த பாராட்டுக்கள். இன்றைய பஞ்சாங்கம் மிக அற்புதமான பகுதியை எனக்கு சொன்னது.

திருக்குறளை அதன் பொருளுடன் மிகவும் அருமையான கருத்துடன் படித்து மகிழ்ந்தேன். தமிழ்நாடு சிறார் எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கத்தின் ஐந்தாம் மாத நிகழ்வை பார்க்கும் போது குழந்தைகள் எல்லோரையும் அற்புதமாக ஊக்குவிக்கும் செய்தி பாராட்டுக்கள்.

அகவை 40 ஆனால் எல்லோரும் மிகவும் சோர்வாக உணர்வார்கள். 40 வயது ஆச்சுன்னா இனிமே இப்படி இருக்காதீங்க என்று நல்ல அருமையான தகவலை நலம் தரும் மருத்துவம் பகுதியில் படித்தவுடன் எனக்கு 10 வயது குறைந்தது போல மகிழ்ச்சியாக இருந்தது.

இந்தியாவின் மிகவும் பாதுகாப்பான வங்கிகள் இதில் நீங்கள் தயங்காமல் பணம் போடலாம் என்று மிக அருமையான செய்தியை சொன்னது பலருக்கும் பயனுள்ள தகவல் பாராட்டுக்கள்.

தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் இன்று கரு. முத்து தியாகராஜ செட்டியார் அவர்களின் படமும் அவரைப் பற்றிய தகவலும் மிகவும் அருமை வரலாற்றுச் செய்திகளை மிக அருமையாக தினம் ஒரு தலைவர்கள் பகுதியாக கொடுத்து எங்களை ஊக்கப்படுத்தும் தங்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

பல்சுவைக் களஞ்சியம் பகுதி வழக்கம் போல் நல்ல சுறுசுறுப்பான செய்திகளை மிக அருமையாக கொடுத்தது. விடுகதையும் மீம்சும் எத்தனை முறை பார்த்தாலும் அலுகாமல் சலிக்காமல் படிக்க வைக்கும் ஒரு பகுதியாக உணர்ந்து ரசித்தேன்.

வாழ்வு தரும் ஆரோக்கியம் மிகவும் அற்புதம். நமக்கு தேவை ஆரோக்கியம் தான். அதை உணர்ந்து எப்படி நாம் ஆரோக்கியமாக வாழலாம் என்று பல நல்ல தகவல்கள் சொன்னது பாராட்டுக்குரியது.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களின் ஒன்பதாம் ஆண்டு நினைவு இடத்தில் எல்லோரும் அஞ்சலி செலுத்திய அந்த பக்கத்து படங்களும் செய்திகளும் மிகவும் அருமை.
ருவண்ணாமலையில் நாம் எந்தெந்த இடத்தில் எல்லாம் சுற்றி பார்க்கலாம் என்று சுற்றுலா பக்கத்தில் சொன்னது மிகவும் அருமை. வேலை வாய்ப்பு கார்னர் மிகவும் அற்புதமான தகவலாக இருப்பதால் வேலை தேடிக் ண்டிருப்பவர்களுக்கு நல்ல செய்தியை சொல்லும்.
திருநாகேஸ்வரம் நாகநாதசுவாமி கோவில் கார்த்திகை கடைசி ஞாயிறு பெருவிழா என்று மிக அருமையான தகவலை பார்த்ததும் மகிழ்ச்சியாக இருந்தது.

"ஹைட்ரஜன் எரிபொருளுக்கு நான் மாறிவிட்டேன்' என்று சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து கட்கரி அவர்கள் விவரித்து சொன்னது மிகவும் அருமை. இப்படி எல்லோரும் மாறினால் சுற்றுச் சூழல் மாசு இல்லாமல் இருக்கும் என்று எண்ண தோன்றியது.

உக்ரைன் போரை நிறுத்த புத்தினிடம் வலியுறுத்த வேண்டும் என்று சீன அதிபரை சந்தித்த பிரான்ஸ் அதிபர் வேண்டுகோள் விடுத்தது அயல்நாட்டு செய்திகளை மிக அருமையாக தெளிவாக புரிந்து கொள்ள முடிந்தது. இந்தியாவுடன் போர் புரிய ஏங்குகிறார் பாகிஸ்தான் ராணுவ தளபதி என்ற இம்ரான் சகோதரி அவர்கள் செய்தியை கேட்டு அதிர்ச்சியாக இருந்தது. எல்லா பக்கத்திலும் நல்ல செய்திகளாக இருந்தால் சந்தோஷமான சனிக்கிழமையை மகிழ்ச்சியுடன் வரவேற்க உதவி செய்த தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.



-உஷா முத்துராமன்











FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


WANTED
NEWS COORDINATOR
NEWS
Salary
Rs. 25000
Plus
*Salary is not a constraint for right candidate
Responsibilities:
1. Appoint Reporters and Photographers in Tamil Nadu Districts and Taluks
2. Will coordinate with reporters and the news desk
3. Should have a minimum of six years of experience in a print and TV newsroom.
4. Will report to the editors at the Chennai office
PRGI No. TNBIL/25/A1569
வைகறையில்
பேப்பர்பாய்
Send CV to
padmamediapublications@gmail.com
Call
9337501889


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager - Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
Package
Rs. 4.8 LPA
ஆனந்த பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்

Launch Your Own Secure Crypto MLM Software Today!

@4999/- onwards



CALL: 98537 19337, 74369 14247 www.mlmperfect.com

LOCATION - CHENNAI

WE ARE HIRING TELECALLERS

VACANCIES - 50

QUALIFICATION - ANY DEGREE

FRESHERS ALSO CAN APPLY

TELECALLING EXPERIENCE IS PREFERABLE

9337501889

7789941009

qknewstv@gmail.com

ST COURIER

The People's Choice

ISO 9001:2008 Certifed

DOMESTRIC- INTERNATIONAL

Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.

Cell: 9176130601

Make Money Without Investment Through Mobile



Just 20 min/per day

Any Time

Earn upto Rs. 1000/per mobile

Call : 9337501889

OFFICE/RESIDENCE FOR SALE

7500 Sq.ft OFFICE/ RESIDENCE SPACE FOR SALE. COMPOUND AREA 39.5 CENTS IN NAGERCOIL. Parking for 2 cars and 20 Motor Cycles

Contact: 98410 62644

இடம் விற்பனைக்கு

இராமன்புதூர் மீன் சந்தை அருகே 6 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புக்கு: 8300134494

வாடகைக்கு இடம் தேவை

Institute மற்றும் பல் மருத்துவமனை நடத்துவதற்கு நாகர்கோவில் சுற்றுவட்டாரத்தில் மெயின் ரோட்டின் அருகில் Car Parking வசதியுடன் வாடகைக்கு இடம் தேவை.

தொடர்புக்கு: Dr.ROBINSON Door No: 1/82, Water Tank Road, Nagercoil. Mob: 9487665511

இடம் விற்பனைக்கு

காரவிளை முதல் ராஜாக்கமங்கலம் மெயின் ரோட்டில் 57 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.

Contact: 08220426606

அருள்தரும் தெய்வம் என்றும் நம் இல்லங்களில்

வழங்கும் 2026 மாத காலண்டர் தெய்வீகப் படங்களுடன்



3 காலண்டர் 100 ரூபாய்

அனைத்து இல்லங்களிலும் இருக்கவேண்டிய அற்புத காலண்டர்

இது காலண்டர் அல்ல மினி பஞ்சாங்கம்

Admin office

Padma Media House

116, EH Road, Gandhi Nagar Chennai 600081

தொடர்பு கொள்ளவும் 9337501889

COMMERCIAL SPACE FOR RENT

5000 Sqft, 2500 Sqft in Ramanathapuram, Coimbatore- 45

Brokers Contact : 98422 65900

SAA

DTCP Sites For Sale

@ KALAPATTY

East Facing Site

6 Cents

Direct Sale !!!

90471 87197

SAA



ADVERTISE WITH US

CONTACT US 9438610756

Space available on OMR for RENT!

Fully Furnished Amenities

Ideal for: Coaching / Tuition Classes, Govt. / Competitive Examinations, Workshops, Conferences, Seminars, etc. Film shooting & Advt. shoots Video/ Audio Editing or Recording Facilities include Ample Parking, Cafeteria, and Power Backup.

Available on Weekends and Holidays

Contact +91 99406 94545 to know more!




# கிழக்கே போகும் ரயில்

என்னடா இது பாரதிராஜா படத்தின் தலைப்பா என்று யோசிக்கிறீர்களா?
ஆம் உங்களுக்கு அறிமுமான ஒரு ரயில் வண்டி பற்றிய சுவாரஸ்யமான வரலாறுதான் இந்த கிழக்கே போகும் ரயில் கட்டுரை . நீங்கள் அனைவரும் இந்த ரயிலை ஒரு முறையாவது பார்த்து இருப்பீர்கள் , திரைப்படத்தில். நடிகர்கள் ஒவ்வொருவருக்கும் தங்களின் திரைப் பயணத்தில் 100-வது படம் ஒரு கனவு படமாக இருக்கும். நடிகர் கமலுக்கு ராஜபார்வை. ரஜினிக்கு ராகவேந்திரா, பிரபுவுக்கு ராஜகுமாரன் வரிசையில் விஜயகாந்த்க்கு நூறாவது படமாக கேப்டன் பிரபாகரன் அமைந்தது. ஆம், புரட்சிக் கலைஞர் விஜயகாந்த்தை கேப்டன் என அவருக்கான அடையாள அடை மொழி. அதற்கு காரணம் இதர நடிகர்கள் பலருக்கும் அவர்களின் நூறாவது படங்களை விட கேப்டன் விஜயகாந்த்தின் நூறாவது படம் வெற்றிகரமான வெள்ளி விழா கண்ட படத்தை உங்களில் பலரும் பார்த்து இருப்பீர்கள். ஆம், சந்தனக் கடத்தல் வீரபத்திரனை பிடிக்க சத்தியமங்கலம் செல்கிறேன் என கிளம்பும் விஜயகாந்த்தை வீரபத்திரன் மன்சூரலிகான் ஆட்கள் வரும் வழியிலேயே தீர்த்துக் கட்ட கிளம்பி வருவார்கள். ரயில் வண்டியில் வரும் வழியிலேயே அதிரடி சரவெடி சண்டை காட்சியில் புகுந்து விளையாடுவார் கேப்டன் விஜயகாந்த்.வைகை நதியை கடந்து செல்லும் ரயில் வண்டி சண்டை அத்தனை பிரபலம். ஆம் அந்த ரயில்தான் தேனி மாவட்டம் போடியில் இருந்து மதுரை வழியாக சென்னை செல்லும் ரயில்.




விஜயகாந்த் நடித்த நூறாவது படமான கேப்டன் பிரபாகரன் சூப்பர் ஹிட்டாக அமைந்திட அடுத்து அவருடைய 125 -வது படமான "உளவுத்துறை ' படத்திலும் இந்த ரயில் வண்டி இடம் பெறும். பாலாவின் பிதாமகன் படத்தில் நடிகை லைலாவுடன் நடிகர் சூர்யா, மனோபாலா, கருணாஸ் கூட்டணி வரும் கன்னடத்து பைங்கிளி சரோஜா தேவியின் சோப்பு டப்பா பரிசு காமெடி காட்சிகளும் இந்த ரயில் வண்டியில்தான்.

200 வருடங்களுக்கு மேலாக இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர்கள் பல நவீன விஷயங்களை இந்தியாவில் அறிமுகம் செய்து வைத்தார்கள். இதோ யுனோஸ்கோ பாரம்பரிய சின்னங்களில் ஒன்றாக அறிவித்துள்ள ஊட்டி மலை ரயில் வண்டி ஆங்கிலேயர்கள் காலத்தில், அவர்கள் இந்தியாவின் தட்ப வெப்ப சூழலை தாங்க முடியாமல் அவர்களின் வசதிக்கேற்ப தங்கும் வசதிக்காகவே உதகை மலை ரயிலும் உதக மண்டலத்தையும் தயார் செய்தனர். அதே போல்தான் மதுரை முதல் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள போடி வரை தேனி வழியாக அமைக்கப்பட்ட இந்த ரயில் பாதையும். வாஸ்கோடகாமா கடல் வழியாக கேரளத்தின் கோழிக்கோட்டில் வந்து இறங்கியது வரலாறு .மேற்கு தொடர்ச்சி மலையில் விளைந்த மிளகு மற்றும் ஏலக்காயை தங்களின் நாட்டிற்கு எடுத்து செல்ல வேண்டும் என்பதற்காகவே வாஸ்கோடகாமா வந்தார். ஆம் அந்த வகையில் ஆங்கிலேயர்களும் தங்களின் தேவைக்கு மேற்கு தொடர்ச்சி மலையில் விளைந்த மிளகு ஏலக்காயை எளிதாக தங்கள் நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்ற காரணத்தினாமாகவே இந்த போடி முதல் தேனி வழியாக மதுரை வந்து சென்னையை அடைந்து கடல் வழியே ஏற்றுமதி செய்தனர். ஆம் அதற்காகவே மதுரையில் இருந்து தேனி மாவட்டம் செல்லும் வழியில் ஒரு குன்றினை குடைந்து ரயில் பாதை அமைத்து இருப்பார்கள் ஆங்கிலேயர்கள். மேற்கு தொடர்ச்சி மலையில் விளையும் ஏலக்காயை போடி கொண்டு வந்து சேர்க்கும் நடைமுறை இன்று வரை உள்ளது.சில வருடங்களுக்கு முன்பு வெளியான மேற்கு தொடர்ச்சி மலை திரைப்படம் கூட மலையுச்சியில் இருந்து ஏலக்காயை போடி வரை கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பே கதையாக இருக்கும். 1996-ம் ஆண்டிற்கு முன்பு வரை தேனி மாவட்டம் மதுரை மாவட்டத்துடன் ஒருங்கிணைந்த மாவட்டமாகவே இருந்து வந்தது. ஆங்கிலேயர் காலத்து போடி முதல் மதுரை ரயில் வண்டி காலையில் பத்து மணி சுமாருக்கு போடி வரை வந்து ஏலக்காயையும் பயணிகளையும் ஏற்றிக் கொண்டு மதியத்திற்கு மேல் திரும்பிச் செல்லும்.வரும் போதும் திரும்பிச் செல்லும் போதும் ரயில் வண்டியில் இருந்து எழுப்பப்படும் ஒலியே அன்றைய காலகட்டத்தில் தோட்டத்தில் வேலை செய்வோருக்கு மணி சொல்லும் சப்தம். இன்று தேனி மாவட்டம் என தனி மாவட்டமாக இருக்கும் நிலையில் தேனி மாவட்டத்தில் உள்ள மிகவும் பழமையான பாரம்பரியமான ஒரு கல்லூரிதான் CPA COLLEGE.ஆம் Cardamom Planters' Association எனப்படும் ஏலக்காய் பயிரிடுவோர் சங்கத்தின் கல்லூரி தான் இந்த கல்லூரி. ஆம் ,ஆங்கிலேயர்கள் காலத்தில் இருந்து வந்த ஏலக்காய் பயிரிடுதல் மற்றும் அறுவடை இன்று வரை உள்ளது.'எம்டன் மகன்', 'வெண்ணிலா கபடி குழு', 'நான் மகான் அல்ல', 'பாண்டிய நாடு' உள்ளிட்ட படங்களின் வசனகர்த்தாவும், 'அழகர்சாமியின் குதிரை' திரைப்படத்தின் கதாசிரியர் 'வடக்கன்' என்ற பெயரில் எடுக்கப்பட்டு 'ரயில்' ஆகி திரையரங்குகளில் ஓடிய திரைப்படம் மூலம் இயக்குநரான பாஸ்கர் சக்தி இந்த CPA கல்லூரியில் ஆங்கில இலக்கியம் படித்த மாணவர்தான்.

ஆங்கிலேயர்கள் காலத்தில் இருந்து கடந்த 2012 -ம் ஆண்டு மீட்டர் கேஜ் ரயில் பாதையாக இருந்து வந்த இந்த ரயில் பாதை இப்போது அகல ரயில் பாதையாக மாற்றம் செய்யப்பட்டு போடியில் இருந்து சென்னை வரை செல்லும் பயணிகள் ரயில் வண்டியாக ஓடுகிறது. இதோ இன்று நாம் அனைவரும் தேனி நகரின் பெயரை ஆங்கிலத்தில் எழுத THENI என எழுதி வருகிறோம். ஆனால் தேனி ரயில் நிலைய வளாக பெயர் பலகையில் ஆங்கிலேயர்கள் எழுதிச் சென்ற TENI என்றே இன்றும் இருக்கிறது ஆங்கிலேயர்கள் விட்டுச் சென்ற அடையாளமாக.

Tail Peace: ரயில் RAIL என்றால் அது பலரும் தொடர் வண்டி என்றே நினைப்பார்கள். இல்லை. ரயில் என்றால் ட்ரெயின் TRAIN எனும் தொடர் வண்டி ஓடும் இரும்பு அமைக்கப்பட்ட தண்டவாளமே ஆகும். ரயில் எப்போ வரும் என்று கேட்போர் ஒரு நிமிடம் யோசித்து பாருங்கள் தரையில் கிடக்கும் தண்டவாளம் எழும்பி வந்தால் எப்படி இருக்கும்! ரயில் அங்கேதான் இருக்கும் ட்ரெயின் தான் அதன் சென்று வரும்.

**- வீ.வைகை சுரேஷ்.**

# பீமன் ரெடியாகிவிட்டார்....

ஐயா ரெடிஆகிட்டாரு..
பீமன் ரெடியாகி விட்டார்
இவரு திருவீதி உலாவுக்கு வெளியேவந்துட்டா தேரோட சக்கரம் உருல ரெடி ஆகிட்டுதா அர்த்தம்...
திருநெல்வேலி ஆனிப்பெருந்திருவிழாவில் பிரம்மாண்ட திருமேனியா ஒரு மரச்சிற்பம் தேர் வீதிகளில் காலையில் உலா வருகிறதே?
அவர் யார் என்ற கேள்வி நம் அனைவர் மத்தியிலும் உள்ளது தானே?
அவரை திருநெல்வேலி மக்கள் பீமன், வீமன் என்றெல்லாம் அழைக்கிறார்கள்.
திருநெல்வேலியில் பிரம்மாண்ட திருமேனியா பீமன் உலா வருவதற்கு காரணமா மகாபாரதத்துடன் தொடர்புடைய ஒரு செவிவழிக் கதை கூறப்பட்டு வருகிறது.
அதென்ன செவிவழிக் கதை?

*முற்காலத்தில் (மகாபாரத காலம்) பஞ்சபாண்டவர்கள் எல்லாம் வனவாசம் சென்ற காலத்தில், பாரதத்தின் தென்கோடியில் உள்ள மூங்கில் மரங்கள் அடர்ந்த வனப்பகுதியான திருநெல்வேலி பக்கம் வந்ததாகவும், அப்போது இங்குள்ள சுவாமி நெல்லையப்பர் பீமனுக்கு அருள்புரிஞ்சதாகவும், அதற்கு நன்றிக்கடனா பீமன் தான் திருநெல்வேலி ஆனிப்பெருந்திருவிழாவை முன் நின்று நடத்தி வைத்ததாகவும், அதன் அடிப்படையில் தான் பீமனின் பிரம்மாண்ட திருமேனி ஆனிப்பெருந்திருவிழாவில் உலா வருவதாகவும் செவிவழிக் கதை ஒன்று கூறப்பட்டு வருகிறது.
இது செவிவழிக் கதை என்றால் அப்போ உண்மையில் இவர் யார்? அப்படிங்கிற கேள்வி நமக்கெல்லாம் வருமே? சரிதானே!

இந்த பிரம்மாண்ட திருமேனி உண்மையில் ஏகாதச ருத்திரர்களுள் ஒருவரான பீமருத்திரர் ஆவார்.

யாறிந்த பீமருத்திரர்?

சிவபுராணங்களில், பிரபஞ்சத்தைப் படைப்பதற்கு பிரம்மனுக்கு உதவியாக இருப்பதற்காக சிவபெருமான், பிரம்மாவின் நெற்றியிலிருந்து பதினொறு பேர்களை படைத்ததாக கூறப்படுகிறது. இவ்வாறு தோன்றியவர்கள் “ஏகாதச ருத்திரர்கள்” ஆவார்கள். ஏகாதச ருத்திரர்கள் பதினொரு பேர்களில் பீமருத்திரரும் ஒருவர் ஆவார்.

பீமருத்திரர் யாருனு இப்போ தெரிந்து விட்டது. அடுத்ததாக அவர் எதற்காக திருநெல்வேலிக்கு வந்தார் என்று தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா!



பீமருத்திரர் ஏன் திருநெல்வேலி வந்தார்?
இதற்கு விடை காண நாம் திருமாணிக்குழி என்ற சைவத் திருக்கோவில் வரலாற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

முற்காலத்தில் திருமால் பிரம்மசாரியாக வந்து மகாபலியிடம் மூன்றடி மண் கேட்டு அவனை அழித்ததால் ஏற்பட்ட பழி தீர திருமாணிக்குழி என்னும் ஸ்தலத்தில் சிவபெருமானை பூஜை செய்து வழிபட்டார். அப்போது பீமருத்திரர், சிவபெருமான் கட்டளைப்படி திருமால் செய்த பூஜைகளில் எவ்வித இடையூறும் ஏற்படாமல் பாதுகாப்பதற்காக காவல் புரிந்தார்.
இந்த திருமாணிக்குழி ஸ்தலத்தின் ஒரு சிறப்பம்சம் என்னவென்றால் இங்கு மூலவரை நாம் நேரடியாக தரிசிப்பது இயலாது. ஏனெனில் எந்நேரமும் மூலவர் சன்னதியில் திரை போடப்பட்டிருக்கும். இங்கு இறைவனும், இறைவியும் எப்போதும் சிவசக்தியாக சேர்ந்திருப்பதாகக் கருதப்படுவதால் அவர்களை தொந்தரவு செய்யாமல் இருக்கும் பொருட்டு திரையிடப் பட்டிருப்பதாக ஐதீகம்.
மேலும் அந்த திரையில் திருமால் பூஜைக்கு காவலாக நின்ற பீமருத்திரர் திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த தீரைச்சீலையில் உள்ள பீமருத்திரருக்கு பூஜை நடைபெற்ற பின்னரே, திரைவிலக்கப்பட்டு கருவறை லிங்கத்துக்கு பூஜை நடைபெறும் என்பதும் சிறப்பம்சம் ஆகும்.

ஆக திருமால் செய்த சிவ பூஜையில் எவ்வித இடையூறும் இல்லாமல் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்ற பீமருத்திரர், திருநெல்வேலி சுவாமி நெல்லையப்பர் திருக்கோவிலில் திருமால் முன் நின்று நடத்திய ஆனிப்பெருந் திருவிழாவுக்கு காவலாக திருநெல்வேலி வந்தடைந்தார் என்பதும், இவரே தற்போது ஆனிப்பெருந்திருவிழாவில் பிரம்மாண்ட திருமேனியாக திருவீதிஉலா வருகிறார் என்றும் கூறப்படுகிறது.

திருநெல்வேலி தலப்புராணத்தில் திருமாலே முன் நின்று திருநெல்வேலி ஆனிப்பெருந்திருவிழாவை நடத்தி வைத்ததாக திருநெல்வேலி தல புராணத்தின் 56-வது சருக்கத்தில் கூறப்பட்டுள்ளது. ஆகவே திருமாலே நடத்தி வைத்த திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் ஆனிப்பெருந்திருவிழாவில், அவருடைய சிவபூஜை காவலராக விளங்கும் பீமருத்திரர் உலா வருகிறார் என்பது சிறப்பான செய்தி ஆகும்.

# மீம்ஸ்










| | |
|---|---|
| இதயம் போல் துடித்திருக்கும் இரவு பகல் விழித்திருக்கும் அது என்ன? | கடிகாரம் |
| உருவம் இல்லாதவன் சொன்னதைத் திரும்பச் சொல்லுவான் அவன் யார்? | எதிரொலி |
| உள்ளே இருந்தால் ஓடித்திரியும் வெளியே வந்தால் விரைவில் மடியும் அது என்ன? | மீன் |
| காலைக்கடிக்கும் செருப்பல்ல காவல் காக்கும் நாயல்ல அது என்ன? | முள் |
| அமைதியான பையன் ஆனால் அடிக்காமலேயே அழுவான் அவன் யார் | ஐஸ் கட்டி |
| ஒரே வயிற்றில் பிறந்தாலும் ஒருவன் ஓடுவான்.. ஒருவன் நடப்பான் அவன் யார்? | கடிகாரம் |

# ஜோக்ஸ்



தம்பி தீக்குச்சியை பத்த வெச்சு ஏன் இட்லி மேல வைச்சு பார்க்கிற?

நீங்க தானே இட்லி "பஞ்சு" மாதிரி இருக்குன்னு சொன்னீங்க! அதான் தீப்பிடிக்குதானு பார்த்தேன்!

==============================
==============================

'பாடத்தைக் கவனிக்காமல் இருந்ததால உன்ன டீச்சர் அடிச்சாங்களே, அதை ஞாபகம் வச்சிருக்கியா?




நான் அதை "அடி"யோடு மறந்துட்டேன்.

==============================
==============================

வரலாறு ஏன்டா உனக்கு பிடிக்காதுன்னு சொல்ற?

சார் நான் "விஜய்"யோட ரசிகன்!

==============================
==============================

வெண்ண வியாபாரி லெட்டர் எப்படி எழுதுவாரு?

"உருகி, உருகி" எழுதுவாரு!

==============================
==============================

கணக்குப் பரீட்சையில, கணக்குப் போடாமல் எதுக்குடா டான்ஸ் ஆடிக்கிட்டு இருக்க?

நீங்கதான் சார் சொன்னீங்க "ஸ்டெப்ஸ்" க்கு மார்க் உண்டுன்னு.

==============================
==============================

என் ஹார்ட் ரொம்ப வீக்கா இருக்கு டாக்டர்!

சுமார் எத்தனை "வீக்"கா அப்படி இருக்கு?

==============================
==============================

நெஞ்சைத் தொடும் ஒரு வார்த்தை சொல்லு

பனியன்

==============================
==============================

திருவள்ளுவர் ஒரு மிமிக்கிரி ஆர்டிஸ்ட்னு எப்படி சொல்ற?

1330 குரளு(ல்)க்கு சொந்தக்காரர் ஆச்சே! அதான்



# ஜோதிடம் அறிவோம்



## ஏமாற்றத்திற்கு ஆளாகும் ராசிக்காரர்கள்..

உண்மையில்லாத விஷயங்களை நம்புவதற்கு அதிக வாய்ப்புள்ள ராசிகள் மீனம், துலாம், கடகம் மற்றும் தனுசு ராசிக்காரர்கள் ஆவர்.

### 1. மீன ராசி



கட்டத்தில் கடைசி ராசியாகும். இந்த ராசியில் பிறந்தவர்கள் பெரும்பாலும் கனிவானவர்கள், கற்பனைத் திறன் கொண்டவர்கள், மற்றவர்களைப் புரிந்து கொள்வதில் வல்லவர்கள். ஆனால் சில நேரங்களில் அவர்களின் கருணை மற்றவர்களை மிக எளிதாக நம்ப வைக்கும். யாரோ ஒருவர் பொய் சொல்கிறார்கள் அல்லது ஏமாற்ற முயற்சிக்கிறார்கள் என்பதற்கான அறிகுறிகளை அவர்கள் புறக்கணிக்கலாம். ஏனென்றால் அவர்கள் மக்களைப் பற்றிச் சிறந்ததை நம்ப விரும்புகிறார்கள். மேலும், மீன ராசிக்காரர்கள் தங்கள் கனவு உலகங்களுக்குள் தப்பிக்க விரும்புவார்கள், இது உண்மை இல்லாத விஷயங்களை நம்புவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

### 2. துலாம் ராசி



இந்த ராசியினர் எப்போதும் விஷயங்கள் நியாயமாகவும் அமைதியாகவும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள். அவர்கள் ஒரு சூழ்நிலையின் இரு பக்கங்களையும் பார்ப்பதில் திறமையானவர்கள், ஆனால் இது நேர்மையற்றவர்கள் மீது அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடும். துலா ராசிக்காரர்கள் வாதிடுவதை விரும்புவதில்லை, அதனால் ஏதாவது தவறாகத் தோன்றும்போது அவர்கள் புறக்கணிக்கக்கூடும், ஏனெனில் அவர்கள் சண்டையைத் தொடங்க விரும்ப மாட்டார்கள். இது அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பும் மக்களுக்கு எளிதான இலக்குகளாக மாற்றும்.

### 3. கடக ராசி



பொதுவாக தங்கள் அன்புக்குரியவர்களை மிகவும் அக்கறையுடன் பாதுகாப்புடனும் நடத்துகிறார்கள். மற்றவர்களைக் கவனித்துக் கொள்வதில் சிறந்தவர்கள், ஆனால் சில நேரங்களில் அவர்கள் அதிகமாக அக்கறை காட்டுகிறார்கள். யாராவது பொய் சொல்லும்போது அல்லது தங்கள் குடும்பத்தை மகிழ்ச்சியாக வைத்திருக்க விரும்புவதால் அவர்களைப் பயன்படுத்தும்போது அவர்கள் புறக்கணிக்கக்கூடும். கடக ராசிக்காரர்கள், மற்றவர்களிடத்தில் அன்பு செலுத்தும்போது, இவர்களின் உணர்வுகளைப் பற்றிக் கவலைப்படாதவர்களால் இவர்கள் எளிதாக ஏமாற்றிவிடக்கூடும்.

### 4. தனுசு ராசி



ஆராய்ந்து மகிழ்வதை விரும்புகிறவர்கள். எப்போதும் அடுத்த பெரிய சாகசத்தைத் தேடுபவர்கள், இது உண்மையாக இருக்க முடியாத அளவுக்கு நன்றாகத் தோன்றும் விஷயங்களை நம்பவும் அவர்களைத் தூண்டும். தனுசு ராசிக்காரர்கள் நம்பிக்கையானவர்கள். மக்களைச் சிறந்தவர்களாக நினைப்பார்கள். அதனால் அவர்களை யாராவது ஏமாற்ற முயற்சிக்கும்போது அது அவர்களுக்கே தெரியாமல் போகலாம். இந்த ராசியினர் உலகத்தை ஒரு மகிழ்ச்சியான இடமாகக் காண விரும்புகிறார்கள், இது அவர்களை மோசடிகள் மற்றும் பொய்களுக்கு எளிய இலக்காக மாற்ற வழிவகுக்கும்.

மேற்சொன்ன இந்த ராசிக்காரர்கள் உண்மையில்லாத விஷயங்களை நம்புவதற்கு அதிக வாய்ப்பிருந்தாலும், அனைத்து ராசியினரும் மற்ற ராசிக்காரர்களிடம் கவனமாக இருப்பது முக்கியம். எந்த ராசிக்காரர்களும், தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தவில்லை என்றால் ஏமாற்றப்படலாம்.

புத்திசாலியாக இருப்பதன் மூலமும், அவர்களின் உள்ளுணர்வைக் கேட்பதன் மூலம், எப்போது வேண்டாம் என்று சொல்ல வேண்டும் என்பதை அறிந்துகொள்வதன் மூலமும், எல்லோரும் நேர்மையாக இல்லாத இந்த உலகில் எவரும் முட்டாளாக்கப்படுவதில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

புதன் மற்றும் சுக்கிரன் சூரியனுக்கு அருகில் வருவதால், அவை எப்போதும் அஸ்தங்கம் அடைகின்றன. சூரியனுக்கு மிக அருகில் வரும் கிரகம் புதன் என்பதால், பொதுவாகவே இது சுமார் 70 சதவீத பிறப்பு ஜாதகத்திலும் அஸ்தங்கம் அடைந்தே காணப்படும். புதன் நேர்கதியில் 14 பாகை வித்தியாசத்திலும், வக்ர கதியில் 12 பாகை வித்தியாசத்திலும் சூரியனுக்கு முன்பின் ராசிகளில் அஸ்தங்கம் அடைவார்.

மேலும் ஒருவரின் ஜாதகத்தில், புதன் அஸ்தங்கம் அடைந்தவர்களும், அவர்தம் அறிவுத் திறன் தவறான / வெற்று கர்வத்தால் தடுமாற்றம் ஏற்படும். அதிக தன்னம்பிக்கையால் காரியங்கள் செயல் இழந்து விடும். எளிதாக இவர் ஏமாறவே செய்வார் / பிறரால் ஏமாற்றப்படுவார்.

அஷ்டவர்கம் எனும் ஜோதிட கணிதம் மூலம் இதனைச் சொல்லவேண்டுமானால், லக்கினத்தை விட 4 ஆம் இடம் அதிக பரல் பெற்றிருப்பின் அவர் அறிவு சொல்படி நடப்பவர் எதனையும் தாம் அறிந்த புரிந்த அறிவு சார்ந்து முடிவெடுப்பதால், இவரின் முடிவுகள் நியாயம் இல்லாமல் போகும். அது ஏமாற்றத்தைத் தருவதாக இருக்கவே செய்யும். அதே சமயம் நான்காம் இடத்தை விட லக்கனத்தில் அதிக பரல் பெற்றிருக்கும் ஒரு நபர் ஆத்மா சொல்படி நடப்பார், அதனால் அவர் எடுக்கும் முடிவுகளில் நியாயம் இருக்கவே செய்யும், யாரிடமும் ஏமாற்றம் அவ்வளவு எளிதாக அடையமாட்டார்.

"ஜோதிடம் ஒரு முன் எச்சரிக்கையே தவிர , முடிவு அல்ல என்பதனை உணரவும்.. அதே போல் ஜோதிடர் வழிகாட்டியே தவிர, கடவுள் அல்ல.. பரிகாரம், என்பது ஜாதகர் மனமாற்றமும், கடவுளிடம் முழு சரணாகதியுமே ஆகும்."



## நோய்கள் நீக்கும் சிவன்!

தக்கன் என்னும் கொடியவன் தனது 27 மகள்களை அழகிய சோமன் எனப்படும் சந்திரனுக்குத் திருமணம் செய்துவைத்தார். அப்போது தக்கன் தனது மகள்களை சந்திரனிடம் ஒப்படைத்து, "27 மகள்களிடமும் சமமாக அன்பைச் செலுத்தி வாழவேண்டும்" என்று நிபந்தனை விதித்தார். ஆனால் சோமனோ, மிகுந்த அழகியான ரோகிணியிடம் மட்டும் அதிகப்படியான காதல் கொண்டு வாழ்ந்து வந்தார். இதனால் ஏனைய 26 பேரும் தக்கனிடம் முறையிட்டனர்.

இதைக் கேட்ட தக்கன் பெரும் சீற்றம் கொண்டு, சோமனுக்கு நாளும் ஒரு கலை குறைந்துவர சாபம் அளித்தார். அதுவே தேய்பிறையானது. சாபம் பலித்தது. எச்சமாக ஒரே ஒரு கலை மிஞ்சியிருந்த வேளையில், திருவாரூர் வந்து புற்றிடம் கொண்ட பெருமானை வழிபட்டார். தேவதீர்த்தத்தில் நீராடி, ஐந்தெழுத்து மந்திரத்தை நாளெல்லாம் நெஞ்சுருக ஓதியவாறு மடப்புரத்தில் சிவலிங்கம் ஸ்தாபித்து முறையாக வழிபட்டார். சிவனும் விடை மீது அமர்ந்து காட்சி அளித்து அருளினார்.

சோமனும் தனக்கு நேர்ந்த சாபத்தை மனங்கசிந்து கண்ணீர் சிந்திக் கூறிப் பணிந்து நின்றார். வேண்டியோருக்கு வேண்டியதை அளிக்கும் சிவனும், ""தக்கன் சாபத்தால் நீ தேய்ந்தாலும் பின்னர் நாளொரு கலையாக வளர்வாய்!" என்று அருளினார். அதுவே வளர்பிறையானது. சோமனின் குறையைத் தீர்த்து அருள்புரிந்ததால், இத்தல இறைவன் சோமநாதப் பெருமான் என்று அழைக்கப் பெறுகிறார்.

வரம் பெற்ற சோமன், ""பக்தர்கள் வந்து வழிபட்டு குறைகளைக் களையும் வகையில் நீங்கள் அருள்புரிய வேண்டும்" என்றார்.

சோமன் ஸ்தாபித்த சிவலிங்கமே "சோமநாதர்' .

சைவ சமயத்தின் தலைமைப் பீடமாகவும், விராட புருஷஸ்தலமாகவும், பிறந்தாலே முக்தி தருவதும், உலகத்தில் முதலில் தோன்றிய மூர்த்திதலமாகவும், நால்வரால் பாடல் பெற்றதாகவும் விளங்குவது தியாகேசர் உறையும் திருவாரூர் ஆகும்.





அருணகிரிநாதரால் திருப்புகழ் பாட பெற்ற தலமாகவும் மடப்புரம் தலம் உள்ளது. மேற்கு நோக்கி அமையப் பெற்ற அற்புத சிவன் கோயில்.

ஞானத்தையும் யோகங்களையும் அளிக்க வல்ல அன்னையாக ஸ்ரீஞானசித்தி யோகாம்பிகை அருள்கிறார்.

"சோமநாதரை வேண்டுவோரின் துன்பங்கள் நீங்கும். மருந்துகள் முதலியவற்றால் தீராத நோய்களில் விடுபட்டு நலம் பெறுவர். கல்வி, செல்வம், புகழ், சித்தி, முக்தி உள்ளிட்ட பேறுகளை எளிதில் எய்துவர்' என்பது ஐதீகம். திங்கள்கிழமை வழிபட்டால் பக்தர்கள் கூடுதல் பலன்களைப் பெறலாம்.

இங்குள்ள சந்திர புஷ்கரணி தீர்த்தத்தில் நீராடுவோருக்கு தோல் நோய் உள்பட அனைத்து விதமான நோய்களும் விலகுகின்றன என்பதை பக்தர்கள் உணர்கின்றனர்.

## மகாளய பட்சம் என்றால் என்ன என்று தெரியுமா?



மகாளய அமாவாசை நாளில் மகாவிஷ்ணுவின் ஆசீர்வாதம் பித்ருக்களை தேடி வரும். அந்த ஆசீர்வாதத்தை பித்ருக்களும் நம்மிடம் நேரடியாக எடுத்து வரக்கூடும்.

எனவே மகாளயபட்ச நாட்களில் பித்ருக்களை வழிபாடு செய்து, விஷ்ணுவின் அருளை பெறத் தவறாதீர்கள்.

மாதம் தோறும் அமாவாசை வந்தாலும் தை அமாவாசை, ஆடி அமாவாசை, மகாளய அமாவாசை ஆகிய மூன்று அமாவாசைகளும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த மூன்றிலும் அதிக புண்ணியத்தை தருவது மகாளய அமாவாசை ஆகும்.

அதாவது 15 நாட்கள் பித்ருக்களை வழிபட வேண்டியதை மகாளய அமாவாசை குறிக்கிறது. பவுர்ணமி தினத்துக்கு மறுநாள் பிரதமை திதியில் இருந்து மகாளய அமாவாசை வரை உள்ள 15 நாட்களும் பித்ருக்கள் பூலோகத்தில் இருக்கும் காலமாக கணக்கிடப்பட்டுள்ளது. அதன்படி இந்த ஆண்டு கடந்த 8- ந்தேதி மகாளயம் தொடங்கியது. வருகிற 21-ந்தேதி வரையிலான 14 நாட்கள் பித்ருக்கள் நம்மை நெருங்கி இருக்கும் மகாளயபட்ச தினங்களாகும்.

திதி என்னவென்று தெரியாதவர்கள், மகாளய அமாவாசை தினத்தன்று தர்ப்பணத்தை மிகவும் சிரத்தையாக செய்தல் வேண்டும். தர்ப்பணத்தை மிக, மிக ஆடம்பரமாக செய்ய வேண்டும் என்பதில்லை. எளிமையாக செய்தாலே போதும், பித்ருக்கள் மனம் மகிழ்ந்து நம்மை ஆசீர்வதிப்பார்கள்.

இந்த 15 நாட்களில் வரும் ஒவ்வொரு திதியும், ஒவ்வொரு வகை பித்ருக்களுக்கு உகந்த தினமாக கருதப்படுகிறது. அந்த திதி சிறப்பு நாட்களை பெரியவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

## வெவ்வேறு நட்சத்திரங்களில் நின்ற "சனி" தரும் பலன்கள் என்னென்ன?

வேத ஜோதிடத்தின் பணி நிர்வாகி ஆன "சனி கிரகம்", ஒழுக்கம், பொறுப்பு, பொறுமை மற்றும் கர்ம பாடங்களைக் குறிக்கிறது. 27 நட்சத்திரங்களில் சந்திர மாளிகைகள் ஒன்றில் அதன் இடத்தைப் பொறுத்து, சனி வெவ்வேறு வழிகளில் வெளிப்படுகிறது, ஒரு நபரின் வாழ்க்கை பாதை, போராட்டங்கள் மற்றும் வளர்ச்சியை வடிவமைக்கிறது. ஒவ்வொரு நட்சத்திரத்தையும் சனி எவ்வாறு பாதிக்கிறது என்பதை தெரிந்துகொள்வோம்.

**அஸ்வினியில் சனி (மேஷம் 0° - 13°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

அஸ்வினியில் சனி இந்த நட்சத்திரத்தின் தூண்டுதல் தன்மையை மெதுவாக்குகிறது, இது புதிய முயற்சிகளைத் தொடங்குவதில் ஜாதகரை முறையாக்குகிறது. அவர்கள் தலைமை மற்றும் குணப்படுத்தும் திறன்களில் தாமதங்களை அனுபவிக்கலாம், ஆனால் காலப்போக்கில் வலுவான உறுதியை வளர்த்துக் கொள்ளலாம்.

**பரணியில் சனி (மேஷம் 13°20' - 26°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

பரணி சுக்கிரனால் ஆளப்படுகிறது மற்றும் மாற்றத்தைக் குறிக்கிறது. சனி இங்கே பொருள் சார்ந்த விஷயங்களில் போராட்டங்களைக் கொண்டு வருகிறது, பொறுமை தேவைப்படுகிறது. ஜாதகர்கள் பொறுப்புகளைக் கையாள்வதில் ஒழுக்கத்தைக் கற்றுக் கொள்கிறார்கள் மற்றும் உறவுகள் மற்றும் நெறிமுறைகள் தொடர்பான கர்ம பாடங்களை எதிர்கொள்ள நேரிடும்.

**கிருத்திகையில் சனி (மேஷம் 26°40' - ரிஷபம் 10°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

கிருத்திகையில், சனி புத்தியைக் கூர்மையாக்கி, வலுவான பணி நெறிமுறையை வளர்க்கிறது. இருப்பினும், இது ஒரு கடினமான மனநிலையையும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் சிரமத்தையும் உருவாக்கக்கூடும். இந்த ஜாதகர்கள் மாயைகளை துண்டிப்பதில் திறமையானவர்கள், ஆனால் இரக்கத்துடன் செயல்பட வேண்டும்.

**ரோஹிணியில் சனி (ரிஷபம் 10°00' - 23°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

ரோகிணி படைப்பாற்றல் மற்றும் பொருள் மிகுதியுடன் தொடர்புடையது. சனி இங்கு அமைந்திருப்பது செழிப்பை தாமதப்படுத்தலாம், ஆனால் நிலையான, நீண்டகால வளர்ச்சியை உறுதி செய்கிறது. ஜாதகர்கள் நிதி மற்றும் உறவுகளில் நிலைத்தன்மையை அடைவதில் பொறுமையைக் கற்றுக்கொள்கிறார்கள்.

**மிருகசீரிஷத்தில் சனி (ரிஷபம் 23°20' - மிதுனம் 6°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

மிருகசீரிஷம் அறிவு மற்றும் ஆய்வுக்கான தேடலைக் கொண்டுவருகிறது. சனி திடீர் செயல்களைக் கட்டுப்படுத்துகிறது, இதனால் ஜாதகர்கள் அறிவுசார் நோக்கங்களில் ஒழுக்கமானவர்களாக மாறுகிறார்கள். பயணம் மற்றும் ஆர்வம் ஆரம்பத்தில் தடைபடலாம், ஆனால் விடாமுயற்சியுடன் வெகுமதி அளிக்கப்படுகிறது.

**திருவாதிரையில் சனி (மிதுனம் 6°40' - 20°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

ஆர்த்ரா புயல்களையும் மாற்றத்தையும் குறிக்கிறது. இங்கு சனி உணர்ச்சி எழுச்சிகளைக் கொண்டுவருகிறது, பற்றின்மை மற்றும் மீள்தன்மையைக் கற்பிக்கிறது. ஜாதகர் போராட்டங்களுக்குப் பிறகு வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப கற்றுக்கொள்கிறார் மற்றும் நெருக்கடிகளைக் கையாள்வதில் திறமையானவராகிறார்.

**புனர்பூசத்தில் சனி (மிதுனம் 20°00' - கடகம் 3°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

புனர்வசுவில், சனி இந்த நட்சத்திரத்தின் இயல்பான நம்பிக்கையை மெதுவாக்குகிறது, இதனால் ஜாதகர்கள் மீண்டும் மீண்டும் வெற்றி பெற கடினமாக உழைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். முயற்சி மற்றும் விடாமுயற்சி நீடித்த சாதனைகளுக்கு வழிவகுக்கும் என்பதை அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள்.


**பூசத்தில் சனி (கடகம் 3°20' - 16°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

மிகவும் மங்களகரமான நட்சத்திரமான புஷ்ய, சனியின் ஒழுக்கமான இயல்புடன் நன்கு ஒத்துப்போகிறது. ஜாதகர் கட்டமைக்கப்பட்ட முயற்சிகள் மூலம் வெற்றியை அடைகிறார், சமூகத்தில் வழிகாட்டும் சக்தியாக மாறுகிறார்.

**ஆயில்யத்தில் சனி (கடகம் 16°40' - 30°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

அஷ்லேஷம் கையாளுதல் மற்றும் ரகசியத்துடன் தொடர்புடையது. சனியின் இருப்பு ஒரு எச்சரிக்கையான அணுகுமுறையை உருவாக்குகிறது, இது ஜாதகரை வஞ்சகத்திலிருந்து எச்சரிக்கையாக ஆக்குகிறது. அவர்கள் வலுவான மீள் தன்மையை வளர்த்துக் கொள்கிறார்கள், ஆனால் அதிகப்படியான சந்தேகத்தைத் தவிர்க்க வேண்டும்.

**மகத்தில் சனி (சிம்மம் 0° - 13°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**



மகம் வம்சாவளி மற்றும் அதிகாரத்தைக் கையாள்கிறது. சனி அங்கீகாரத்தை தாமதப்படுத்துகிறது, ஆனால் காலப்போக்கில் மரியாதையை உறுதி செய்கிறது. தலைமைப் பாத்திரங்களை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு ஜாதகர் பணிவைக் கற்றுக்கொள்கிறார்.

**பூரத்தில் சனி (சிம்மம் 13°20' - 26°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இங்கே, சனி இன்பங்களை மெதுவாக்குகிறது, ஜாதகரை இன்பம் மற்றும் உறவுகளில் ஒழுக்கத்தைக் கற்றுக்கொள்ள வைக்கிறது. அவர்கள் அன்பில் நல்லிணக்கத்தைக் கண்டறிவதில் தாமதங்களை எதிர்கொள்கிறார்கள், ஆனால் இறுதியில் ஆழமான, அர்த்தமுள்ள பிணைப்புகளை அடைகிறார்கள்.

**உத்தரத்தில் சனி (சிம்மம் 26°40' - கன்னி 10°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இந்த நட்சத்திரத்தில் சனி கூட்டாண்மையில் பொறுப்பை வளர்க்கிறார். ஜாதகக்காரர் நீண்டகால உறுதிப்பாடுகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வேலை சூழல்களில் சிறந்து விளங்குகிறார்.

**ஹஸ்தத்தில் சனி (கன்னி 10°00' - 23°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

ஹஸ்தாவின் படைப்பாற்றல் மற்றும் திறமை சனியின் ஒழுக்கத்தால் செம்மைப்படுத்தப்படுகிறது. ஜாதகக்காரர் கைவினைத்திறன், வணிகம் மற்றும் துல்லியமான வேலைகளில் திறமையானவராக மாறுகிறார்.

**சித்திரையில் சனி (கன்னி 23°20' - துலாம் 6°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இங்கு சனி கடுமையான பயிற்சி மூலம் கலைத் திறன்களைச் செம்மைப்படுத்துகிறார். ஜாதகக்காரர்கள் உறவுகளில் போராட்டங்களை எதிர்கொள்ளலாம், ஆனால் பொறுமை மற்றும் முதிர்ச்சியை வளர்த்துக் கொள்ளலாம்.

**சுவாதியில் சனி (துலாம் 6°40' - 20°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

சுவாதி சுதந்திரத்தை நாடுகிறார். சனியின் செல்வாக்கு ஒழுக்கமான தன்னம்பிக்கையைக் கொண்டுவருகிறது, இருப்பினும் நிலைத்தன்மையை கண்டறிவதில் ஆரம்ப போராட்டங்கள் எழலாம்.

**விசாகத்தில் சனி (துலாம் 20°00' - விருச்சிகம் 3°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

விசாகத்தில் சனி உறுதியையும் லட்சியத்தையும் வளர்க்கிறது. ஜாதகர்கள் வெற்றிக்காகக் கடுமையாக உழைக்கிறார்கள் மற்றும் துன்பங்களை எதிர்கொள்ளும்போது விடாமுயற்சியை கற்றுக்கொள்கிறார்கள்.

**சனியின் நட்சத்திரமான அனுஷத்தில், சனி (விருச்சிகம் 3°20' - 16°40') [நான்கு பாதங்களும் அடக்கம் ]**

இந்த இடம் ஒழுக்கமான நெட்வொர்க்கிங் மற்றும் ராஜதந்திரத்தை ஆதரிக்கிறது. ஜாதகர்கள் உறவுகளில் பொறுமையையும் கட்டமைக்கப்பட்ட சமூக தொடர்புகளையும் கற்றுக்கொள்கிறார்கள்.

**கேட்டையில் சனி (விருச்சிகம் 16°40' - 30°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

ஜ்யேஷ்டாவின் அதிகாரபூர்வமான தன்மை சனியால் மென்மையாக்கப்படுகிறது, இது ஜாதகர்களை ஒரு பொறுப்பான தலைவராக ஆக்குகிறது. அவர்கள் தனிமையுடன் போராடலாம், ஆனால் காலப்போக்கில் மரியாதை பெறலாம்.

**மூலத்தில் சனி (தனுசு 0° - 13°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

மூலம் அழிவு மற்றும் உண்மையைத் தேடுவதைக் குறிக்கிறது. சனி ஆழ்ந்த உள் வேலையைக் கட்டாயப்படுத்துகிறது, ஜாதகர்களை ஞானத்திற்கான மாற்றும் அனுபவங்களுக்கு உட்படுத்துகிறது.

**பூராடத்தில், சனி (தனுசு 13°20' - 26°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இந்த நட்சத்திரத்தின் லட்சியவாதம் சனியின் யதார்த்தத்தால் அடித்தளமாக உள்ளது. குருட்டு நம்பிக்கையை விட முயற்சியின் முக்கியத்துவத்தை ஜாதகர் கற்றுக்கொள்கிறார்.

**உத்திராடத்தில், சனி (தனுசு 26°40' - மகரம் 10°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இது ஒரு சக்திவாய்ந்த இடமாகும், ஏனெனில் சனி உத்தர ஆஷாடத்தின் வெற்றி இயல்புடன் நன்றாக இணைகிறது. ஜாதகர் விடாமுயற்சி மூலம் நீண்டகால வெற்றியை அடைகிறார்.

**திருவோணத்தில், சனி (மகரம் 10°00' - 23°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

சனி கற்றல் மற்றும் தகவல் தொடர்புகளில் ஒழுக்கத்தை மேம்படுத்துகிறது. ஜாதகர் அறிவு மற்றும் ஞானத்தைப் பெறுவதில் பொறுமையை வளர்த்துக் கொள்கிறார்.

**அவிட்டதில், சனி (மகரம் 23°20' - கும்பம் 6°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

தனிஷ்டத்தில் சனி கட்டமைக்கப்பட்ட படைப்பாற்றல் மற்றும் தலைமைத்துவத்தை ஆதரிக்கிறது. ஜாதகர் புகழில் தாமதங்களை எதிர்கொள்கிறார்., ஆனால் முயற்சியால் அங்கீகாரத்தை அடைகிறார்.

**சதயத்தில், சனி (கும்பம் 6°40' - 20°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

சதாபிஷகரின் கலகத்தனமான ஆற்றல் சனியால் கட்டுப்படுத்தப்படுகிறது, இதனால் ஜாதகரை சமூக சீர்திருத்தத்திற்காக விடாமுயற்சியுடன் செயல்பட வைக்கிறது.

**பூரட்டாதியில், சனி (கும்பம் 20°00' - மீனம் 3°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இந்த நட்சத்திரத்தில் சனி ஆன்மீக ஒழுக்கத்தை வளர்க்கிறது. ஜாதகக்காரர் கஷ்டங்களைத் தாங்குகிறார், ஆனால் ஞானத்தையும் உள் வலிமையையும் பெறுகிறார்.

**உத்திரட்டாதியில், சனி (மீனம் 3°20' - 16°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இந்த இடம் ஆன்மீக வளர்ச்சியில் பொறுமையை ஆதரிக்கிறது. ஜாதகக்காரர் காலப்போக்கில் நெகிழ்ச்சி தன்மையையும் ஆழமான உள் ஞானத்தையும் வளர்த்துக் கொள்கிறார்.

**ரேவதியில் சனி (மீனம் 16°40' - 30°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

ரேவதியின் இரக்க ஆற்றல் சனியால் கட்டமைக்கப்பட்டுள்ளது, ஜாதகரை மற்றவர்களின் நலனுக்காகப் பாடுபடும் ஒழுக்கமான மனிதாபிமானியாக ஆக்குகிறது.

முடிவு: ஒவ்வொரு நட்சத்திரத்திலும் சனியின் இடம் கர்ம பாடங்களைக் கற்பிக்கிறது மற்றும் பொறுமைக்கு வெகுமதி அளிக்கிறது. ஆரம்பத்தில் இது கஷ்டங்களைக் கொண்டு வந்தாலும், இறுதியில் அது ஆழ்ந்த ஞானத்திற்கும் நீண்டகால நிலைத்தன்மைக்கும் வழிவகுக்கிறது. வெவ்வேறு நட்சத்திரங்களில் சனியின் செல்வாக்கைப் புரிந்துகொள்வது தனிநபர்கள் தங்கள் வாழ்க்கைப் பாதைகளை விழிப்புணர்வு மற்றும் விடாமுயற்சியுடன் வழிநடத்த உதவும்.

## ராமேசுவரம் காசி ஆன்மீகப் பயணம்



இந்து சமய அறநிலையத்துறையின் 2025-26 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் ராமேசுவரம் காசி ஆன்மீகப் பயணத்தில் பங்கேற்கும் 602 மூத்த குடிமக்களுக்கு சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் பயண வழிப்பைகளை அமைச்சர் சேகர்பாபு வழங்கி, ஆன்மீகப் பயணத்தை தொடங்கி வைத்தார்.

## இந்து மக்கள் கட்சியினர் அகல் தீபம், பிரசாத தட்டுகளுடன் பிரகாரத்தை சுற்றினர்



உயர் நீதிமன்ற உத்தரவின்படி திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்ற வேண்டி கும்பகோணம் ராமசுவாமி கோயிலில் இந்து மக்கள் கட்சியினர் அகல் தீபம், பிரசாத தட்டுகளுடன் பிரகாரத்தை சுற்றினர்.

## மெழுகுவர்த்தி ஏந்தி அமைதி ஊர்வலம்



திருக்கழுக்குன்றத்தில் ஜெயலலிதா நினைவு நாளையொட்டி அதிமுக சார்பில் மெழுகுவர்த்தி ஏந்தி அமைதி ஊர்வலம் நடந்தது.

# இளைஞரணி மாநாட்டு திடலை பார்வையிடுதல்



**திருவண்ணாமலை, டிச07:** திருவண்ணாமலை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவண்ணாமலையில் டிசம்பர் -14 நடைபெறும் இளைஞரணி மாநாட்டு திடலை பார்வையிட்டார். உடன் மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், மாண்புமிகு துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள், உயர்திரு நாடாளுமன்ற உறுப்பினர் C.N. அண்ணாதுரை அவர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## தமிழ்மக்களுக்காக 950 மெட்ரிக் டன் நிவாரணப் பொருட்கள் கப்பலில் அனுப்பி வைப்பு



இலங்கையில் புயல் மழையால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்காக 950 மெட்ரிக் டன் நிவாரணப் பொருட்களை முதல்வர் ஸ்டாலின் நேற்று கப்பலில் அனுப்பி வைத்தார்.

## சமபந்தி விருந்தில் பாஜக தலைவர் ராமலிங்கம்



புதுச்சேரியில் டாக்டர் அண்ணல் அம்பேத்கர் 69 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு உருளையான்பேட்டை தொகுதி கென்னடி வீதியில் சமபந்தி விருந்தில் பாஜக தலைவர் ராமலிங்கம் பங்கேற்றார்.

## தமிழ்க்கூடல் விழாவில் போட்டிகளில் பெற்றி மாணவிகளுக்கு பரிசு



கடலூர் வேணுகோபாலபுரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்க்கூடல் விழாவில் போட்டிகளில் பெற்றி மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது.

## அம்பேத்கர் நினைவு தினத்தை முன்னிட்டு ரூ.1.96 கோடி மதிப்பீட்டில் 1587 ஆதிதிராவிட பழங்குடியினருக்கு நலத்திட்ட உதவி



**செங்கல்பட்டு, டிச.07:** செங்கல்பட்டு மாவட்டம், மேலக்கோட்டையூர் விஐடி பல்கலைகழகத்தில் டாக்டர்.அண்ணல் அம்பேத்கர் நினைவு தினத்தை முன்னிட்டு ரூ.1.96 கோடி மதிப்பீட்டில் 1587 ஆதிதிராவிட பழங்குடியினருக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்கினார். கலெக்டர் சினேகா, எம்எல்ஏக்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், அரவிந்த் ரமேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் கணேஷ் குமார்,தாம்பரம் மேயர் வசந்தகுமாரி , துணை மேயர் காமராஜ், உள்பட பலர் பங்கேற்றனர்.

## சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி



திருவள்ளூர் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் அபிஷேகம், வண்ண மலர் மாலைகளுடன் தங்க ஆபரணங்களுடன் சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## பிச்சை எடுக்கும் போராட்டம்



நாகர்கோவில் தழுவிய மகாதேவர் ஆலய தெப்பக்குளத்தை சீர்செய்ய இயலாத அறநிலைத்துறை கண்டித்தும், நிதி இல்லாத காரணத்தை சொல்வதை கண்டித்தும், உடனடியா குளத்தை சீர்செய்யக்கோரியும் நேற்று பாஜக சார்பில் தெப்பக்குளம் முன் பிச்சை எடுக்கும் போராட்டம் நடைபெற்றது.

## அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



சென்னை கோடம்பாக்கம் பகுதியில் உள்ள அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு பாஜக மாநில செயலாளர் வினோஜ் செல்வம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

## 161 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி



தூத்துக்குடியில் கலெக்டர் இளம்பகவத் முன்னிலையில் 161 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கீதாஜீவன் நேற்று வழங்கினார்.

## புனித சாய் சர்வதேச பள்ளியில் கூடைப்பந்து அரங்கம் திறப்பு



காஞ்சிபுரம் மாவட்டம், படப்பை அடுத்த ஆதனூரில் புனித சாய் சர்வதேச பள்ளியில் கூடைப்பந்து அரங்கத்தை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். செல்வப்பெருந்தகை எம்எல்ஏ உடன் உள்ளார்.

## அமைச்சர் நாசர் மாலை அணிவித்து மரியாதை



திருவள்ளூர் பேருந்து நிலையம் அருகில் அண்ணல் அம்பேத்கர் திருவுருவச்சிலைக்கு அமைச்சர் நாசர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.உடன் எம்எல்ஏக்கள் சந்திரன், கிருஷ்ணசாமி, நகர் மன்ற தலைவர் உதயமலர் பொன் பாண்டியன் உள்படதிமுக நிர்வாகிகள் உள்ளனர்.

## அம்பேத்கர் உருவ படத்துக்கு முதல்வர் ஸ்டாலின் மலர்தூவி மரியாதை



டாக்டர் அம்பேத்கர் நினைவுநாளில் அவரது திருஉருவப்படத்துக்கு முதல்வர் ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செய்தார்.

## 12வது உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டில் விசிக தலைவர் திருமாவளவன்



ஆஸ்திரேலியா, சிட்னி நகரிலுள்ள ப்ளாக் டவ்ன் என்னுமிடத்தில் நடக்கும் 12வது உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டில் விசிக தலைவர் திருமாவளவன் நேற்று பங்கேற்றார்.

## அம்பேத்கர் சிலைக்கு மாலை



போற்றுதலுக்குரிய தேசபக்தர், புரட்சியாளர் டாக்டர்.B.R.அம்பேத்கர் ஐயா அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று பாரத் முன்னணி இயக்கத்தின் சார்பில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே அமைந்துள்ள ஐயாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

## சிறப்பு ஜல்லிக்கட்டு போட்டி



ஹாக்கி இளையோர் உலகக்கோப்பை விளையாட்டு போட்டிகளில் பங்கேற்ற வெளிநாட்டு வீரர்களுக்காக மதுரை அலங்காநல்லூர் ஒன்றியம் கீழக்கரை கிராமத்தில் நடத்தப்படும் சிறப்பு ஜல்லிக்கட்டு போட்டியை அமைச்சர் மூர்த்தி துவக்கி வைத்தார்.

## அம்பேத்கார் திருவுருவப்படத்திற்கு கலெக்டர் மலர் தூவி மரியாதை



காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் டாக்டர் அம்பேத்கார் நினைவு தினத்தை முன்னிட்டு அன்னாரது திருவுருவப்படத்திற்கு கலெக்டர் கலைச்செல்வி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

## ரவுசு மணி

சிறந்ததை தேடுபவர்கள் தேடிக் கொண்டே தான் இருக்கிறார்கள்...
கிடைத்ததையே சிறந்ததாக மாற்றுபவர்கள் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டே தான் இருக்கிறார்கள்..



V. முத்து ராமகிருஷ்ணன்



## பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவி

திருப்பத்தூர் நகராட்சியில் நேற்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பல்வேறு துறைகள் சார்பில், அண்ணல் அம்பேத்கர் 70 வது நினைவு தினத்தில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் சிவசவுந்தரவல்லி வழங்கினார்.

## மாணவ மாணவியர் களுக்கு மிதி வண்டி

கோவை ஒண்டிப் புதூர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் மாணவ மாணவியர் களுக்கு மிதி வண்டிகளை கோவை எம்பி., கணபதி ராஜ்குமார் முன்னிலையில் கலெக்டர் பவன்குமார் கிரியப்பனவர் வழங்கினார்.



# வேலைவாய்ப்பு கார்னர்

## எஸ்பிஐ வங்கியில் வேலை: 996 காலிப்பணியிடங்கள்...




இந்த காலிப்பணியிடங்களுக்கு யாரெல்லாம் விண்ணப்பக்கலாம், கல்வி தகுதி என்ன என்பதை காணலாம்.

நாட்டின் மிகப்பெரிய பொத்துறை வங்கியான எஸ்.பி.ஐ வங்கியில் 996 பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதற்கு யாரெல்லாம் விண்ணப்பிக்கலாம்.கல்வி தகுதி உள்ளிட்ட விவரங்கள் பின்வருமாறு:

பணி நிறுவனம்: ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா (எஸ்.பி.ஐ.)

காலி பணி இடங்கள்: 996

பதவி பெயர்: ஸ்பெஷலிஸ்ட் கேடர் அதிகாரி (ஒப்பந்த அடிப்படை)

கல்வி தகுதி: சம்பந்தப்பட்ட துறை சார்ந்த பட்டப்படிப்பு, முதுகலைப்படிப்பு. பணி அனுபவம் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

வயது: 1-5-2025 அன்றைய தேதிப்படி வி.பி.வெல்த் பதவிக்கு குறைந்தபட்ச வயது: 26, அதிகபட்ச வயது: 42, ஏ.வி.பி. வெல்த் பதவிக்கு குறைந்தபட்ச வயது: 23, அதிகபட்ச வயது: 35. கஸ்டமர் ரிலேஷன்ஷிப் எக்சிகியூட்டிவ் பதவிக்கு குறைந்தபட்ச வயது: 20; அதிகபட்ச வயது: 35. அரசு விதிமுறைகளின்படி 3 முதல் 15 ஆண்டுகள் வயது தளர்வு உண்டு. (மாற்றுத்திறனாளிகள் உள்பட)

தேர்வு முறை: ஷார்ட்லிஸ்ட், நேர்காணல்

விண்ணப்பிக்க கடைசி தேதி: 23-12-2025

இணையதள முகவரி: https://sbi.bank.in/web/careers/current-openings

# சுற்றுலா: இயற்கை எழில் கொஞ்சும் கொல்லிமலை



இயற்கை எழில் கொஞ்சும் கொல்லிமலைக்கு சென்று திரும்ப இந்த விடுமுறையில் திட்டமிடுங்கள்.

சுற்றுலா என்றாலே அதிக செலவு பிடிக்கும் என்று பலரும் நினைக்கின்றனர். குறைந்த செலவில் நிறைவாக குடும்பத்துடன் சென்றுவர பலபகுதிகள் தமிழகத்தில் உள்ளன. மனதுக்கு நிறைவாக, இயற்கை எழில் கொஞ்சும் கொல்லி மலைக்கு சென்று திரும்ப இந்த கோடை விடுமுறையில் திட்டமிடுங்கள். மனதுக்கு மகிழ்ச்சியும், உடலுக்கு ஆரோக்கியமும் நிச்சயம் கிடைக்கும்.

இந்தமலை உச்சியில் எட்டுக்கை அம்மன் (கொல்லி பாவை) இருப்பதால் இது கொல்லி மலை என்றழைக்கப்படுகிறது. நாமக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த மலை வாசஸ்தலம் சேலத்தில் இருந்து 87 கி.மீ. தொலைவிலும், திருச்சியிலிருந்து 135 கி.மீ. தொலைவிலும், சென்னையில் இருந்து 395 கி.மீ. தொலைவிலும் அமைந்து உள்ளது. கொல்லி மலையின் ஆரம்பம் செம்மேடு ஆகும். கடல் மட்டத்திலிருந்து 1,000 மீட்டர் முதல் 1,300 மீட்டர் உயரத்தில் இது அமைந்துள்ளது. 280 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள இந்த கொல்லிமலை பிராந்தியம் பார்ப்பதற்கே பசுமை சூழ்ந்ததாக உள்ளது. வர்த்தக ரீதியில் இந்த மலைப் பிராந்தியம் பெருமளவில் பிரபலம் ஆகாததால் இன்னமும் இதன் இயற்கை தன்மை குறையாமல் திகழ்கிறது. இங்கு 70 கொண்டை ஊசி வளைவுகள் உள்ளன.

மலை உச்சியில் அமர்ந்துள்ள அம்மன் மிகவும் சக்திவாய்ந்ததாகக் கூறப்படுகிறது. துர் சக்திகளை விரட்டும் சக்திபடைத்த தெய்வமாக சுற்றுப்புற மக்களால் பெரிதும் போற்றப்படுகிறது. தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் அம்மனை தரிசிக்க பலரும் வருகின்றனர். கடவுள் பக்தியைத் தவிர்த்துவிட்டு சுற்றுலா செல்ல விரும்பினாலும் அதற்கு ஏற்ற இடம் இது என்பதுதான் இம்மலையின் சிறப்பு.

மலையேற்ற, சாகசப்பிரியர்களின் பிரதான இடமாக கொல்லிமலை உள்ளது. இங்குள்ள ஆகாயகங்கை நீர்வீழ்ச்சிக்கு செல்வது மிகவும் சிறப்பான பயணமாக இருக்கும். 200 மீட்டர் தூரத்தில் இருந்தாலும் அருவியின் சாரல் உங்கள் மேல் நிச்சயம் விழும். அதை ரசித்தபடியே அருவிக்குச் செல்லலாம்.

இந்தமலையில் இரண்டுவிதமான பகுதிகள் உள்ளன. சேக்குபாறை வழியாகவும், மற்றொன்று செல்லூர் நாடு வழியாகவும் செல்ல முடியும். தமிழக அரசு இங்குதான் அன்னாசிபழ ஆராய்ச்சி மையத்தை நிறுவி செயல்படுத்தி வருகிறது. இது சேக்குபாறை வியூபாயிண்டில் அமைந்துள்ளது. குண்டூர் நாடு, புளியஞ்சோலை, அரியூர் சோலை ஆகியன பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாகும். அரபலேஸ்வரர் ஆலயம், சித்தர்கள் குகை, தாவரவியல் பூங்கா, மசிலா அருவி, செல்லூர் வியூ பாயிண்ட் ஆகியன சுற்றுலாப் பயணிகள் அவசியம் பார்க்க வேண்டிய பகுதிகளாகும். சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இப்பகுதியில் படகுக் குழாம் ஒன்றை நடத்துகிறது. படகு சவாரி செல்வதும் இனிமையான அனுபவமாகும். ஆண்டுதோறும் ஆகஸ்டு மாதத்தில் சுற்றுலா விழா கொண்டாடப்படுகிறது. இதை அன்னாசி பழ ஆராய்ச்சி மையம் நடத்துகிறது. மேலும் ஓரி விழா மிகவும் பிரமாண்டமாக இங்கு கொண்டாடப்படுகிறது.

கொல்லி மலை முழுவதும் அடர்ந்த வனப் பகுதியால் சூழப்பட்டுள்ளது. இங்கு தேயிலை, காபி, அன்னாசி, மிளகு, பலா உள்ளிட்டவை பயிரிடப்படுகின்றன. இங்கு வன விலங்குகளும் உள்ளன. கரடி, குலைக்கும் மான், ஓநாய், கீரிப்பிள்ளை, அரிய வகை எறும்பு திண்ணி, காட்டு பூனை உள்ளிட்ட விலங்குகளும், பாம்பு, மலைப்பாம்பு உள்ளிட்ட ஊர்வனவும் இங்கு உள்ளன. அரிய வகை பறவையினங்களையும் இங்கு காணலாம். ஆண்டு முழுவதும் இந்த மலைப் பகுதிக்கு செல்லலாம். மழைக் காலங்களை தவிர்ப்பது நல்லது. ஏனெனில் கடுமையான மழை பெய்யும்போது மண் அரிப்பால் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உண்டு. இப்பகுதியில் சில ரிசார்ட்டுகளும் லாட்ஜ்களும் உள்ளன. மலைப் பகுதியாக இருந்தாலும் நீங்கள் விரும்பினால் இங்கு பயிராகும் அரிசி, தேன், காபி, பழங்கள் உள்ளிட்டவற்றை உங்கள் வீட்டுக்கு வாங்கி வரலாம்.

# டிசம்பர் மாத வார ராசிபலன்

## 07.12.2025 முதல் 13.12.2025 வரை

### மேஷம்

**அஸ்வினி:** இந்த வாரம் தேவையற்ற பயணங்களைத் தவிர்த்தால் அலைச்சல்கள் குறையும். கலைஞர்கள் கையிலிருக்கும் வாய்ப்புகளை நழுவவிடாமல் பாதுகாத்துக் கொள்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் ஓரளவுக்கு முன்னேற்றம் உண்டாகும். குருப்ரீதியாக தட்சிணாமூர்த்தியை வழிபடுவது நல்லது.

**பரணி:** இந்த வாரம் சுப காரியங்கள் கைக்கூடி மகிழ்ச்சியளிக்கும். தாராள தனவரவுகளால் குடும்பத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். புத்திர வழியிலும் மகிழ்ச்சி தரக்கூடிய சம்பவங்கள் நடைபெறும். வெளி வட்டாரத் தொடர்புகளால் உங்களின் பெயர், புகழ், உயரும்.

**கார்த்திகை 1ம் பாதம்:** இந்த வாரம் உற்றார்- உறவினர்களின் ஆதரவுகள் சிறப்பாக இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பாதிப்புகள் தோன்றி மறையும். கணவன்- மனைவி இடையே ஒற்றுமை சிறப்பாக இருக்கும். உத்தியோகஸ்தர்களும் பணியில் திருப்தியான நிலையை அடைவார்கள்.

முருக பெருமானை வணங்க எல்லா வற்றிலும் நன்மை உண்டாகும்.

### ரிஷபம்

**கார்த்திகை 2, 3, 4 பாதங்கள்:** இந்த வாரம் உயரதிகாரிகளின் பாராட்டுதல்கள் மனமகிழ்ச்சியை ஏற்படுத்தும். தொழில், வியாபார ரீதியாக புதிய முயற்சிகளில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு எதிர்பார்த்த பணவரவுகள் கிடைக்கப் பெற்று குடும்பத்தோடு சேர்ந்து மகிழ்வார்கள்.

**ரோகிணி:** இந்த வாரம் பொருளாதார நிலை மிகச் சிறப்பாக அமையும். கொடுக்கல்-வாங்கல் போன்றவற்றில் பெரிய தொகை ஈடுபடுத்தி லாபம் காண்பீர்கள். கடன்கள் குறையும். கலைஞர்கள் வெளியூர், வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடிய வாய்ப்பினைப் பெறுவார்கள்.

**மிருக சிரீஷம் 1, 2, பாதங்கள்:** இந்த வாரம் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும் என்றாலும் தேவையற்ற வீண் விரயங்களும் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் வயிறு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் உண்டாகி மருத்துவச் செலவுகளை ஏற்படுத்தும் என்பதால் உணவு விஷயத்தில் மிகவும் கவனம் செலுத்துவது நல்லது.

குரு பகவானை வணங்க செல்வம் சேரும்..

### மிதுனம்

**மிருக சிரீஷம் 3, 4 பாதங்கள்:** இந்த வாரம் கணவன்-மனைவி இடையே கருத்து வேறுபாடுகள், குடும்பத்தில் உள்ளவர்களிடம் ஒற்றுமையற்ற நிலை உண்டாகும். முயற்சிகளிலும் தடை தாமதங்கள் ஏற்படும். தேவையற்ற அலைச்சல், டென்ஷன் ஏற்படும்.

**திருவாதிரை:** இந்த வாரம் பண விஷயத்தில் பிறருக்கு வாக்குறுதி கொடுப்பது, முன்ஜாமீன் கொடுப்பதைத் தவிர்ப்பது உத்தமம். எதிர்நீச்சல் போட்டாவது வெற்றியினைப் பெற்றுவிடுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக் கொண்டால் கடனில்லாத கண்ணிய வாழ்க்கை அமையும்.

**புனர்பூசம் 1,2,3 பாதங்கள்:** இந்த வாரம் தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் தேடிவரும். புதிய ஒப்பந்தங்களில் கையழுத்திடும் வாய்ப்பினைப் பெறுவீர்கள். போட்டி பொறாமைகளை சமாளிக்கக் கூடிய ஆற்றலும் அதிகரிக்கும்.

விநாயக பெருமானை ஏற்றி வழிபட காரிய வெற்றி உண்டாகும்..

### கடகம்

**புனர் பூசம் 4ம் பாதம்:** இந்த வாரம் உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளில் மட்டும் கவனம் செலுத்துவது வீண் பிரச்சினைகளைத் தவிர்க்க உதவும். எதிர்பார்க்கும் உயர்வுகள் சில தடைகளுக்குப் பின் அமையும். கலைஞர்கள் எதிர்பார்த்த கதாபாதிரங்களுக்கான வாய்ப்பினைப் பெறுவார்கள்.

**பூசம்:** இந்த வாரம் பயணங்களால் சற்றே அலைச்சல்கள் அதிகரித்தாலும் அதன்மூலம் அனுகூலமானப் பலன்களும் உண்டாகும். அரசியல்வாதிகள் மேடை பேச்சுகளில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது, மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுவது உத்தமம்.

**ஆயில்யம்:** இந்த வாரம் மாணவர்கள் அதிக அக்கறையோடு படித்தால் எதிர்பார்த்த மதிப்பெண்களைப் பெற்று வாழ்வில் உயர்வினை அடையமுடியும். உடல் ஆரோக்கியத்தில் பாதிப்புகள் ஏற்படக்கூடிய காலம் என்பதால் ஆரோக்கிய விஷயங்களில் மிகவும் கவனமுடன் செயல்படுவது நல்லது.

ஆஞ்சநேயரை வழிபட மனோ தைரியம் கூடும்.

### சிம்மம்

**மகம்:** இந்த வாரம் மனைவி, பிள்ளைகளாலும் மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். உடல் சோர்வு, எதிலும் சுறுசுறுப்பாக ஈடுபட முடியாத சூழ்நிலைகள் உண்டாகும். உற்றார்- உறவினர்களின் ஆதரவற்ற நிலைகளால் மனக் குழப்பங்கள் ஏற்படும்.

**பூரம்:** இந்த வாரம் எதிர்பாராத பயணங்கள் உண்டாகி தேவையற்ற அலைச்சல், டென்ஷன் அதிகரிக்கும். உணவு விஷயங்களில் மிகவும் கவனமுடன் செயல்படுவது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது. குடும்பம், பொருளாதாரநிலை விசயத்தில் அடுத்தவர் தலையீடு வேண்டாம்.

**உத்திரம் 1ம் பாதம்:** இந்த வாரம் குடும்பத்தில் வீண் வாக்கு வாதங்களால் ஒற்றுமைக் குறைவுகள் உண்டாகும். கணவன்-மனைவியிடையே கருத்து வேறுபாடுகளும், புத்திரர்களால் மனநிம்மதியற்ற நிலையும் உண்டாகும்.

சிவனை வணங்கி வர மனக்கவலை நீங்கும்.

### கன்னி

**உத்திரம் 2, 3, 4 பாதங்கள்:** இந்த வாரம் பண வரவுகள் ஏற்ற இறக்கமாக இருக்கும் என்பதால் குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்ய கடன் வாங்க நேரிடும். முடிந்த வரை ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பது உத்தமம். நெருங்கியவர்களை அனுசரித்து நடந்து கொண்டால் வீண் பிரச்சினைகள் உண்டாவதைத் தவிர்க்கலாம்.

**அஸ்தம்:** இந்த வாரம் வீடு, மனை, வண்டி, வாகனங்கள் வாங்கும் முயற்சிகளில் சிந்தித்துச் செயல்படுவது நல்லது. கொடுக்கல்-வாங்கல் கமிஷன் ஏஜென்சி, கான்டிராக்ட் போன்ற துறைகளில் உள்ளவர்கள் எந்தவொரு காரியத்திலும் சிந்தித்துச் செயல்படுவது நல்லது.

**சித்திரை 1, 2, பாதங்கள்:** இந்த வாரம் கொடுக்கல் -வாங்கலில் மிகவும் நம்பியவர்களே துரோகம் செய்வார்கள். பண விஷயத்தில் பிறரை நம்பி முன்ஜாமீன் கொடுப்பதும், வாக்குறுதிகளைக் கொடுப்பதும் வீண் பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும். வம்பு வழக்குகள் உண்டாகும்.

மாணவர்களுக்கு கல்வியில் வேகம் காணப்படும். சக மாணவர்களிடம் சுமுகமாக அனுசரித்து போவது நல்லது.

குலதெய்வத்தை வணங்குவது நன்மை தரும்

### துலாம்

**சித்திரை 3, 4 பாதங்கள்:** இந்த வாரம் தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு நெருக்கடிகளும், போட்டிகளும் ஏற்படும் என்றாலும் எதையும் சமாளிக்கக்கூடிய ஆற்றலும் உண்டாகும். வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலைகளும் ஏற்படும்.

**சுவாதி:** இந்த வாரம் கூட்டாளிகளின் ஒற்றுமையற்ற செயல்பாட்டால் அபிவிருத்தி குறையும் என்பதால் முடிந்த வரை அனுசரித்து நடந்து கொள்வது நல்லது. பெரிய முதலீடுகளில் செய்ய நினைக்கும் எந்தவொரு காரியத்திலும் சற்று சிந்தித்துச் செயல்படுவது உத்தமம்.

**விசாகம் 1, 2, 3ம் பாதங்கள்:** இந்த வாரம் தொழில் ரீதியாக மேற்கொள்ளும் பயணங்களாலும் வீண் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் அதன்மூலம் அனுகூலப்பலனை அடைய முடியும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு அதிகரித்தாலும் எடுக்கும் பணிகளை சரி வரச் செய்து முடிக்க முடியும்.

அருகிலிருக்கும் பெருமாள் கோவிலுக்குச் சென்று வரவும். மல்லிகை மலரை சாத்தி வழிபடவும்..

### விருச்சிகம்

**விசாகம் 4ம் பாதம்:** இந்த வாரம் எதிர்பார்க்கும் பதவி உயர்வுகள் தடை தாமதங்களுக்குப் பின் கிடைக்கும். உடன் பணிபுரிபவர்களை அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் வீண் பிரச்சினைகள் உண்டாவதைத் தவிர்க்க முடியும்.

சில நேரங்களில் பிறர் செய்யும் தவறுகளுக்கு நீங்களே பொறுப்பேற்க வேண்டியிருக்கும்.

**அனுஷம்:** இந்த வாரம் அதிக நேரம் உழைக்க வேண்டியிருப்பதால் உடல்நிலை சோர்வடையும். அடிக்கடி விடுப்பு எடுக்க வேண்டி இருக்கும். எதிர்பாராத இடமாற்றங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும்.

பெண்கள் உடல் நிலையில் அடிக்கடி பாதிப்புகள் உண்டாகி மருத்துவச் செலவுகளை ஏற்படுத்தும்.

**கேட்டை:** இந்த வாரம் திருமண சுப காரிய முயற்சிகளில் தடைகளுக்குப் பின் அனுகூலம் உண்டாகும்.

கணவன்-மனைவியிடையே ஒற்றுமை சுமாராக இருக்கும். தாய்வழி உற்றார்-உறவினர்களை அனுசரித்துச் செல்ல வேண்டி வரும்.

நவக்கிரகங்களை வழிபடுவது நன்மை தரும்.

### தனுசு

**மூலம்:** இந்த வாரம் எதிர்பார்க்கும் பணவரவுகளும் தாமதப்படுவதால் குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தடைகள் நிலவும். பொதுப்பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள முடியாத சூழ்நிலைகள் உண்டாகும்.

**பூராடம்:** இந்த வாரம் புத்திரவழியில் வீண் கவலைகள் ஏற்படும். பணிபுரியும் பெண்களுக்கு உயரதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரித்து மனநிம்மதி குறையும். கடன் அதிகரிக்கும்.

**உத்திராடம் 1ம் பாதம்:** இந்த வாரம் எடுக்கும் காரியங்களில் தடைகளுக்குப் பின்பே வெற்றி பெற முடியும். உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது, பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. பொருளாதார நிலை ஏற்ற இறக்கமாக இருக்கும்.

ஸ்ரீமஹா கணபதியை வழிபடுவது கவலையை போக்கும்..

### மகரம்

**உத்திராடம் 2, 3, 4 பாதங்கள்:** இந்த வாரம் புதிய பூமி, மனை வாங்கும் முயற்சிகளில் தடைகளுக்குப் பின் அனுகூலம் உண்டாகும். உற்றார் -உறவினர்களை அனுசரித்துச் செல்வது, வாய்க்கால் வரப்பு பிரச்சினைகளை பெரிதுபடுத்தாமல் இருப்பது நல்லது.

**திருவோணம்:** இந்த வாரம் கிடைத்த வாய்ப்புக்களை நழுவவிடாமல் பாதுகாத்துக்கொள்வது உத்தமம். புதிய வாய்ப்புகள் கிடைப்பதில் சிக்கல்கள் உண்டாகும். நெருக்கடியான சூழ்நிலைகளால் உடல்நிலை பாதிப்புகள் ஏற்பட்டு மன அமைதி குறையும்.

**அவிட்டம் 1, 2 பாதங்கள்:** இந்த வாரம் உடன் இருப்பவர்களாலே வீண் பிரச்சினைகளைச் சந்திப்பீர்கள். பணவரவுகள் தேவைக்கு ஏற்றபடி இருக்கும். மாணவ- மாணவியர் கல்வியில் ஈடுபாடு குறையும். ஞாபக மறதி, மந்த நிலை உண்டாகும். படிப்பில் கவனம் குறைவதால் எதிர்பார்க்கும் மதிப்பெண்களைப் பெறமுடியாது.

ஆஞ்சநேயரை வணங்கி வர அனுகூலம் உண்டாகும்..

### கும்பம்

**அவிட்டம் 3, 4 பாதங்கள்:** இந்த வாரம் தேவையற்ற நண்பர்களின் சகவாசமும் பொழுதுபோக்குகளும் உங்களின் வாழக்கை நிலையையே மாற்றியமைக்கும். விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடும் போது கவனம் தேவை. வண்டி வாகனங்களில் பயணம் செய்யும் போது வேகத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது.

**சதயம்:** இந்த வாரம் எதிலும் சற்று நிதானமாகச் செயல்படுவது நல்லது. தனவரவுகள் திருப்தி அளிப்பதாக இருந்தாலும் வரவுக்கு மீறிய செலவுகளை ஏற்படுத்தும். கொடுக்கல்-வாங்கலில் பெரிய தொகை ஈடுபடுத்துவதைத் தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற முழுமூச்சாக பாடுபடுவீர்கள். புதிய நட்பு கிடைப்பதுடன் அவர்களது ஆலோசனையும் வெற்றிக்கு உதவும். ஆனால் எதிலும் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது.

**பூரட்டாதி 1,2,3 பாதங்கள்:** இந்த வாரம் தொழில் ரீதியாக சில போட்டிகளைச் சந்திக்கநேரிடும். கூட்டாளிகளிடையே கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் கணவன்-மனைவி இடையே ஒற்றுமை குறையும். உற்றார்-உறவினர்களை அனுசரித்து நடந்துகொள்வது நல்லது.

பைரவரை வழிபட எல்லா நன்மைகளும் உண்டாகும்.

### மீனம்

**பூரட்டாதி 4ம் பாதம்:** இந்த வாரம் உடல்நிலையிலும் தேவையற்ற பாதிப்புகள் உண்டாகி மருத்துவச் செலவுகளை ஏற்படுத்தும். உத்தியோக ரீதியாக மேற்கொள்ளும் பயணங்களாலும் அலைச்சல், டென்ஷன், உடல் சோர்வு ஏற்படும். புத்திர வழியில் வீண் செலவுகள் உண்டாகி மனநிம்மதி குறையும்.

**உத்திரட்டாதி:** இந்த வாரம் எந்தவொரு காரியத்தைச் செய்வது என்றாலும் ஒருமுறைக்குப் பலமுறை சிந்தித்துச் செயல்படுவது நல்லது. சனிக்கு உரிய பரிகாரங்களைச் செய்வது உத்தமம். உடல்நிலையில் கவனம் செலுத்த வேண்டிவரும். பணவரவுகள் சுமாராக இருக்கும்.

**ரேவதி:** இந்த வாரம் எதிர்பார்த்த உதவிகள் தாமதப்படும். கணவன்-மனைவிக்கு இடையே கருத்து வேறுபாடுகள் உண்டாகி ஒற்றுமை குறையும். உற்றார்-உறவினர்களும் தேவையற்ற பிரச்சினைகளையே ஏற்படுத்துவார்கள்.

வீடு, வாகனம் வாங்குவது அல்லது புதுப்பிப்பதில் நாட்டம் அதிகரிக்கும்.

பெண்களுக்கு எடுத்த காரியம் நல்லபடியாக நடந்து முடியும். கலைத்துறையினர் மனதில் எதைபற்றியாவது சிந்தித்த வண்ணம் இருப்பீர்கள். மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றிபெறும். மாணவர்களுக்கு கல்வியில் சீரான போக்கு காணப்படும்.

தினமும் அம்மனை வணங்கினால் கஷ்டம் நீங்கும்.

# சென்னையில் 'ஆன்லைன்' வர்த்தகத்தில் ரூ. 12 லட்சம் மோசடி: பெண் உள்பட 3 பேர் கைது

**சென்னை, டிச.7:**

ஆன்லைன் வர்த்தகம் மற்றும் பண முதலீடு செய்தால் அதிக லாபம் தருவதாக கூறி ரூ.12 லட்சம் பெற்று மோசடி செய்த பெண் உட்பட 3 பேரை மேற்கு மண்டல சைபர் கிரைம் போலீசார் கைது செய்தனர்.




சென்னை, நொளம்பூர், ஸ்ரீராம் நகர் மெயின் ரோடு பகுதியைச் சேர்ந்த சௌந்தராஜன், தனது முகநூல் பக்கத்தை பார்த்துக் கொண்டிருந்தபோது, ஆன்லைன் வழியாக வர்த்தகம் செய்தும், ஸ்டாக் மார்க்கெட்டில் பண முதலீடு செய்து ஸ்டாக்குகளை வாங்கி குறைந்த காலத்தில் அதிக பணம் சம்பாதிக்கலாம் என்று என்ற விளம்பரத்தை பார்த்தும் அதன் கீழே வாட்ஸ் அப் குழுவிற்கான இணைப்பு (லிங்க்) இருந்ததால், அந்த இணைப்பை கிளிக் செய்து, அந்த வாட்ஸ் அப் குழுவில் இணைந்தார். இக்குழுவில் 103 நபர்கள் இருந்த நிலையில், ஆரோயி நம்பூதரி மற்றும் செகய் ஆகியோர் அட்மின்களாக இருந்து பங்கு வர்த்தகம் செய்வதற்கும், பணத்தை முதலீடு செய்வது குறித்து வாட்ஸ் அப் குழுவில் ஆலோசனைகள் மற்றும் ஆசை வார்த்தைகள் கூறியதை நம்பி 30.09.2025 முதல் 22.10.2025 வரை 6 தவணைகளாக தனியார் வங்கிகளின் கணக்குகளுக்கு மொத்தம் ரூ.12 இலட்சம் அனுப்பினார். அதன் பின்னர் இலாபத்தை தராமல், செலுத்திய பணத்தையும் தராமல் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து, அந்த நபர்களை கண்டறிந்து தனது பணத்தை மீட்டு தரும்படியும் தேசிய சைபர் கிரைம் இணையத்தில் புகார் அளித்தார்.

சென்னை பெருநகர காவல், மேற்கு மண்டல சைபர் கிரைம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண் உத்தரவின்பேரில், மேற்கு மண்டல இணை ஆணையாளர் வழிகாட்டுதலின்பேரில், மேற்கு மண்டல சைபர் கிரைம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் புகாரில் கூறப்பட்ட வங்கி கணக்கு பயனாளர்களின் விவரங்களை கொண்டு தீவிர விசாரணை நடத்தி, அந்த வழக்கில் தொடர்புடைய வளவன், சுமி, கார்த்திகேய ஆகிய 3 நபர்களை கைது செய்தனர்.

விசாரணையில் அவர்கள் பயன்படுத்தி வந்த 3 தனியார் வங்கி கணக்குகள் மீது தேசிய சைபர் கிரைம் இணையதளத்தில் இதுவரை 138 புகார்கள் மனுக்கள் இந்தியா முழுவதும் ஆன்லைனில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும், கார்த்திகேயன் மீது வேப்பேரி, விருகம்பாக்கம், அம்பத்தூர் காவல் நிலையங்களில் சுமார் 7 திருட்டு வழக்குகள் நிலுவையில் உள்ளதும் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட 3 பேரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

### ஐஓஎஸ் 18 பயன்படுத்துவோருக்கு முக்கிய அறிவிப்பு!

*ஆப்பிள் நிறுவனம், தற்போது ஐஓஎஸ் 18 வெர்ஷனை பயன்படுத்தும் ஐபோன் பயனர்களை, ஐஓஎஸ் 26.1 வெர்ஷனுக்கு மேம்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளது. கடந்த செப்டம்பரில் ஐஓஎஸ் 26.1 மற்றும் 18.7 வெளியானது. அப்போதிலிருந்து, Software Update பக்கத்தின் கீழே ஒரு விருப்ப மேம்படுத்தலாக, ஐஓஎஸ் 26.1 and ஐஓஎஸ் 18.7.2 அப்டேட்கள் காண்பிக்கப்பட்டு வருகின்றன. அப்டேட் செய்வது எப்படி: 1) Settings › General › Software Update ஆகியவற்றுக்கு சென்றால் ஐஓஎஸ் 26.1 காண்பிக்கும். 2) அதனை Download செய்து, இன்ஸ்டால் செய்தால் அப்டேட் ஆகிவிடும். ஐஓஎஸ் 26.1-இல் இருக்கும் புதிய அம்சங்கள்: Liquid Glass customization: திரை (UI) வெளிப்படைத்தன்மையை (translucency) பயனர் விருப்பப்படி மாற்றிக்கொள்ளலாம்.*

*பாதுகாப்பு மேம்பாடுகள்: iPhone மற்றும் iPad-க்கு கூடுதல் பாதுகாப்பு அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. செயல்திறன் உயர்வு: Apps மற்றும் UI வேகமாக இயங்கும் வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது. புதிய Display & Brightness விருப்பங்கள்: Clear look அல்லது Tinted look ஆகியவற்றை தேர்வு செய்யலாம். இந்த ஐஓஎஸ் 26.1 அப்டேட், ஐபோன் SE மற்றும் ஐபோன் 11, 12, 13, 14, 15, 16, 17 Series ஐபோன் மாடல்களுக்கு மட்டுமே கிடைக்கிறது.*

### வாட்ஸ் அப்பில் புதிய அம்சம் அறிமுகம்!

*வாட்ஸ்அப்பில் Missed கால்களுக்கு வீடியோ மற்றும் வாய்ஸ் மெசேஜ் மூலம் பதிலளிக்கும் புதிய அம்சம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஐபோனில் உள்ள வாய்ஸ் மெயில் (Voice mail) அம்சம் போல, வாட்ஸ் அப் பயனர்கள், தங்கள் நண்பர்களுக்கு வாய்ஸ் அல்லது வீடியோ அழைப்பு செய்யும் போது, அவர்கள் பதிலளிக்காத பட்சத்தில் உடனடியாக ஒரு "Record voice message / Voice note" அனுப்பும் வசதியை மெட்டா நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.*

*பயனர்களுக்கு வாய்ஸ் அல்லது வீடியோ மெசேஜுடன் இணைந்து, Missed call-க்கான Notification-னும் அனுப்பப்படுகின்றது. இது மட்டுமன்றி, அழைப்புகளை Schedule செய்யும் அம்சமும் வழங்கப்பட்டுள்ளது. இந்த வசதி தற்போது ஐஓஎஸ் பயனர்கள் (recent update) மற்றும் சில ஆண்ட்ராய்டு பீட்டா சோதனையாளர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது.*

# தவெக பரப்புரை செயலாளராக நாஞ்சில் சம்பத் நியமனம்: விஜய் அறிவிப்பு

**சென்னை, டிச.7:**

தவெக தலைவர் விஜய் முன்னிலையில், நேற்று தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்த திராவிட இயக்க பேச்சாளர் நாஞ்சில் சம்பத், தமிழக வெற்றிக்கழகத்தின் பரப்புரை செயலாளராக (Campaign Secretary) நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

மூத்த அரசியல்வாதியும், பேச்சாளருமான நாஞ்சில் சம்பத் தவெக தலைவர் விஜய் முன்னிலையில் நேற்று (டிச.05) அக்கட்சியில் இணைந்தார். இதனையொட்டி, இன்று தவெகவின் பரப்புரை செயலாளராக நாஞ்சில் சம்பத் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில், தவெக தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழகத்தின் மூத்த அரசியல்வாதிகளுள் ஒருவர், சிறந்த பேச்சாளர், அனைவரிடத்திலும் இனிமையாகப் பழகக் கூடியவர், அண்ணன் நாஞ்சில் சம்பத்.

தம்மைத் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைத்துக் கொண்டுள்ளார். மக்களுக்கான அரசியலில் நம்மோடு பயணிக்க இருக்கும் அவரை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அண்ணன் நாஞ்சில் சம்பத், கழகத்தின் பரப்புரைச் செயலாளர் (Campaign Secretary) பொறுப்பில் நியமிக்கப்படுகிறார் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவர், பொதுச் செயலாளர் என்.ஆனந்த் உடன் இணைந்து தன்னுடைய பணிகளை மேற்கொள்வார்.

கழக நிர்வாகிகளும் தோழர்களும் இவருக்கு முழு ஒத்துழைப்பு நல்கி, மக்கள் பணியாற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

# இண்டிகோ விமான சேவை ரத்து: சென்னை பெங்களூர் இடையே சிறப்பு ரெயில்

**சென்னை, டிச.7:**

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

திருச்சியில் இருந்து ஜோத்பூர் செல்லும் ஹம்சபார் எக்ஸ்பிரஸ் ரெயிலில் (வண்டி எண் 20482) இன்று முதல் கூடுதலாக ஒரு ஏ.சி. 3-ம் வகுப்பு பெட்டி இணைக்கப்படுகிறது. இதேபோல், ஜோத்பூரில் இருந்து திருச்சிக்கு வரும் ஹம்சபார் எக்ஸ்பிரஸ் ரெயிலில் வரும் 10-ந் தேதி முதல் கூடுதலாக ஒரு 3-ம் வகுப்பு பெட்டி இணைக்கப்படுகிறது. எம்.ஜி.ஆர். சென்னை சென்டிரலில் இருந்து திருவனந்தபுரம் செல்லும் சூப்பர்பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரெயிலில் (12695) 6-ந் தேதி முதலும், இதேபோல் திருவனந்தபுரத்தில் இருந்து எம்.ஜி.ஆர். சென்னை சென்டிரல் வரும் சூப்பர்பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரெயிலில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) முதலும் கூடுதலாக ஒரு ஏ.சி. 3-ம் வகுப்பு பெட்டி இணைக்கப்படுகிறது.

மேலும், எம்.ஜி.ஆர். சென்னை சென்டிரலில் இருந்து மங்களூரு சென்டிரல் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயிலில் (12601) இன்று முதல் ஒரு ஏ.சி. 3-ம் வகுப்பு பெட்டி இணைக்கப்படுகிறது. இதேபோல், சென்னை கடற்கரையில் இருந்து மும்பை சி.எஸ்.டி. செல்லும் சூப்பர்பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரெயிலில் இன்று முதலும், (22158) மும்பை சி.எஸ்.டி.யில் இருந்து சென்னை கடற்கரை வரும் எக்ஸ்பிரஸ் ரெயிலில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதலும் கூடுதலாக ஒரு ஏ.சி. 3-ம் வகுப்பு பெட்டி இணைக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இதே போல் இண்டிகோ விமான சேவை ரத்து செய்யப்பட்டுள்தால், பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு பெங்களூரு-சென்னை இடையே சிறப்பு ரெயில்கள் இயக்கப்படுகிறது. இது தொடர்பாக, தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

கே.எஸ்.ஆர். பெங்களூருவில் இருந்து நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.05 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06255) அதேநாள் மதியம் 2.45 மணிக்கு சென்னை எழும்பூரை வந்தடைகிறது. மறுமார்க்கத்தில், சென்னை எழும்பூரில் இருந்து இன்று (ஞாயிற்றுக்கிழமை) மதியம் 3.45 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் அதே நாள் இரவு 10.45 மணிக்கு கே.எஸ்.ஆர். பெங்களூருவை சென்றடைகிறது. இந்த சிறப்பு ரெயில் யஸ்வந்த்பூர், கிருஷ்ணராஜபுரம், பங்காருபேட்டை, ஜோலார்பேட்டை, காட்பாடி, அரக்கோணம், திருவள்ளூர், பெரம்பூர் வழியாக இயக்கப்படுகிறது.

இதேபோல், கே.எஸ்.ஆர். பெங்களூரு -எம்.ஜி.ஆர். சென்னை சென்டிரல் இடையே சிறப்பு ரெயில் இயக்கப்படுகிறது. கே.எஸ்.ஆர். பெங்களூருவில் இருந்து 8-ந் தேதி (திங்கட்கிழமை) காலை 8.05 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06257) அதேநாள் மதியம் 2.45 மணிக்கு எம்.ஜி.ஆர். சென்னை சென்டிரலை வந்தடைகிறது. மறுமார்க்கத்தில், எம்.ஜி.ஆர். சென்னை சென்டிரலில் இருந்து 8-ந் தேதி (திங்கட்கிழமை) மாலை 4.10 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06258) அதேநாள் இரவு 10.45 மணிக்கு கே.எஸ்.ஆர். பெங்களூருவை சென்றடைகிறது. இந்த சிறப்பு ரெயில் யஸ்வந்த்பூர், கிருஷ்ணராஜபுரம், பங்காருபேட்டை, ஜோலார்பேட்டை, காட்பாடி, அரக்கோணம், திருவள்ளூர், பெரம்பூர் வழியாக இயக்கப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நெல்லை: பிரபல கடையின் பெயரில் போலி அல்வா விற்பனை; 6 கடைகளுக்கு சீல்... 1 டன் அல்வா பறிமுதல்

**திருநெல்வேலி, டிச.7:**

உலகப்புகழ் பெற்ற திருநெல்வேலி அல்வா பெயரில் நெல்லையில் பல்வேறு கடைகளில் தரமற்ற அல்வா விற்பனை செய்யப்படுவதாக தொடர்ந்து குற்றச்சாட்டு எழுந்து வருகிறது. இந்நிலையில், நெல்லையில் உள்ள அல்வா கடைகளில் உணவுத்துறை அதிகாரிகள் நேற்று அதிரடி சோதனை நடத்தினர். நெல்லை மாவட்ட உணவு பாதுகாப்புத் துறை நியமன அலுவலர் தலைமையில், நெல்லையப்பர் கோயில் மற்றும் ஜங்ஷன் பகுதிகளில் நடைபெற்ற இந்த அதிரடி சோதனையில் அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகியுள்ளன.




அதில் பல கடைகளில் 'சுத்தமான நெய் அல்வா' என்று லேபிள் ஒட்டப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், சோதனையில் அவர்கள் வெறும் நெய்யை மட்டும் பயன்படுத்தாமல், அதனுடன் வனஸ்பதி (டால்டா) மற்றும் கடலை எண்ணெய் அல்லது ரீபைண்டு ஆயில் (Refined Oil) ஆகியவற்றைக் கலந்து அல்வா தயாரிப்பது கண்டுபிடிக்கப்பட்டது. வனஸ்பதி மற்றும் எண்ணெய் கலந்த பிறகு அதை 'நெய் அல்வா' என்று விற்பனை செய்வது சட்டப்படி குற்றம் என அதிகாரி எச்சரித்துள்ளார்.

விதிமுறைகளை மீறியதாக மொத்தம் 6 கடைகள் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளன. நெல்லையப்பர் கோவில் பகுதியில் ஒரு பெரிய கடை மற்றும் 3 சிறிய கடைகள் என மொத்தம் 4 கடைகள் மூடப்பட்டன. ஜங்ஷன் பகுதியில் உள்ள ஒரு பெரிய கடை மற்றும் சிறிய கடைகள் மூடப்பட்டன. பிரபலமான 'இருட்டுக்கடை அல்வா' கடைக்கு அருகிலேயே, வாடிக்கையாளர்களைக் குழப்பும் வகையில் பெயர் பலகை வைத்திருந்த கடை மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெயர் மூலமாக அது பிரபல கடை என்று மக்களை நம்ப வைக்கும் முயற்சியில் ஈடுபட்டது கண்டறியப்பட்டது. இந்தச் சோதனையின் போது 1 டன் அல்வா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், விதிமீறல் லேபிள்கள் மட்டுமே சுமார் 25 கிலோ வரை கைப்பற்றப்பட்டுள்ளன.

லேபிள்களில் "100% நேச்சுரல்", "100% வெஜிடேரியன்", "சுத்தமான நெய்" போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றக் கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இனி கடைகளில் 'அல்வா' என்று மட்டுமே குறிப்பிட வேண்டும் என்றும் கலப்பட எண்ணெய் பயன்படுத்தினால் அதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. தவறுகளை மறைக்க ஸ்டிக்கர் ஒட்டக் கூடாது எனவும் முறையான அச்சிடப்பட்ட லேபிள்கள் மட்டுமே பயன்படுத்த வேண்டும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## க்ரைம் கார்னர்

### 10-வகுப்பு கூட தேர்ச்சி பெறாமல் ஆயுர்வேத மருத்துவமனை நடத்தியவர் கைது

**சென்னை, டிச.7:**

சென்னை: திருமங்கலம், காமராஜ் நகரைச் சேர்ந்தவர் ரவி(46). இவர் முதுகுத்தண்டு வலியால் அவதிப்பட்டார். இதையடுத்து, கடந்த ஆகஸ்ட் மாதம் அண்ணாநகர், 2-வது பிரதான சாலை 'என்' பிளாக்கில் உள்ள எஸ்.ஆர்.எஸ் என்ற பெயரில் இயங்கி வந்த ஆயுர்வேத மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றார்.

அங்கிருந்த ஆயுர்வேத மருத்துவர் பெரம்பூர் பட்டேல் சாலையைச் சேர்ந்த வெங்கடேசன்(42), ரவிக்கு சில ஆங்கில மருந்துகளை பரிந்துரைத்துள்ளார். அந்த மருந்தால் ரவிக்கு, முதுகு வலி சரியாகவில்லை. மாறாக வயிற்றுப்போக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் அவர் உண்மையிலேயே மருத்துவம் படித்துள்ளாரா? என்ற சந்தேகம் ரவிக்கு ஏற்பட்டது.

இதையடுத்து, கடந்த செப்டம்பம் மாதம் இந்திய மருத்துவக் கழக ஆணையத்திடம் மருத்துவர் வெங்கடேசன் மீது ரவி அடுத்தடுத்து புகார் அளித்தார். ஆனால், அதிகாரிகள் முறையாக விசாரிக்கவில்லை எனக் கூறப்படுகிறது. இதனால், அதிருப்தி அடைந்த ரவி, இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர உள்ளதாக வழக்கறிஞர் மூலம் இந்திய மருத்துவக் கழக ஆணையகத்துக்கு நோட்டீஸ் அனுப்பினார்.

இதையடுத்து, அறிஞர் அண்ணா சித்த மருத்துவமனை மருத்துவக் குழுவினர், எஸ்.ஆர்.எஸ். ஆயுர்வேத மருத்துவமனைக்குச் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

இதில், இந்த மருத்துவமனையை கடந்த 2 ஆண்டுகளாக நடத்தி வரும் வெங்கடேசன் ஆயுர்வேத மருத்துவம் படிக்காதது தெரியவந்தது. அதைத்தொடர்ந்து, இந்த விவகாரம் தொடர்பாக அண்ணாநகர் காவல் நிலையத்தில் மருத்துவம் மற்றும் ஊரக சுகாதார சேவைகள் துறை அதிகாரி கண்ணன் புகார் தெரிவித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப்பதிந்து வெங்கடேசனை நேற்று முன்தினம் கைது செய்தனர்.

கைதான வெங்கடேசன் 10-ம் வகுப்பு கூட தேர்ச்சி பெறாமல் ஆயுர்வேத மருத்துவமனை தொடங்கி, மக்களுக்கு மருத்துவம் பார்த்து வந்தது உறுதி செய்யப்பட்டது. அவரிடம் சிகிச்சை பெற்று வேறு யாரேனும் பாதிக்கப்பட்டுள்ளனரா என்பது குறித்தும் போலீஸார்விசாரித்து வருகின்றனர்.

### இராஜபாளையத்தில் 200 கிலோ புகையிலை: ஒரு கிலோ கஞ்சா பறிமுதல் ஒருவர் கைது-இருவர் தப்பியோட்டம்

**இராஜபாளையம், டிச.7:**

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் உட்கோட்ட பகுதியில் ரகசிய தகவலின் பேரில் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் அசோக் பாபு, சார்பு ஆய்வாளர் ராஜ்குமார் மற்றும் போலீசார் மதுரை சாலையில் உள்ள காவல் சோதனைச்சாவடியில் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த வழியாக வந்த காரை நிறுத்தி விசாரணை நடத்தினர். இதில்,காரை ஓட்டி வந்தவர் தென்காசி மாவட்டம் களக்காடு பகுதியை சேர்ந்த ஆன்ட்ரூஸ்(30) மற்றும் உடன் இருந்தவர் கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை பகுதியைச் சேர்ந்த சீனிவாசன் என்பது தெரியவந்தது.

இதனை அடுத்து போலீசார் காரின் பின் பகுதிக்குச் சென்றபோது, எதிர்பாராத விதமாக காரை வேகமாக ஓட்டிக்கொண்டு போய் சிறிது தூரத்தில் காரை நிறுத்திவிட்டு இருவரும் அங்கிருந்து தப்பி ஓடினர்.

பின்னர் போலீசார் காரைக் கைப்பற்றி ராஜபாளையம் வடக்கு காவல்நிலையத்துக்கு கொண்டு வந்து சோதனையிட்டனர். அதில் மூட்டை மூட்டையாக 240 புகையிலை பொருட்கள் இருப்பது தெரிய வந்தது. இதுகுறித்து வழக்கு பதிவு செய்த போலீசார் தப்பி ஓடியவர்களை தேடி வருகின்றனர்.

இதேபோல் தெற்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் செல்வம் ராஜபாளையம் ரயில்வே மேம்பாலத்தின் கீழ் ஒருவரை பிடித்து அவரிடமிருந்த 1 கிலோ 100 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்தனர். அவர் மதுரை மாவட்டம் பேரையூர் தாலுகா பகுதியை சேர்ந்த முத்துக்கழுவன் மகன் ஜெயன்(64) என்பது தெரியவந்தது. அவரை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

### பிளஸ் 1 மாணவர்களின் தாக்குதலில் பிளஸ் 2 மாணவர் படுகாயம்

**கும்பகோணம், டிச.7:**

பட்டீஸ்வரம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 1 மாணவர்களின் தாக்குதலில் பிளஸ் 2 மாணவர் ஒருவர் பலத்த காயமடைந்தார். இதுகுறித்து பிளஸ் 1 மாணவர்களிடம் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

கும்பகோணம் வட்டம் பட்டீஸ்வரம் அரசு அறிஞர் அண்ணா மாதிரி மேல்நிலைப் பள்ளியில் 1,000-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். இவர்களில், பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 மாணவர்களுக்கு இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

இந்நிலையில், பட்டீஸ்வரம் தேரோடும் கீழவீதியில் வெள்ளிக்கிழமை இரண்டு வகுப்பு மாணவர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இதில், பிளஸ் 1 மாணவர்கள் 14-க்கும் மேற்பட்டோர் சேர்ந்து, பிளஸ் 2 மாணவர் ஒருவரின் தலையில் ரீப்பர் கட்டையால் தாக்கியதில், அவர் பலத்த காயமடைந்தார்.

இதையறிந்த மாணவரின் பெற்றோர் பள்ளிக்கு வந்து, மாணவரை மீட்டு, கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். பின்னர், மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் தனியார் மருத்துவமனையில் மாணவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து தாலுகா காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிவு செய்து, பிளஸ் 1 மாணவர்கள் 14 பேரிடம் விசாரித்து வருகின்றனர்.

# விமான நிறுவனங்கள் டிக்கெட் கட்டணங்களை உயர்த்தினால் நடவடிக்கை: மத்திய அரசு எச்சரிக்கை



**புதுடெல்லி, டிச.7:**

இண்டிகோ விமான சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், மற்ற நிறுவனங்களின் விமானக் கட்டணம் விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளது. இந்தச் சூழலில், அரசின் விதிமுறைகளை தாண்டி கட்டணங்களை உயர்த்தினால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் எச்சரித்துள்ளது.

இண்டிகோ ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் விமான சேவை நாடு முழுவதும் முடங்கியுள்ளது. இதனால் நாடு முழுவதும் 1000-க்கும் மேற்பட்ட இண்டிகோ விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன. எனவே கடந்த சில நாட்களாக பயணிகள் கடும் பாதிப்பை சந்தித்து வருகின்றனர்.

இண்டிகோ விமான நெருக்கடியால் மற்ற நிறுவனங்களின் விமான டிக்கெட்களின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இதனால், புதிதாக நிர்ணயிக்கப்பட்ட கட்டண வரம்புகளை கண்டிப்பாகக் கடைப்பிடிக்குமாறு அனைத்து விமான நிறுவனங்களுக்கும் மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பில், "தற்போதைய சிக்கல்கள் காரணமாக சில விமான நிறுவனங்கள் வழக்கத்திற்கு மாறாக அதிக விமானக் கட்டணங்களை வசூலிப்பது குறித்த விஷயங்களை சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் தீவிரமாகக் கண்காணித்து வருகிறது.

தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள கட்டண வரம்புகளை கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அனைத்து விமான நிறுவனங்களுக்கும் அதிகாரப்பூர்வ உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இயல்பு நிலைமை முழுமையாக திரும்பும் வரை கட்டணக் கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும்.

நிகழ்நேர தரவு மற்றும் விமான நிறுவனங்கள் மற்றும் ஆன்லைன் பயண தளங்களுடன் தீவிர ஒருங்கிணைப்பு மூலம் கட்டண நிலைகளை அமைச்சகம் தொடர்ந்து உன்னிப்பாகக் கண்காணிக்கும். பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளிலிருந்து ஏதேனும் மீறல் ஏற்பட்டால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இண்டிகோ விமான சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், மற்ற நிறுவனங்களின் விமான டிக்கெட்களின் விலை அதிர்ச்சியூட்டும் வகையில் அதிகரித்தது. இதனால் டெல்லி, மும்பை, கொல்கத்தா மற்றும் பெங்களூரு போன்ற பெருநகரங்களுக்கு உள்நாட்டு விமானக் கட்டணங்கள் மூன்று முதல் நான்கு மடங்காக அதிகரித்தன.

எடுத்துக்காட்டாக, இடைவிடாத டெல்லி - மும்பை விமானத்திற்கான டிக்கெட் விலை ரூ.65,460 ஆக உயர்ந்தன. எகானமி - கிளாஸ் கொல்கத்தா - மும்பை விமான டிக்கெட் ரூ.90,000 ஆகவும், பெங்களூரு - புது டெல்லி கட்டணம் ரூ.88,000 ஆகவும் உயர்ந்துள்ளன.

## "அயோத்தியை அடுத்து காசி, மதுரா மீதுதான் எங்கள் கவனம்..." - யோகி ஆதித்யநாத்

**லக்னோ, டிச.7:**

"அயோத்தி ராம ஜென்ம பூமி விவகாரத்தை அடுத்து, காசி மற்றும் மதுராவில் உள்ள சர்ச்சைக்குரிய மசூதிகளுக்கு எதிராகவும் எங்கள் கவனம் இருக்கும்" என்று யோகி ஆதித்யாநாத் தெரிவித்துள்ளார்.

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் நிகழ்ச்சியில் பங்கேற்ற உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யாநாத், பின்னர் பல்வேறு கேள்வகளுக்குப் பதில் அளித்தார். அப்போது, அயோத்திக்குப் பிறகு, காசி, மதுரா விவகாரங்கள் எழுப்பப்படுமா என்ற கேள்விக்கு, "நாங்கள் எல்லா இடங்களுக்கும் செல்வோம். அங்கு (காசி மற்றும் மதுரா) நாங்கள் ஏற்கெனவே சென்றுவிட்டோம்" என அவர் தெரிவித்தார்.

உலகப் புகழ்பெற்ற காசி விஸ்வநாதர் கோயிலை ஒட்டி ஞானவாபி மசூதி உள்ளது. இந்த மசூதி, கோயில் நிலத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டதாக வழக்கு உள்ளது. இதே போல், கிருஷ்ணர் பிறந்த மதுராவில் உள்ள கோயிலை ஒட்டி ஷாஹி ஈத்கா மசூதி உள்ளது. இந்த மசூதியும், கிருஷ்ணர் கோயிலுக்குச் சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டதாக வழக்கு உள்ளது.

இவ்விரு பகுதிகளில் இருந்தும் இவ்விரு மசூதிகளும் அகற்றப்பட வேண்டும் என கோரி இந்துக்கள் தரப்பில் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.

## வங்கி மோசடி வழக்கில் அனில் அம்பானி குழுமத்தின் ரூ.1,120 கோடி சொத்து முடக்கம்



**புதுடெல்லி, டிச.7:**

கடந்த 2017-ம் ஆண்டு முதல் 2019-ம் ஆண்டு வரை அனில் அம்பானிக்கு சொந்தமான நிறுவனங்களில் யெஸ் வங்கி ரூ.2,965 கோடி முதலீடு செய்தது. பின்னர் இந்த முதலீடு வாராக் கடன்களாக மாறின.

இதுகுறித்து நடத்தப்பட்ட விசாரணையில் ரூ.11,000 கோடி பொது நிதி, யெஸ் வங்கி மூலமாக அனில் அம்பானி குழுமத்தின் நிதி நிறுவனங்களுக்கு வந்துள்ளது தெரியவந்தது. இதையடுத்து அனில் அம்பானியின் 18 சொத்துக்களை அமலாக்கத் துறை தற்போது முடக்கியது. இவற்றின் மதிப்பு ரூ.1,120 கோடி ஆகும். கடந்த 2010 முதல் 2012-ம் ஆண்டு வரை ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம் ரூ.40,185 கோடி கடன் பெற்று அதை தவறாக பயன்படுத்தியது. இந்த முறைகேடுகளையும் அமலாக்கத்துறை விசாரித்து அனில் அம்பானியின் ரிலையன்ஸ் குழுமத்துக்கு சொந்தமான ரூ.8,997 கோடி மதிப்பிலான சொத்துக்களை ஏற்கெனவே முடக்கியுள்ளது. தற்போது முடக்கப்பட்ட ரூ.1,120 கோடி சொத்துக்களையும் சேர்த்து மொத்தம் ரூ.10,117 கோடி மதிப்பிலான சொத்துக்களை அமலாக்கத்துறை முடக்கியுள்ளது.

## "புதின் வருகை இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை பாதிக்காது" - ஜெய்சங்கர்



**புதுடெல்லி, டிச.7:**

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினின் இரண்டு நாள் இந்திய பயணம், நடந்து வரும் இந்தியா - அமெரிக்க வர்த்தக பேச்சுவார்த்தைகளை சிக்கலாக்கும் என்ற கருத்தில் உடன்படவில்லை என வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் உறுதியாக தெரிவித்தார்.

இன்று நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் பேசிய ஜெய்சங்கர், " புதினின் வருகை இந்தியா - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை பாதிக்கும் என்ற கருத்தில் நான் உடன்படவில்லை. உலகின் அனைத்து முக்கிய நாடுகளுடனும் இந்தியா நல்ல உறவுகளைக் கொண்டுள்ளது. மற்ற நாடுகளுடன் நமது உறவுகளை எவ்வாறு வளர்த்துக் கொள்கிறோம் என்பதை எந்த நாடும் எதிர்பார்ப்பது ஒரு நியாயமான விஷயம் அல்ல. ஏனென்றால் நினைவில் கொள்ளுங்கள், மற்ற நாடுகளும் அதையே உங்களிடம் எதிர்பார்க்கலாம்.

எங்களுக்கு பல நாடுகளுடன் உறவுகள் உள்ளன, எங்களுக்கு தேர்வு சுதந்திரம் உள்ளது. மேலும் நாங்கள் மூலோபாய சுயாட்சி பற்றி பேசுகிறோம் என்பதை எப்போதும் தெளிவுபடுத்தியுள்ளோம், அது தொடர்கிறது.

அமெரிக்காவில் ஒவ்வொரு அரசாங்கமும் ஒவ்வொரு அமெரிக்க அதிபரும் உலகை அணுகுவதற்கு ஒரு அணுகுமுறையை கொண்டுள்ளனர். அதிபர் ட்ரம்ப்பின் விஷயத்தில், முன்பு இருந்தவர்களை விடவும் அவரின் அணுகுமுறை முற்றிலும் வேறுபட்டது என்பதை நான் உங்களிடம் ஒப்புக்கொள்ள முடியும்.

இப்போது எங்களுடைய உறவில் முடங்கிப்போன பல சிக்கல்கள் உள்ளன. சிக்கல்களை சரிசெய்ய முயற்சிக்கிறோம். எங்கள் வர்த்தக நலன்களை மேம்படுத்தும் ஒரு புள்ளி இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். தொழிலாளர்கள், விவசாயிகள், சிறு வணிகங்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கில் தீவிரமாக பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது.

இருதரப்பு வர்த்தக ஒப்பந்தங்களைத் தொடரும்போது இந்தியாவின் முக்கிய பொருளாதார நலன்களைப் பாதுகாப்பதில் மிகவும் விவேகத்துடன் செயல்படுகிறோம். இந்த காலண்டர் ஆண்டிற்குள் ஒரு தீர்வைக் காண வேண்டும் என்று நாங்கள் மிகவும் நம்பிக்கையுடன் இருக்கிறோம்" என்றார்.

## "எஸ்ஐஆரை தடுத்திருந்தால் மே.வங்கத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலாகியிருக்கும்" - மம்தா




**கொல்கத்தா, டிச.7:**

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் அமல்படுத்தப்படாதிருந்தால் மேற்கு வங்கத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டிருக்கும் என்று அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் சிறப்ப தீவிர திருத்தத்தை (எஸ்ஐஆர்) தொடக்கத்தில் கடுமையாக எதிர்த்தவர் மம்தா பானர்ஜி. எனினும், பின்னர் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு எதிர்ப்பைக் கைவிட்டார். இந்நிலையில், முர்ஷிதாபாத் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய முதல்வர் மம்தா பானர்ஜி, "எஸ்ஐஆர் அமல்படுத்தப்படாதிருந்தால் மேற்கு வங்கத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டிருக்கும். வாக்களிப்பு இல்லாமல் இதைச் செய்திருப்பார்கள். அமித் ஷாவின் தந்திரம் உங்களுக்குப் புரிகிறதா?. நாங்கள் அவ்வளவு முட்டாள்கள் இல்லை. நாங்கள் அதைச் செய்வோம், போராடுவோம், வெற்றி பெறுவோம். எஸ்ஐஆர் குறித்து நீங்கள் (மக்கள்) அச்சம் கொள்ள வேண்டாம். நீங்கள் உங்கள் ஆவணங்களைச் சமர்ப்பியுங்கள்." என தெரிவித்தார்.

# டெல்லியில் டிச.10-ல் தொடங்குகிறது இந்திய - அமெரிக்க வர்த்தக பேச்சுவார்த்தை !

**புதுடெல்லி, டிச.7:**

இந்தியா - அமெரிக்கா இடையே இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தை வரும் 10-ம் தேதி டெல்லியில் தொடங்க இருப்பதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சக வட்டாரங்கள் அளித்துள்ள தகவலின்படி, இந்தியா - அமெரிக்கா இடையே இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்க வர்த்தக பிரதிநிதி ரிக் ஸ்விட்சர் தலைமையிலான குழு இந்தியா வர உள்ளது. இக்குழு, இந்தியாவின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் இணைச் செயலாளர் தர்பன் ஜெயின் தலைமையிலான குழுவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறது. இந்த பேச்சுவார்த்தை புதுடெல்லியில் வரும் 10ம் தேதி முதல் 12ம் தேதி வரை நடைபெறும். இரு நாடுகளுக்கும் இடையே இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுவதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதே இந்த சந்திப்புகளின் நோக்கமாக இருக்கும். இந்த வர்த்தக ஒப்பந்தம் பல கட்டங்களாக நிகழும் என்றும், இதன் முதல் கட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இந்திய வர்த்தக செயலாளர் ராஜேஷ் அகர்வால் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

நவ. 28ம் தேதி FICCI-ன் ஆண்டு பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ராஜேஷ் அகர்வால், உலகளாவிய வர்த்தக நிலைமைகளில் மாற்றங்கள் இருந்தபோதிலும் பேச்சுவார்த்தைகள் கணிசமாக முன்னேறியுள்ளன. இந்த காலண்டர் ஆண்டுக்குள் ஒரு தீர்வைக் காண வேண்டும் என்று நாங்கள் மிகுந்த விருப்பத்துடனும் நம்பிக்கையுடனும் இருக்கிறோம் என தெரிவித்திருந்தார்.

அமெரிக்கப் பொருட்களுக்கு அதிக இறக்குமதி வரி விதிக்கும் நாடுகளுக்கு இணையான வரி விதிக்கப்படும் எனக் கூறிய அந்நாட்டின் அதிபர் டொனால்டு ட்ரம்ப், பல்வேறு நாடுகளுக்கான இறக்குமதி வரியை உயர்த்தினார்.

இந்தியப் பொருட்களுக்கான இறக்குமதி வரியையும் 25% ஆக உயர்த்துவதாக அவர் அறிவித்தார். இந்த அறிவிப்பு ஆகஸ்ட் 1-ம் தேதி முதல் அமலில் உள்ளது. இதனைத் தொடர்ந்து ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள் வாங்குவதற்காக கூடுதலாக இந்தியாவுக்கு 25% வரியை ட்ரம்ப் விதித்தார். இதன்மூலம், இந்தியப் பொருட்களுக்கு அமெரிக்கா 50% வரியை விதிக்கிறது.

அமெரிக்காவுடன் இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன. தற்போது இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம் 191 பில்லியன் டாலராக உள்ளது. இதை வரும் 2030-க்குள் 500 பில்லியன் டாலராக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தியா தனது ஏற்றுமதியை ஊக்குவிக்க பல்வேறு நாடுகளுடனும் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகிறது. 14 நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் (FREE TRADE AGREEMENTS) ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆறு நாடுகளுடன் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## விளையாட்டு செய்திகள்

### உலகக்கோப்பை ஹாக்கி இந்தியா (தமிழ்நாடு) 2025 அரையிறுதியில் ஸ்பெயின்

**சென்னை, டிச.7:**

21 வயதிற்குட்பட்டோருக்கான ஆடவர் இளை யோர் உலகக்கோப்பை ஹாக்கி தொடரின், 14ஆவது சீசன் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களான சென்னை மற்றும் மதுரையில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரின் லீக் ஆட்டங்களின் முடிவில் இந்தியா, பெல்ஜியம், அர்ஜெண்டினா, நெதர்லாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், நியூஸிலாந்து, ஸ்பெயின் அணிகள் காலிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றன.

இந்நிலையில், வெள்ளியன்று சென்னை ராதாகிருஷ்ணன் மைதானத்தில் காலிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. முதல் காலிறுதி ஆட்டத்தில் நியூஸி லாந்து - ஸ்பெயின் அணிகள் மோதின. முதல் கால் பகுதியிலேயே 3 கோல்கள் விளாசி ஸ்பெயின் பிரம்மாண்ட முன்னிலை பெற்றது. எனினும் பதிலுக்கு கோலடிக்க நியூஸி லாந்து அணி வீரர்கள் அதிரடியாக விளையாடினர். ஆனால் கடைசி கால்பகுதியில் 3 கோல்கள் நியூஸி லாந்து அணி அடிக்க, மேலும் ஒரு கோலடித்து ஸ்பெயின் அணி 4-3 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது. வெற்றிக்காக கடுமையாக போராடிய நியூஸிலாந்து அணி பதக்க பிரிவில் இருந்து வெளியேறியது. 2ஆவது காலிறுதி ஆட்டத்தில் ஜெர்மனி - பிரான்ஸ் அணிகள் மோதின. இரு அணிகளும் பலம் வாய்ந்தவை என்ற நிலையில், ஆட்டத்தின் ஒவ்வொரு நிமிடமும் அனல் பறந்தது. பெனால்டி சூட் அவுட் நீண்ட இந்த ஆட்டத்தில் 2- 2 (3-1) என்ற கோல் கணக்கில் ஜெர்மனி அபார வெற்றி பெற்று, அரையிறுதிக்கு முன்னேறியது.

### மகளிர் இளையோர் உலகக்கோப்பை ஹாக்கி சிலி (சாண்டியாகோ) - 2025 வேல்ஸ் அணி வெற்றி

மகளிர் இளையோர் உலகக் கோப்பை ஹாக்கி தொடரின், 11ஆவது சீசன் தென் அமெரிக்க நாடான சிலியின் தலைநகர் சாண்டியாகோவில் நடைபெற்று வருகிறது. டிசம்பர் 1 முதல் 13ஆம் தேதி வரை நடைபெறும் இந்த தொடரில் இந்தியா மற்றும் போட்டியை நடத்தும் சிலி உட்பட 24 நாடுகள் பங்கேற்றுள்ளன. இந்நிலையில், இந்த தொடரின் 5ஆவது நாளான வெள்ளியன்று நடைபெற்ற 22ஆவது லீக் ஆட்டத்தில் ஜிம்பாப்வே - வேல்ஸ் (குரூப் பி) அணிகள் மோதின. தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய வேல்ஸ் அணி 3-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற 23ஆவது லீக் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 4-2 என்ற கோல் கணக்கில் (குரூப் இ) ஸ்பெயின் அணியை புரட்டியெடுத்தது. அர்ஜெண்டினா - பெல்ஜி யம் (குரூப் பி) அணிகள் மோதிய ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் டிராவில் நிறைவடைந்தது.

### 2025-ல் கூகுளில் அதிகம் தேடப்பட்ட நபர்: உலக அளவில் வைபவ் சூர்யவன்ஷிக்கு 6-ம் இடம்!



**சென்னை, டிச.7:**

நடப்பு ஆண்டில் கூகுளில் அதிகம் தேடப்பட்ட நபர்களின் (PEOPLE) பட்டியலில் உலக அளவில் இந்தியாவை சேர்ந்த 14 வயது இளம் கிரிக்கெட் வீரர் வைபவ் சூர்யவன்ஷி 6-ம் இடம் பிடித்துள்ளார். இந்திய அளவில் அவர் முதலிடத்தில் உள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஐபிஎல் ஏலத்தில் ரூ.1.1 கோடிக்கு அவரை ராஜஸ்தான் ராயல்ஸ் அணி ஏலத்தில் ஒப்பந்தம் செய்தது. அதற்கு முன்பு ஆஸ்திரேலிய யு19 அணிக்கு எதிராக 58 பந்துகளில் சதம் விளாசினார். கடந்த ஐபிஎல் சீசனில் 7 போட்டிகளில் விளையாடி மொத்தம் 252 ரன்கள் எடுத்தார். இதில் 1 சதம், 1 அரை சதமும் பதிவு செய்தார். குஜராத் அணிக்கு எதிராக 35 பந்துகளில் சதம் பதிவு செய்து அசத்தினார்.

பின்னர் இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் சென்ற இந்திய யு19 அணியில் இடம்பெற்று, இளையோர் ஒருநாள் போட்டியில் 52 பந்துகளில் சதம் விளாசி அசத்தினார். இது அந்த பிரிவில் அதிவேக சதமாக அமைந்தது. பின்னர் வளர்ந்து வரும் நட்சத்திரங்களுக்கான ஆசிய கோப்பை தொடரிலும் சிறப்பாக ஆடினார். இந்த தொடரில் 4 இன்னிங்ஸில் 239 ரன்கள் எடுத்திருந்தார். இதில் ஐக்கிய அரபு அமீரக அணிக்கு எதிராக 32 பந்துகளில் சதம் விளாசி இருந்தார்.

அண்மையில் சையது முஸ்டாக் அலி டி 20 கிரிக்கெட் தொடரில் மகாராஷ்டிரா அணி உடனான ஆட்டத்தில் பிஹார் அணிக்காக வைபவ் சூர்யவன்ஷி விளையாடினார். இதில் 61 பந்துகளில், 7 சிக்ஸர்கள், 7 பவுண்டரிகளுடன் சதம் விளாசினார்.

இதன் மூலம் சையது முஸ்டாக் அலி டி20 தொடரில் இளம் வயதில் சதம் அடித்த வீரர் என்ற சாதனையை படைத்தார். அவருக்கு 14 வயது 250 நாட்கள் ஆகிறது. இந்திய கிரிக்கெட்டின் வருங்கால நம்பிக்கை நட்சத்திரமாக கருதப்படும் அவர், இப்போது நடப்பு ஆண்டில் கூகுள் தளத்தில் அதிகம் தேடப்பட்ட நபர்களில் உலக அளவில் 6-ம் இடத்தை பிடித்துள்ளார்.

# ஃபிபாவின் ‘அமைதிப் பரிசு’ பெற்றார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்!



**வாஷிங்டன், டிச.7:**

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்புக்கு ஃபிபா (FIFA) வின் அமைதிப் பரிசு வழங்கப்பட்டது. நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஃபிபா உலகக்கோப்பை கால்பந்து போட்டிக்கான போட்டிகள் அடுத்த ஆண்டு கனடா, மெக்சிகோ, அமெரிக்காவில் நடைபெறவுள்ளது.

நோபல் அமைதிப் பரிசுக்காக பாகிஸ்தான், இஸ்ரேல் உள்ளிட்ட சில நாடுகள் டொனால்டு ட்ரம்பை பரிந்துரை செய்தன. சுமார் 10 போர்களை நிறுத்தியதாக சொல்லிய ட்ரம்ப் வெளிப்படையாக அமைதிக்கான நோபல் பரிசுக்காக பிரச்சாரம் செய்தார். ஆனால் இறுதியில் அமைதிக்கான நோபல் பரிசு வெனிசுலா எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோவுக்கு வழங்கப்பட்டது. அவர் பரிசைப் பெற்ற சிறிது நேரத்திலேயே, எங்கள் நோக்கத்திற்கான தீர்க்கமான ஆதரவுக்காக ட்ரம்புக்கு இப்பரிசை அர்ப்பணிப்பதாகக் கூறினார்.

இந்தச் சூழலில் புதிதாக உருவாக்கப்பட்ட ஃபிபா (FIFA) அமைதிப் பரிசு ட்ரம்ப்புக்கு நேற்று வழங்கப்பட்டது. ட்ரம்ப்பும், ஃபிபா தலைவர் கியானி இன்பான்டினோவும் நெருங்கிய நண்பர்கள் ஆவர். காசாவில் போர்நிறுத்தத்தை ஏற்படுத்தியதற்காக ட்ரம்ப், நோபல் அமைதிப் பரிசை வென்றிருக்க வேண்டும் என்று தான் நினைத்ததாக இன்பான்டினோ முன்னதாக தெரிவித்திருந்தார். ட்ரம்ப்புக்கு இந்த பரிசை வழங்கிய இன்பான்டினோ, “நீங்கள் அணியக்கூடிய உங்களுக்கான அழகான பதக்கம்” என்று கூறினார். இதனையடுத்து, ட்ரம்ப் உடனடியாக அந்தப் பதக்கத்தை தனது கழுத்தில் அணிந்தார். “உலகம் முழுவதும் அமைதி மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவதற்கான அமெரிக்க அதிபரின் நடவடிக்கைகளுக்காக இந்த விருது வழங்கப்படுகிறது” என அவருக்கு வழங்கப்பட்ட சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருந்தது. உலகை உயர்த்திப் பிடிக்கும் கைகளை சித்தரிக்கும் தங்கக் கோப்பையும் அவருக்கு வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து பேசிய இன்பான்டினோ, “இதுதான் ஒரு தலைவரிடமிருந்து, மக்களைப் பற்றி அக்கறை கொண்ட ஒரு தலைவரிடமிருந்து நாங்கள் விரும்புகிறோம். இது உங்கள் பரிசு, இது உங்கள் அமைதிப் பரிசு” என்று கூறினார்.

இந்த நிகழ்வில், தனது மனைவி மெலனியா ட்ரம்ப் உட்பட தனது குடும்பத்தினருக்கு நன்றி தெரிவித்த ட்ரம்ப், “இது உண்மையிலேயே என் வாழ்க்கையின் மிகப்பெரிய கவுரவங்களில் ஒன்றாகும்” என்று கூறினார்.

அமைதிக்கான அசாதாரண நடவடிக்கைகளை எடுத்து, அதன் மூலம் உலகம் முழுவதும் மக்களை ஒன்றிணைத்த தனிநபர்களுக்கு வெகுமதி அளிக்கும் ஒன்றாக ஃபிபா இந்தப் பரிசு பற்றி குறிப்பிட்டுள்ளது.

## சொத்துக்களை கைப்பற்றினால் பதிலடி : ரஷ்யா எச்சரிக்கை

**நியூயார்க், டிச.7:**

உக்ரைன்-ரஷ்ய போர் துவங்கிய பிறகு ரஷ்யாவின் பல கோடி மதிப்புடைய சொத்துக்களை அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் முடக்கி வைத்துள்ளன. இந்த சொத்துக்களை திருடுவதற்காக ஐரோப்பிய நாடுகள் திட்டமிட்டு வருகின்றன. உக்ரைனுக்கு ஆயுதம் வழங்க அப்பணத்தை பயன்படுத்தும் வகையில் ஐரோப்பிய ஆணைய தலைவர் உர்சுலா திட்டம் ஒன்றை முன்மொழிந்துள்ளார். இந்நிலையில் ரஷ்ய சொத்துக்களைக் கைப்பற்றினால், அதற்குப் பதிலடி கொடுக்கும் என ரஷ்ய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மரியா ஜஹரோவா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## காசாவுக்கான புதிய திட்டம் : டிசம்பர் இறுதிக்குள் அறிவிப்பு?



அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், காசாவுக்கான புதிய நிர்வாக அமைப்பை அறிவிக்கத் தயாராகி வருவதாகவும், டிசம்பர் மாத இறுதிக்குள் அறிவிக்க வாய்ப்புள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தத்தின் இரண்டாம் கட்டத்தில் காசாவை நிர்வகிக்க டிரம்ப் தலைமையில் அமைதி வாரியம் என்ற அமைப்பு உருவாக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது. இத்திட்டப்படி இஸ்ரேல் ஆக்கிரமிப்பில் இருக்கும் பாலஸ்தீனப் பகுதிகளுக்குள் சர்வதேசப் படை (ISF) அனுப்பப்படும். எனினும் காசாவை தனது ரியல் எஸ்டேட் தொழிலுக்காக டிரம்ப் பயன்படுத்தவும் கூடும்.

## சீனா சென்ற மக்ரோன் : போர் குறித்து பேச்சுவார்த்தை

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் அரசு முறைப்பயணமாக சீனா சென்றிருந்தார். இந்த பயணத்தில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்குடன் உக்ரைன் போர் மற்றும் வர்த்தகம் குறித்து அவர் பேச்சுவார்த்தை நடத்தியதாகக் கூறப்படுகிறது. உக்ரைன்-ரஷ்ய போரை முடிவுக்குக் கொண்டு வர விடாமல் ஐரோப்பிய நாடுகள் முரண்பட்டுக்கொண்டுள்ள நிலையில் ரஷ்யாவின் நெருங்கிய நட்பு நாடான சீனாவுக்கு மக்ரோன் சென்றுள்ளது முக்கிய அரசியல் நகர்வாக பார்க்கப்படுகிறது.

## இலங்கை வெள்ளம் : 486 பேர் பலி



இலங்கையில் கடந்த நவம்பர் 16 ஆம் தேதி முதல் பெய்த கனமழை வெள்ளம் மற்றும் ‘டிட்வா’ புயல் காரணமாக இதுவரை 486 பேர் பலியாகியுள்ளனர். வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 341 பேர் காணா மல் போயுள்ளனர். இந்த சேதத்தில் சுமார் 18 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 1.88 லட்சம் மக்கள் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகள் துண்டிக்கப்பட்டு உள் கட்டமைப்புகள் சிதைந்ததால், இலங்கைக்குச் சுமார் 700 கோடி டாலர் வரை பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் முப்படை தலைமை தளபதியானார் அசிம் முனீர்



**இஸ்லாமாபாத், டிச.7:**

*பாகிஸ்தான் ராணுவத் தளபதியாக அசிம் முனீர் தற்போது பதவி வகித்து வருகிறார். அவரை பாகிஸ்தானின் முப்படைத் தலைமை தளபதியாக (சிடிஎஃப்) நியமித்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.*

*இதற்கான ஒப்புதலை பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி ஜர்தாரி வழங்கியுள்ளார். இந்தியாவில் முப்படைத் தலைமைத் தளபதி என்ற பொறுப்பு சில ஆண்டுகளுக்கு முன்னர் புதிதாக உருவாக்கப்பட்டது.*

*இந்தியாவுக்கு சவால் அளிக்க இதுபோன்ற பதவியை பாகிஸ்தான் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.*

*இதன்மூலம் பாகிஸ்தான் நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் உயர் பொறுப்புக்கு அசிம் முனீர் வந்துள்ளார்.*

*மேலும் நாட்டின் ஏவுகணைகள், அணு ஆயுதங்களைக் கையாளும் பொறுப்பும் அசிம் முனீரிடம் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.*

# அமெரிக்கா: தீ விபத்தில் சிக்கி இந்திய மாணவி பலி



**வாஷிங்டன், டிச.7:**

*தெலுங்கானா மாநிலம் ஐதராபாத் அருகே ஜோடிமெட்லா பகுதியை சேர்ந்தவர் சஹாஜா உடுமலா (வயது 24). இவர் அமெரிக்காவின் நியூயார்க் மாகாணம் அல்பெனி நகரில் உள்ள பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டப்படிப்பு படித்து வந்தார். அவர் அல்பெனி நகரின் வெஸ்ட் அவன்யூ பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் சக மாணவிகளுடன் வாடகைக்கு வீடு எடுத்து தங்கி இருந்தார்.*

*இந்நிலையில், சஹாஜா தங்கி இருந்த வீட்டில் நேற்று முன் தினம் காலை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இந்த தீ விபத்தில் சஹாஜா உள்பட சக மாணவிகள் சிக்கிக்கொண்டனர். தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் வீட்டிற்குள் சிக்கியிருந்தவர்களை போராடி மீட்டனர். இந்த தீ விபத்தில் சஹாஜாவுக்கு படுகாயம் ஏற்பட்டது. சக மாணவிகளுக்கு லேசான காயம் ஏற்பட்டது.*

*இதையடுத்து அனைவரும் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் சஹாஜாவுக்கு 90 சதவீத தீக்காயங்கள் ஏற்பட்டதால் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால், சஹாஜா சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார். சஹாஜாவின் உடலை இந்தியாவுக்கு கொண்டு வர வெளியுறவுத்துறை அமைச்சகம் முயற்சி எடுத்துள்ளது. அதேவேளை, இந்த தீ விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.*

## அம்பேத்கர்-கலைஞர் பெயரில் லண்டன் பல்கலைக்கழகத்தில் ஆய்வுப் படிப்பு: தமிழ்நாட்டு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

**லண்டன், டிச.7:**

லண்டன் பல்கலைக்கழகத்தின் பிரிவான எஸ்.ஓ.ஏ.எஸ். (கிழக்கத்திய மற்றும் ஆப்பிரிக்க ஆய்வுகளுக்கான பள்ளி) ஒரு புதிய ஆய்வுப் படிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கு அம்பேத்கர்-கலைஞர் சமூக நீதி மற்றும் கூட்டாட்சி வருகை ஆய்வாளர் படிப்பு (AMBEDKAR KALAIGNAR VISITING FELLOWSHIP FOR SOCIAL JUSTICE AND FEDERALISM) என்று பெயரிடப்பட்டுள்ளது.

இதன்மூலம், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் லண்டனில் மூன்று மாதங்கள் தங்கி ஆய்வு மேற்கொள்ளலாம். அம்பேத்கர் மற்றும் கலைஞரின் கண்ணியம், சமத்துவம் மற்றும் சமூகநீதிக்கான தொலைநோக்குச் சிந்தனைகளுக்கு மரியாதை செலுத்தும் விதமாக இந்த ஆய்வுப் படிப்பு உருவாக்கப்பட்டுள்ளது.



சபரீசன் வேதமூர்த்தி நிதியுதவியுடன் இந்த ஆய்வுப் படிப்பு லண்டன் பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இவர் இதற்கு முன் தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் மகள் செந்தாமரையுடன் இணைந்து, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் கலைஞர் பெயரில் ஒரு ஆய்வுப் படிப்பை உருவாக்கி உள்ளார்.

திராவிடம், ஜனநாயகம், கூட்டாட்சி, சமூக நீதி, மனித உரிமைகள் போன்ற தலைப்புகளில் ஆய்வுகளை மேற்கொள்ள விரும்பும் ஆய்வாளர்கள், பத்திரிகையாளர்கள், வழக்கறிஞர்கள், கொள்கை வகுப்பாளர்கள், சமூக ஆர்வலர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் விண்ணப்பிக்கலாம்.

தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு, குறிப்பாக சமூகத்தில் விளிம்புநிலையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இந்த ஆய்வுப் படிப்புக்குத் தேவையான பயணச் செலவு, விசா கட்டணம், மூன்று மாதங்களுக்கான ஸ்டைபெண்ட், பல்கலைக்கழகக் கட்டணங்கள் என அனைத்துச் செலவுகளுக்கும் நிதியுதவி அளிக்கப்படும். இந்த நிதியுதவியின் மூலம், ஆய்வாளர்கள் லண்டனில் தங்கி, தங்களது முழு கவனத்தையும் ஆய்வுப் பணிகளில் செலுத்த முடியும்.

ஆய்வு மாணவர்கள் எஸ்.ஓ.ஏ.எஸ். பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகளில் முழுமையாகப் பங்கெடுப்பார்கள். அவர்களுக்கு தெற்காசிய நிறுவனத்தின் இயக்குநரின் வழிகாட்டுதல்கள் கிடைக்கும். அவர்கள் வகுப்புகள், கருத்தரங்குகள், பயிலரங்குகளில் கலந்து கொள்வார்கள். படிப்பு முடிந்ததும் அவர்களுக்கு அதற்கான சான்றிதழ் வழங்கப்படும். .

## ஆப்கானிஸ்தான் மீது பாகிஸ்தான் திடீர் தாக்குதல் - 4 பேர் பலி

**காபுல், டிச.7:**

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் இடையே கடந்த சில ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வருகிறது. குறிப்பாக, ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள கைபர் பக்துவா மாகாணத்தில் தெஹ்ரிக் இ தலிபான் என்ற பயங்கரவாத அமைப்பு செயல்பட்டு வருகிறது.

இந்த அமைப்பிற்கு ஆப்கானிஸ்தானின் தலிபான்கள் ஆதரவு அளிப்பதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டி வருகிறது. மேலும், இந்த பயங்கரவாதிகளை ஒழிப்பதாக கூறி ஆப்கானிஸ்தான் மீது பாகிஸ்தான் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது. இது இருநாட்டு மோதலாக அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் எல்லையில் நேற்று பாகிஸ்தான் திடீர் தாக்குதல் நடத்தியது. ஆப்கானிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் படையினர் திடீர் துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் ஆப்கானியர்கள் 4 பேர் உயிரிழந்தனர்.

இந்த பயங்கரவாத அமைப்புகள் அவ்வப்போது பாகிஸ்தானில் பாதுகாப்புப்படையினர், பொதுமக்களை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

# புதினின் ‘பறக்கும் அதிபர் மாளிகை’ - அதிநவீன சொகுசு விமான சிறப்பு அம்சங்கள்




**புதுடெல்லி, டிச.7:**

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின், இலுயுஷின் ஐஎல் - 96 300 பியூ என்ற அதிநவீன சொகுசு விமானத்தை பயன்படுத்தி வருகிறார். இந்த விமானம், ‘பறக்கும் அதிபர் மாளிகை’ என்று அழைக்கப்படுகிறது.

இதில் 4 இன்ஜின்கள் பொருத்தப்பட்டு உள்ளன. ஒருமுறை எரிபொருளை நிரப்பினால் 13,000 கி.மீ. வரை விமானம் தரையிறங்காமல் பறக்க முடியும். நடுவானிலேயே விமானத்துக்கு எரிபொருளை நிரப்ப முடியும்.

அதிபர் புதினின் விமானத்தில் மிகப் பெரிய கருத்தரங்கு கூடம், பல்வேறு அறைகள், சொகுசு படுக்கை அறை, தங்க முலாம் பூசப்பட்ட குளியல் அறை, மதுபான பார், உடற்பயிற்சிக்கூடம், மருத்துவ சிகிச்சை அறை உள்ளிட்ட பல்வேறு வசதிகள் உள்ளன.

எதிரிகளின் தாக்குதல்களை முறியடிப்பதற்காக விமானத்தில் அதிநவீன ஏவுகணைகள் பொருத்தப்பட்டு உள்ளன. இந்த விமானத்தில் பறந்தபடியே அணு குண்டு தாக்குதல் நடத்த அதிபர் புதினால் உத்தரவிட முடியும்.

இதற்காக விமானத்தில் சிறப்பு கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு இருக்கிறது. தகவல் தொடர்புக்காக அதிநவீன செயற்கைக்கோள் தொலைபேசி வசதி செய்யப்பட்டு இருக்கிறது. தேவைப்பட்டால் எதிரிகளின் ரேடார் கண்காணிப்பில் இருந்து விமானத்தை மறைந்து போக செய்ய முடியும்.

இந்த விமானம் 55.35 மீட்டர் நீளம், 17.55 மீட்டர் உயரம் கொண்டது. இதன் எடை 250 டன் ஆகும். விமானத்தில் ஒரே நேரத்தில் 262 பேர் வரை பயணம் செய்ய முடியும்.

குறிப்பாக அதிபர் புதினின் பாதுகாவலர்கள், அதிபர் மாளிகை அதிகாரிகள், மூத்த மருத்துவர்கள் உட்பட சுமார் 100 பேர் விமானத்தில் பயணம் மேற்கொள்வார்கள். புதினின் விமானத்துக்கு பாதுகாப்புக்காக சுகோய் 35 போர் விமானங்கள் இருபுறமும் அணிவகுத்து செல்லும்.

ஒருவேளை புதின் செல்லும் விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டால் ரஷ்யாவின் விமானப் படை தளங்கள் அல்லது நட்பு நாடுகளின் விமானப் படை தளங்களில் தரையிறக்கப்படும்.

ஒவ்வொரு பயணத்தின்போது இலுயுஷின் ஐஎல் - 96 - 300 பியூ ரகத்தை சேர்ந்த மற்றொரு சொகுசு விமானமும் உடன் செல்லும். அந்த மாற்று விமானத்தில் அதிபர் புதின் பயணத்தை தொடர்வார்.

இந்திய சுற்றுப் பயணத்துக்காக நேற்று முன்தினம் ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் இருந்து இலுயுஷின் ஐஎல் - 96 - 300 பியூ விமானத்தில் அதிபர் புதின் டெல்லிக்கு புறப்பட்டார். அப்போது உலகம் முழுவதும் இருந்து லட்சக்கணக்கானோர் அவரது விமானம் செல்லும் பாதையை ரேடாரில் கண்காணித்தனர். அவரது விமானம் ரஷ்யா, கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், தஜிகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் வான்பரப்பு வழியாக இந்திய தலைநகர் டெல்லியை வந்தடைந்தது. அவர் எந்த நாட்டுக்கு சென்றாலும் அங்கு தங்கும் ஓட்டலின் குளியல் அறை, கழிப்பறையை பயன்படுத்துவது கிடையாது. அவருக்காக சிறப்பு குளியல் அறை, கழிப்பறையை ரஷ்ய தொழில்நுட்ப நிபுணர்கள் அமைப்பார்கள்.

ரஷ்யாவில் இருந்து கொண்டு வரப்படும் உணவு பொருள்கள், அழகு சாதன பொருட்களை மட்டுமே அவர் பயன்படுத்துவார். அவரின் பயணத்துக்காக ஆரஸ் செனட் ரக சொகுசு கார், சரக்கு விமானத்தில் கொண்டு வரப்படும். வெளிநாட்டு பயணத்தின் போது அதிபர் புதினை சுற்றி 4 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும்.